ஊரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12;

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.




புத்தகம் 19 | திருவள்ளுவர் ஆண்டு 1996 வைகாசித் திங்கள் 17-ம் நாள் (30—5—1965) ஞாயிற்றுக்கிழமை முஹர்ரம 28 இதழ் 1

# த. கா. நடவடிக்கைக்கு சுதந்திரக் கட்சி ஆதரவு

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிரான சதியில் தமிழ் காங்கிரசார் தீவிரமாக இறங்கியிருப்பதாகத் தெரிகிறது. தமிழ் காங்கிரசாரின் இந்த நடவடிக்கைக்கு சுதந்திரக் கட்சியினரும் பூரண ஆதரவு கொடுத்து வருகிறார்களாம். யாழ்ப்பாண நகர முதல்வர் திரு. எஸ். சி. மகாதேவாவைப் பதவியிலிருந்து இறக்கும் தமிழ் காங்கிரசாரின் நடவடிக்கைக்கு சுதந்திரக் கட்சி பூரண ஒத்துழைப்புக் கொடுத்திருப்பதாக நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. சமசமாசக் கட்சிப் பிரமுகரான திரு. நாகராசா திரு. மகாதேவாவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிப்பதற்கும் சுதந்திரக் கட்சியின் தூண்டுதலே காரணமாம்.

## யாழ். மேயரை வீழ்த்த நடைபெறும் சதி

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் தேசிய அரசாங்கத்திற்கும் விரோதமான நடவடிக்கைகளில் தமிழ் காங்கிரஸ் இறங்கியிருப்பதாகவும், உத்தேச மாவட்ட சபை மசோதாவை முறியடிப்பதற்குச் சுதந்திரக் கட்சியின் உதவியைத் தமிழ் காங்கிரஸ் நாடியிருப்பதாகவும் சுதந்திரன் (9-5-65) ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தது வாசகர்கள் அறிந்ததே.

இப்பொழுது தமிழ் காங்கிரஸின் தமிழரசு விரோத நடவடிக்கைகள் அனைத்திற்கும் சுதந்திரக் கட்சி பூரண ஆதரவு கொடுத்து வருகிறது. யாழ்ப்பாண நகர முதல்வர் திரு. மகாதேவாவை எப்படியும் பதவியிலிருந்து இறக்கிவிட வேண்டும் என்று தமிழ் காங்கிரஸ் சில காலமாக முயன்றுவந்ததென்பது அனைவரும் அறிந்ததே. தமிழ் காங்கிரசின் இம் முயற்சிக்கு போதிய மாநகரசபை உறுப்பினர்கள் ஆரம்பத்தில் ஆதரவு கொடுக்க மறுத்துவிட்டார்களென்றும் சுதந்திரக் கட்சியின் மூலம் சில உறுப்பினர்களின் ஆதரவை தமிழ் காங்கிரஸ் இப்பொழுது பெற்றுள்ளதாகவும் தெரிகிறது.

குறிப்பாக சமசமாசக் கட்சியைச் சேர்ந்த ஒரேயொரு மாநகரசபை உறுப்பினரான திரு. நாகராசா தமிழ் காங்கிரசின் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆரம்பத்தில் எதிர்த்ததாகவும், பின்னர் சுதந்திரக் கட்சியினர் டாக்டர் பெரேரா மூலம் சமசமாச தலைமைப்பீடத்திலிருந்து தமிழ் காங்கிரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு கொடுக்கும்படி திரு. நாகராசாவுக்கு உத்தரவு பிறப்பித்ததாகவும் நம்பிக்கையான வட்டாரங்கள் கூறுகின்றன.

அண்மையில் நடைபெற்ற சுதந்திரக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டமொன்றில் பேசிய திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க 'ஓர் ஆண்டு காலத்தில் தேசிய அரசாங்கம் வீழ்ந்துவிடும் என்றும் திரு. பொன்னம்பலம் தமிழரசாரைத் தொடர்ந்து தாக்குவதினால் ஐ. தே. கட்சியினருக்குப் பெரிய பிரச்சினை தோன்றும்' என்றும் கூறியுள்ளாராம்.

திரு. பொன்னம்பலத்தின் போர்க்கோலத்திற்கும் திருமதி சிறிமாவோ

(9-ம் பக்கம் பார்க்க)

## ஒரு எம். பி. பதவியை துறக்கலாம்

ஏதிர்க் கட்சியைச் சேர்ந்த முக்கிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தமது பாராளுமன்றப் பதவியை அண்மையில் இராஜினாமாச் செய்யக் கூடுமென்று நம்பப்படுகிறது.

இந்த உறுப்பினருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள தேர்தல் மனுவிலுள்ள குற்றச்சாட்டுகளிலொன்று வேறொரு தஸ்தாவேஜு மூலம் நிரூபிக்கக் கூடிய நிலையிலிருப்பதாக இவரது வழக்கறிஞர்கள் கருதுவதால், பதவியைத் துறக்குமாறு அவருக்கு ஆலோசனை கூறியிருக்கிறார்களென அறியப்படுகிறது.

## யூன் ஐந்து தியாகிகள் தினம்

### அமிர்தலிங்கம் விளக்கம்

தமிழ் பேசும் மக்கள் தமது உரிமைப் போராட்டத்தை ஆரம்பித்த முதற் தினமாகிய யூன் ஐந்தாம் நாளை இம்முறை 'தியாகிகள் தினமா'கக் கொண்டாடும் வண்ணம் இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் ஒரு அறிக்கை மூலம் தமிழ் பேசும் மக்களை வேண்டியுள்ளார்.

சிங்களம்மட்டும் மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட யூன் 5ம் திகதியை இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் கடந்த காலங்களில் கரிநாளாக அனுட்டித்து வந்தது வாசகர்கள் அறிந்ததே. இப்பொழுது தேசிய அரசாங்கம் ஒன்றை தமிழ் பேசும்மக்களின் பிரதிநிதிகளும் சேர்ந்து உருவாக்கியிருப்பதால் இத்தினத்தை 'தியாகிகள் தினமா'கக் கொண்டாட முடிவுசெய்துள்ளார்கள்.

இத்தினத்தை யொட்டி திரு. அமிர்தலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் "தமிழ் பேசுமினத்தின் விடுதலைப்போரை ஈட்டத்தில் பங்கு கொண்டு இன்னல் பல ஏற்ற தியாகிகளையும், குறிப்பாக இனத்தின் விடுதலைக்காக இன்னுயிர் ஈர்த்த கோப்பாய் கோமான் அமரர் வன்னியசிங்கம், திருமலைத் தீரர் இராசவரோதயம், திரு. வி. ஏ. கந்தையா, திரு. த. ஏகாம்பரம், திருமலைத் தியாகி நடராசன், மலையக வீரர்கள் பிரான்சிஸ், ஐயாவு போன்றவர்களையும் 56ம் 58ம் ஆண்டு கலவரங்களில் உயிர் நீத்தவர்களையும் நினைவுபடுத்தும் நாளாக யூன் 5ம் நாளைக் கொண்டாடும் வண்ணம் தமிழ் பேசும் மக்களை இ. த. அ. கட்சியின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

(9-ம் பக்கம் பார்க்க)

# பேச்சு வார்த்தை எழுத்தில் உண்டு

## பீலிக்ஸ்சின் கேள்விகளுக்கு பிரதமர் கூறிய பதில்

தமிழரசுக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையிலான உடன்பாடு பற்றி திரு. பீலிக்ஸ் டயஸ் கடந்த 21ம் திகதி பிரதமரிடம் பாராளுமன்றத்தில் மூன்று கேள்விகளைக் கேட்டிருந்தார். அவற்றிற்கு பிரதமர் பதிலளிக்கையில் 'பேசப்பட்ட விடயங்கள் எழுத்தில் உண்டு' என்று கூறியுள்ளார். இது சம்பந்தமாக நடைபெற்ற விவாதம் வருமாறு:

தொம்பே பிரதிநிதி திரு. எப். ஆர். டயஸ். பண்டாரநாயக்க பிரதம அமைச்சரையும் பாதுகாப்பு அமைச்சரையும் கேட்ட வினா: (அ) 22-3-65-ம் தேதியின் பின்னர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துடன் அல்லது சமஷ்டிக் கட்சியுடன் அவர் ஒப்பந்தமெதற்[illegible] சாத்திட்டாரா வென்பதை அல்லது எழுத்து மூல உத்தரவாதமேதாவது அளித்தாரா வென்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) ஆமெனில், அத்தகைய உடன்படிக்கையின் அல்லது உத்தரவாதத்தின் [illegible] படுத்துவாரா? (இ) இல்லையெனில் ஏன்?

திரு. டட்லி சேனநாயக்கா கூறிய பதில் வருமாறு:

(ஆ) திரு. செல்வநாயகமும் நானும் ஒவ்வொரு கட்சித்தலைவர்கள் என்ற முறையில் பல விடயங்களையிட்டு பல சந்தர்ப்பங்களில் பேசியுள்ளோம். (ஆ) இல்லை (இ) இதன் பொறுப்பாளியென்ற முறையில் இரண்டு கட்சித் தலைவர்களுகிடையில் நடைபெற்ற விடயங்களை வெளியிட விரும்பவில்லை.

திரு. பீலிக்ஸ்டயஸ்: இப்பேச்சு வார்த்தைகள் தவிர்த்து எழுத்திலான அல்லது கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை ஏதாவது உண்டா என்று பிரதமர் கூறுவாரா? முதற் கேள்வியும் இதுவே.

திரு. டட்லி சேனநாயக்கா:— கதைக்கப்பட்ட விடயங்கள் எழுத்தில் உள்ளன.

டாக்டர் பெரேரா:— அந்த தஸ்தாவேஜைச் சமர்ப்பிக்க முடியுமா?

திரு. டட்லி சேனநாயக்கா:— இல்லை.

டாக்டர் பெரேரா:— ஏன் இல்லை? அது தனிப்பட்ட தஸ்தாவேஜு அல்லவே?

திரு. டட்லி சேனநாயக்கா:— அது தனிப்பட்ட தஸ்தாவேஜுதான், காரணம், அது தேசிய அரசாங்கம் ஏற்பட முன்னர் உருவாக்கப்பட்டது.

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்




"உலகத்துக்கு அழகாகத் தோன்றுகிற பலர், உள்ளத்தால் வெந்து அழிந்து கொண்டிருப்பது வெளியே தெரிவதில்லை. அவர்களுடைய அழகு ஒரு தடையாக இருந்து, அந்தரங்கத்தில் அவர்கள் படுகின்ற கவலைகளைப் பிறர் காண முடியாமல் மறைத்து விடுகின்றது!"

—மணிவண்ணன்

## 19. புன்னகைப் பூங்கொத்து!

நமோ தஸ்ய

பகவதோ அரஹதோ

ஸம்மாஸம்புத்தஸ்ய என்று தலைமைப் புத்தபிக்கு ஒருவர் 'வண' சொல்ல ஆரம்பிக்க அவரைத் தொடர்ந்து 'சிஷ்ய கோடி'கள்—

'புத்தம் சரணம் கச்சாமி

தம்மம் சரணம் கச்சாமி

சங்கம் சரணம் கச்சாமி'

ஒரே குரலில் கோஷிக்கத் தொடங்கினர்.

திரும்பவும் தலைமைப் பிக்கு—

நமோ தஸ்ய

பஹவதோ அரஹதோ

ஸம்மாஸம் புத்தஸ்ய' என்று கூறவும் அதைத் தொடர்ந்து 'சிஷ்ய கோடி'கள்—

'துதியம்பி புத்தம் சரணம் கச்சாமி

துதியம்பி தம்மம் சரணம் கச்சாமி

துதியம்பி சங்கம் சரணம் கச்சாமி' என்று முழக்கமிட்டனர்.

தலைமைப் புத்த பிக்குவின் வாயிலிருந்து திரும்பவும்—"நமோ தஸ்ய, பஹவதோ அரஹதோ! ஸம்மாஸம் புத்தஸ்ய' என்ற சுலோகம் பிறந்தது.

'சிஷ்ய கோடிகளும்' விடாது

'ததியம்பு புத்தம் சரணம் கச்சாமி

ததியம்பு தம்மம் சரணம் கச்சாமி

ததியம்பு சங்கம் சரணம் கச்சாமி' என முழக்கமிட்டனர்.

திரும்பவும் திரும்பவும் ஒரே மெட்டில் ஒலித்தஇந்த வேதகோஷம் கணேசனுக்குச் சலிப்பைக் கொடுத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவன் அங்கிருந்து நகரக் காரணம் இல்லை. விஹாரத்துள் வரைந்திருந்த புத்த சாதகக் கதைகளின் படங்களை மேலோட்டமாகப் பார்த்துக்கொண்டு மீண்டும் தான் முன்பு நின்ற இடத்துக்கு வந்து சேர்ந்தான் கணேசன்.

அப்பவும் தாமர குமாரி தான் மண்டியிட்டுக் கிடந்த கோலத்தைக் கலைக்கவில்லை. ரோஜாவின் இதழ்போன்ற தன் மென் இமைகளை மூடிக்கொண்டு விம்மியபடி புத்த பகவானை அஞ்சலி செய்து கொண்டிருந்தாள். மூடிய அவள் கண்களிலிருந்து முத்துச்சரம் கோத்ததுபோல் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

'தன்னை மறந்து இப்படி உருகி வழியக்கூடிய பக்தி சொட்டும் பக்குவம் பெற்றிருக்கின்றளே இந்தப்பெண்' என்று எண்ணிய போது கணேசனுக்கு ஆச்சரியமாக இருந்தது. தாமரகுமாரியின் இனிய அழகின் இரகசியத்துக்கு, இப்படி அவளிடத்தில் புதைந்து கிடந்த பக்தியுணர்வும் ஒரு காரணமோ? என எண்ணினன் கணேசன். உண்மைதான்; 'மனத்தின் வடிவம்தான்' என்ற உளவியல் சொல்லும் உண்மையின்படி, ஒருவருடைய தோற்றத்தில் கனிவும், இனிமையும் குடிகொண்டிருக்கின்றதென்றல், முதற்கண் அந்த ஒருவனுடைய உள்ளம் அழுக்கற்றதாக இருக்க வேண்டும். இந்த உள்ளத்து அழுக்கை முற்றுக அகற்றுவதற்கு அழுகை என்ற சோப்பு உபயோகமாவது போல் வேறொன்றும் உதவுவதில்லை! இந்த அழுகை பல காரணங்களுக்காகவும் நிகழலாம்—அதாவது சோப்புக்களில் பல ரகங்கள் இருப்பதைப்போல! பக்தி மேலீட்டால், துயரம் மேலீட்டால், அன்பு மேலீட்டால் நம் கண்கள் பனிக்கும் போது மனச் சுமை கழுவப் படுகின்றதென்பதுதான் பொருள்! குலுங்கக் குலுங்கச் சிரிக்கும் போது மட்டும்தான் மனச் சுமை கரைகின்றதென்பது மட்டுமல்ல; குலுங்கக் குலுங்க அழும்போது மனச் சுமை கரையத்தான் செய்கின்றது! சுமை கரைந்த மனம் பஞ்சு போலாகி ஆரோக்கியத்தின் உறைவிடமாக மாறுகின்றது. மனம் ஆரோக்கியமாகஇருக்கின்றதென்றல், அந்த மனம் அழகுமிக்கதென்பதுதான் பொருள். அப்புறம் அந்த அகத்தின் அழகு முகத்தில் தெரிவதற்குக் கேட்கவா வேண்டும்?

தாமர குமாரியின் முகாரவிந்தத்தில் பொலிந்த அழகையும், எதிரே பொலிவோடும், நிறைவோடும், அமர்ந்திருந்த புத்தபிரானின் சுடர் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தான் கணேசன்.

சற்று முன்னம் புத்தபிரானேடு பேசிய அந்தக 'கதை'யின் தொடர் மீண்டும் அவன் சிந்தையில் விரிந்தது...

'புத்ததேவா! பேராசையும், சுயநலமும் ஊழிக்கூத்தாடும் என் மனத்தில், இருந்து உறுதியும், தெளிவும் பிறக்கப் பார்க்கின்றன. என்று சற்று முன் நான் பிரலாபித்தேன் அல்லவா? தாங்கள் ஞானம் பெற்று 'புத்த'ஞக முன்னம் உங்களுக்குமென்று ஒரு தெளிவில்லாத மனோநிலை இருந்ததல்லவா? அதிலிருந்து தாங்கள் எப்படி விடுபட்டீர்கள்? மண், பெண், பொன், என்ற மாயைகளிலிருந்து தாங்கள் பற்றை அறுத்துக் கொண்டீர்கள். அதனல் புத்தரானீர்கள்! இந்த இடத்தில் என் சங்கதி தலைகீழாக இருக்கின்றது. மண் ஆசையையும், பொன் ஆசையையும் என்னல் துறக்க முடிகின்றது. பெண் ஆசையிலிருந்து என் உணர்வை அறுக்க முடிவதாயில்லை! இதில் கூத்து என்னவென்றல், இந்தப் பெண் ஆசை என்னுள் கொடி கட்டிப் பறப்பதால்தான், என்னுள் எதையாவது சாதிக்கும் வல்லமை பிறக்கின்றது! இதோ தங்கள் முன்னிலையில் முழு மதி போல் கிடக்கின்ற இந்த [illegible] நிலவை நிகர்த்த இந்தப் பெண்ணைப் பார்க்கும் பொழுதும், ஒரு கூடை ரோஜா மலர்களை வாரி இறைத்தது போல் இவள் சிரிக்கின்ற அழகைப் பார்க்கும் பொழுதும் என்னுடைய உள்ளத்தில் ஆண்மை கிளர்ந்தெழுகின்றது. எதையும் சாதிக்கக் கூடிய வல்லமையொன்று பிறக்கின்றது. இந்தப் பெண் கட்டளையிட்டும் எந்த வைராக்கியமான சாதனையையும் சாதிக்க வல்ல சக்தியொன்று குமுறி எழுகின்றது! யுக யுகாந்திரமாகப் புலனை அடக்கிப் பல யோகசாதனை புரியவல்ல ஆத்மீக வெறியொன்று பீறிப் பாய்கின்றது! உலகின் இன்னும் என்னென்ன சாதனைகள் இருக்கின்றனவோ; அத்தனை சாதனைகளையும் சாதிக்கவல்ல ஒரு சக்தி என்னுள் உரம்பெறுகின்றது. இந்தப் பெண் உணர்விலிருந்து என்னைப் பிரித்துவிட்டால் நான் வெறும் ஜடமாக, இயலாமைமிக்க வெறும்மனிதனுக நிச்சயமாக மாறிவிடுவேன்! இந்த ஆத்மீக நஷ்டத்தை-சமுதாய நஷ்டத்தை ஏற்படுத்திவிடாமல் கருணை பாவிக்க வேண்டும் வேண்டும் ஈசா!'

பைத்தியக்காரத்தனமாகக் கணேசனுடைய மனம் புத்த பிரானின் சன்னதியில் அலறியது.

இத்தனை ஆவேசத்தோடு அவனுடைய மனம் அலறி வெடித்ததற்குக் காரணம் இல்லாமலில்லை.

தாமரைகுமாரியின் இல்லத்துக்குப் பக்கத்து வீட்டில் அவன் குடி வந்து பல வாரங்கள் கடந்துவிட்டதெனினும், அவளுடைய போக்கின் தன்மையை அவனுல் முற்றுக அறிந்துகொள்ள இயலாமலிருந்தது. இந்த இயலாமைதான் ஒருவேளை அவன்பால் அவளுக்கு இத்தனை நாட்டத்தை ஏற்படுத்தியதோ என்னவோ?

வீடு பார்ப்பதற்கென்று கிருஷ்ணனுடன் கணேசன் அன்று புறப்பட்டுச் சென்ற பொழுது எதிர்பாராத வகையில் அவன் கண்ட காட்சி அவனைத் திகைப்படையச் செய்துவிட்டது. வெள்ளைக்கார துரையின் ஜீப் கொண்டுவந்து அவனை அவளுடைய வீட்டுக்குப் பக்கமாக இறக்கிவிட்டுப் பறந்து சென்றதன் மர்மம் இன்னமும் அவனுக்குப் புரியாத புதிராக இருந்தது; தாமரகுமாரியின் அழகிய விழிகளின் ஆழத்தில் பனிப் போர்வை போல் மங்கலாக ஒரு சோகம் இழையோடிக் கொண்டிருப்பதன் மர்மம் அவனுக்குச் சதா தலைச் சுற்றலை ஏற்படுத்திக்கொண்டே இருந்தது. அவளுடைய போக்கும், நடத்தையும் ஏதோ ஒரு தாழ்வு சிக்கலில் அவள் கிடந்து தவிக்கின்றுள் என்பதையும். ஓர் அணைக்குறைவில் அவள் வாடி வதங்குகிறுள் என்பதையும் துலாம்பரம் செய்தன. அவளைச் சூழ்ந்து ஒரு மர்மக் காவியம் படிந்திருப்பதையும், அவளே ஒரு மர்மக் காவியமாக இருப்பதையும் கணேசன் புரிந்துகொண்டு தவியாய்த் தவித்தான்.

பிரார்த்தனையை முடித்துக் கொண்டு பவித்திரமாக எழுந்தாள் தாமரகுமாரி. அந்த வெண்ணிற ஆடையில் அவள் கோலத்தைப்

(12-ம் பக்கம் பார்க்க)

## அஞ்சலி

—'கண்மணி'—

காந்திய வழியில்
கூப்பிய எண்ணம்
கருணை பொங்கும்
கலியுகம் காத்த
ஏந்திய பணியை
ஆற்றல் படைத்த
இன்றைய பாரதம்
ஆயிரம் யானை,

காக்கும் கரங்கள்
வாழ்ந்தவர் நேரு!
அருங்குணங் கொண்டு
வலியவர் நேரு!
இனிதாய் முடிக்கும்
அறிஞர் நேரு!
நாளையு மியங்க
அமைத்தவர் நேரு!

நீந்திய கிறையின்
நூல்கள் எழுதிக்
நித்திரை செய்ய
நாட்டினர் வாழ
சாந்தி வழுவாச்
சகலருங் கலங்கப்
சந்தன வத்தி
சாந்தி யடைந்த

வாழ்க்கையின் காலம்
கழித்தவர் நேரு!
நேரமுமின்றி
உழைத்தவர் நேரு!
சத்தியம் காத்து
பிரிந்தவர் நேரு!
தன்மை போல
அமரர் நேரு!

வித்தக வாசல்
வந்திடும் நேரம்
வாழும் உலக
வகைக்கு வழியை
எத்திசை உலகும்
அழுதது பலநாள்
ஏழை எளியவர்
யாவரும் கூடி

காவல் செய்து
கண்டது நன்மை!
மனிதர்க் கெல்லாம்
வகுத்தது உண்மை!
அவர் பிரிவாலே
ஆண்டும் கடக்கும்
மாளிகைச் செல்வர்
அஞ்சலி செய்வோம்!

## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

ANANDA MEDICAL HALL · TRADE MARK · SEA STREET, COLOMBO-11

நெ. 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, தேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூளைச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நெ. 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆர். கே. திருகோணசுந்தரம்,
புதுவட்டக்கொடை

கே: இலங்கையின் ஒருமைப்பாட்டை வளர்க்க இன்றுள்ள சூழ்நிலையில் முடியுமா?

ப: சூழ்நிலை சாதகமாயிருக்கிறது. ஒருமைப்பாடு மக்களிடையே ஏற்படும் வரை இச் சூழ்நிலை நீடித்து நிலைத்து நிற்க வேண்டும்.

கே: திரு. தொண்டமான் தனது கட்சிப் பிளவைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்?

ப: தனது கோட்டையில் ஐந்தில் இரண்டு பங்கு தகர்ந்துவிடுமென்று அஞ்சுகிறாராம்.

ஃ

தமிழ்ப்பிரியன், காரைநகர்

கே: திரு. பொன்னம்பலம் பார்லிமெண்டுக்குப் போனபடியால் பாராளுமன்றக் கட்டிடத்துக்கு (அவருடைய பேச்சின் விளைவாக) வெடிப்பு ஏற்பட்டுள்ளதாமே?

ப: இப்போதெல்லாம் அவர் அப்படிப்பேசுவதில்லை. காரணம் அது பழைய கட்டிடமாக இருப்பதுதான். இப்பொழுது புத்தகங்கள் வாசிப்பதிலே அதிக அக்கறை காட்டுகிறார்.

கே: காதலில் பயிற்சி அளிப்பதற்காக அகில இலங்கைக் காதற் கல்லூரி ஒன்றைத் தொடங்க எண்ணியுள்ளேன். அதற்கு நீர் அதிபராக வருவீரா?

ப: அக்கல்லூரியில் பயிற்சி பெறுவதற்காக மாணவனாகச் சேரவே நான் தகுதியுள்ளவன்.

கே: தேர்தலில் தோல்வியை அணைத்துக்கொண்ட டி. பி. இலங்கரத்தின என்ன செய்கிறார்?

ப: சிங்களப் பத்திரிகைகளுக்குக் கட்டுரைகளும், கதைகளும் எழுதிக்கொண்டிருக்கிறாராம்.

ஃ

எஸ். வேலாகேஸ்வரன்,
சித்தன்கேணி

கே: யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழ் காங்கிரஸ் மகாநாட்டில் தனிப்பெருந்தலைவர் சொன்னார், "சுதந்திரன் செல்வநாயகத்தின் குடும்பப் பத்திரிகை" என்று இது உண்மைதானா?

ப: இல்லை சுதந்திரன் 'மக்களின் குடும்பப் பத்திரிகை'.

ஃ

சி. சிவபாதம், ஆலிஎல.

கே: குயுக்தியாரே, நீங்கள் அதிகம் விரும்புவது எது அதிகம, வெறுப்பது எது என்று சொல்ல முடியுமா?

ப: (1) நான் அதிகம் விரும்புவது பணம் (2) அதிகம் வெறுப்பது தேநீர்.

கே: வட்டமேசைக் காரருடன் தொண்டமானும் சேர்ந்து வட்ட மேசைக்கு அழைத்திருக்கிறாரே, இதன் கருத்தென்ன?

ப: அவரிடம் மலை நாட்டைப் பற்றிய திட்டமொன்று இருக்கிறதாம். அதனை எதிர்ப்பின்றி நிறைவேற்ற வட்ட மேசை அவருக்குப் பயன் படுமாம்.

ஃ

குமார், யாழ்ப்பாணம்

கே: குயுக்திமாமாவே, நீர் வெறும் வாய் வீரரா? செயல் வீரரா?

ப: கடுமையான சோதனைகளுக்குட்பட்டு நெடுங் காலம் மௌனமாகச் செயலாற்றிய பிறகுதான் பேசத் தொடங்கியுள்ளேன் இப்பொழுதும் பேசுவது குறைவு—எழுதுவது அதிகம்.

ஃ

சு. பாலகிருஷ்ணன்.
வெள்ளவத்தை

கே: சமதர்மத்திற்கும்-வகுப்புவாதத்திற்கும் தொடர்புண்டா வென கேட்டால் அதிகாரத்தைக் கைப்பற்ற அவசிய மேற்படின் மார்க்சியத்தில் இன மத துவேசத்திற்கு இடமுண்டென்கிறார் நண்பரொருவர். இவருக்குத் தாங்கள் என்ன கூறுவீர்கள்?

ப: நண்பரின் கூற்றில் ஓரளவு உண்மை உண்டு. சில பின்தங்கிய நாடுகளில் இன, மத, பிளவுகளையும் மார்க்சீய வாதிகள் பயன் படுத்துகிறார்கள் ஆட்சியைக் கைப்பற்ற.

கே: திருமணத்திற்கு முன்பும் பின்பும் தம்பதிகள் எதைப் போன்று இருக்க வேண்டும்?

ப: திருமணத்துக்கு முன்பு தாமரை இலையும் தண்ணீர் துளியும் போல-பின்பு நகமும் சதையும் போல.

ஃ

க. சந்திரமதியன்,
குச்சவெளி

கே: "நான் ஒரு பெண்ணைக் காதலிக்கின்றேன். கெதியில் திருமணம் செய்யும்படி அவள் அவசரப்படுத்துகின்றாள். திருமணச் சட்டப்படி அவளுக்கு வயது குறைவு. என்ன செய்யலாம்?

ப: பெற்றோர்களின் சம்மதமிருப்பின் வயது குறுக்கிடாது.

ஃ

ப. சண்முகநாதன்,
பூண்டுலோயா

ப: நமது இன்றைய அரசாங்கம் சாமான் விலைகளை குறைப்போம் என்கிறார்களே விலைகள் குறையவில்லையே!

ப: அரசாங்கத்துக்கு வர்த்தகர்களின் ஒத்துழைப்பு கிடைத்து. வருகிறது இன்னும் சிறிது அவகாசம் கொடுங்கள் வாக்குறுதியைச் செயல்படுத்துவதற்கு.

ஃ

எஸ். கே. சண்முகநாதன்,
யாழ்ப்பாணம்

கே: "வட்டமேசை"ப் பிரச்சினையை மீண்டும் தொடங்கிவிட்டாரே ஆயுட்காலத் தலைவர்...?

ப: மாவட்ட சபை நிறுவும் முயற்சியை முறியடிக்கவே இந்த நாசவேலை.

ஃ

'மொழிவாணன்',
இரத்தினபுரி

கே: மொழிப் பிரச்சினைக்கும் பொருளாதாரத்திற்கும் வெகு தூரமாமே!

ப: தவறு. இரண்டுக்கும் நெருங்கிய பிணைப்பு உண்டு. இந்நாட்டுப் பொருளாதாரம் மொழிப் பிரச்சினையால் பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கிறதே.

ஃ

விமலராஜன்,
தெல்லிப்பழை

கே: இடதுசாரிக் கட்சி தோல்வி அடைந்ததின் காரணம் என்ன?

ப: சிறுபான்மையோரை பகைத்துக்கொண்டதுதான் காரணம்.

கே: வீட்டுக்குள்ளே பெண்களை ஏன் பூட்டி வைக்கின்றார்கள்?

ப: அடுப்படியைக் கவனிக்காமல் ஆண்களுடன் போட்டியிட அலுவலகத்துக்கு வந்துவிடுகிறார்கள் என்பதற்காக.

ஃ

எம். குணசேகரா,
பூண்டுலோயா

கே: நான் ஒரு சிங்களவன். நான் இ. தொ. கழகத்தில் சேர்ந்துள்ளேன் இங்கு இ. தொ. காங்கிரசும இருக்கிறது. அவர்கள் என்னைதாக்க முயற்சிக்கிறார்கள். இதற்கு என்ன செயவது?

ப: உடனே கழகத்துக்குத் தெரிவியுங்கள். அவர்கள் அதற்கான நடவடிக்கை எடுப்பார்கள்.

ஃ

தமிழன்பன், வியாபாரிமூலை

கே: தனிப் பெருந் தலைவர் தமிழரசுக் கட்சி பெயரைக் கூட மாற்றவேண்டுமென்று யோசனை கூறுகிறாரே?

ப: கட்சி உறுப்பினர்களே அது பற்றி யோசனை செய்ய முடியும். அவர் கட்சி உறுப்பினரல்ல. எனவே "தமிழரசுக் [illegible] குப் பிடிக்காவிட்டால் அது பற்றி யாரும் கவலைப்படப் போவதில்லை. "சிங்களவரும் தமிழரும் ஓரினம்-அந்த இனத்துக்குப் பெயர் இலங்கையர்" என்று கருதுகிறவரல்லவா அவர்!

ஃ

வ. சந்திரபாலன்,
பளை, தெல்லிப்பளை

கே: ஒற்றையாட்சியின் மூலம் நமது பிரச்சினைகள் தீர்க்கப்பட்டாலும் இன்னொரு அரசாங்கம் பதவிக்கு வரும்போது பிரச்சனைகள் தோற்றுவிக்கப்படக் கூடும். என்பதைத் "திறமைசாலி" அறியாரா?

ப: அறியாமலென்ன? தமிழரசுக் கட்சியின் கொள்கை எதுவோ, அதற்கு மாறாக எதையாவது கூற வேண்டுமென்பதைத் தவிர வேறு என்ன?

ஃ

கா. சரோஜினி,
கொழும்பு-14

கே: தமிழரசார் கொடுக்கும் ஒத்துழைப்பைப் பயன் படுத்தி, நல்லாட்சியால், சுயாட்சிக் கோரிக்கையை முறியடிக்க முடியுமல்லவா?

ப: முடியாது விழிப்புடனிருந்தால்.

கே: பத்திரிகா தர்மத்திற்குப் பரிசாக, தமிழ் மக்கள் சார்பில் "மிறர்" பத்திரிகையாசிரியருக்கு 36 கூழ் முட்டைகள் கொடுப்போமா?

ப: என் கருத்து ஒரு "கழிமண் பேனு" பரிசளிக்கலாமென்பதே.

ஃ

பொ. கணேசன், கல்முனை-3

கே: சுவர்க்கத்தை எங்கே காணலாம்?

ப: இங்கேதான் இருக்கிறது. ஏன் உங்களுக்கு அங்கே போக வேண்டுமா? சுவர்க்கத்துக்குப் போனாலும் தப்பிவர வழி வகுத்துக் கொண்டு போங்கள்.

கே: குயுக்தியாரே! கூப்பனின்றி வரும் கேள்விகளுக்கு தாங்கள் ஏன் பதிலளிப்பதில்லை?

ப: அத்தகைய நபர்கள் கேள்வி கேட்பதில் அக்கறை கொண்டவர்களேயன்றி விடையை அறிவதில் அக்கறை கொண்டவர்கலல்ல. ஆகையால் பதிலளிப்பதில்லை.

ஃ

தமிழன்பன்,
புதுவட்டகொடை

கே: இன்பம் வந்த போது இறைவனை நினையாதவர்கள துன்னல் வநதபோது அவனை துறைஞசுவது ஏன்?

ப: தேவைப்படும் போது மட்டும் இறைவனைப் பயன படுததலாமமென றஎண்ணம்.

கே: என்றும் இளமையாக இருப்பது எது?

ப: தமிழ் மொழி.

கே: சிங்காரிகளின் சிரிப்பு எத்தகையது?

ப: வானவில்லைப் போன்றது.

ஃ

சி. பொ. சழுததுமணி,
யாழபபாணம்

கே: "தமிழன் உயர்வுக்காக தலை போனாலும் தயங்காதே தமிழா - இப்படியான பாடலகளை வாழனுலையில் கேட்கவல்லலையே ஏன?

ப: தமிழனிடம் இன்று தயக்கம் கிடையாது. தயங்குனனரோ தயங்காதே என்று பாட வேண்டும்?

ஃ

பொ. சிங்கம், செங்கலடி

கே: அந்த காலச் சினிமாவுக்கும் இந்தகாலச் சினிமாவுக்குமுள்ள வித்தியாசம்?

ப: அது மௌனம் சாதித்தது-இது பேசுகிறது.

ஃ

ம. சுப்பிரமணியம்,
தெல்லிப்பளை

கே: உம்மை அங்கொடை பக்கம் கண்டதாக இங்கு ஒருவர் கூறுகிறார். என்ன காரியம்?

ப: அவர் ஏன் அங்கொடைக்குச் சென்றாராம். அங்கிருந்து வருகிறவர் பேச்சை நம்பாதீர்.

கே: ஓய் குயுக்தி! சிறிமா என்னவாம்?

ப: கடந்த வாரம் ஜே. ஆரிடம் ஒரு குட்டு வாங்கினாராம்.

கே: குயுக்தியாரே, உம்மைச் சந்திக்க ஆசையாயிருக்கிறதே...

ப: நேரில் தேள்வி கேட்கவா? நேரில் கேட்கும் கேள்விகளுக்கு பதில் அளிக்கப்படமாட்டாது.



புதிய கல்வி மசோதா யூலையில் சமர்ப்பிக்கப்படும்.

—செய்தி.

இது எந்த பிக்சர்சாரின் தயாரிப்போ? 'கல்வி மசோதா' என்ற படத்திற்கு நல்ல விளம்பரம்.

மொழிப் பிரச்சினையைத் தீர்க்க வட்ட மேசை மாநாடு பரிகாரமாகாது.

—வை. காராளசிங்கம்.

இவரையும் ஒரு தமிழரசுவாதி யென்றல்லவா ஜீ. ஜீ. கருதப்போகிறார்.

'டிமிக்கி' கொடுத்து ஓடிய காருக்குள் எட்டு மூடை கஞ்சா.

—செய்தி.

ஆனபடியாற்தானே அவர்கள் டிமிக்கிகொடுத்தார்கள். இதுவுமாதெரியவில்லை?

தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. சா. ஜே. வே. செல்வநாயகத்திற்கும் ஐக்கியதேசியக் கட்சித் தலைவர் என்ற முறையில் எனக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் பற்றிய விபரங்கள் எழுத்தில் உண்டு.

—பிரதமர்.

இனியென்ன செய்யப் போகிறார் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம்?

பாராளுமன்ற நடவடிக்கைக் குறிப்புக்களில் தமிழ் இடம்பெறும்.

—செய்தி.

இன்றேல் உலகத் தமிழ் மன்றத் தலைவர் அங்கிருப்பதில் அர்த்தமில்லையே.

'மாய ஜோதி' ஊது பத்திகள்

"பாட்டாளி தொடக்கம் பணக்காரர் வரை"
விரும்புவது "மாய ஜோதி" ஊது பத்திகளே!

ஏன்?

★ அதன் சுகந்த நறுமணம்
★ அதன் நிலைத்து எரியும் தன்மை
★ நவீன தயாரிப்பு
★ அதன் நியாய விலை.

நீங்கள் மட்டும் ஏன் தயக்கம்?
வாங்குங்கள் ஒரு முறை, நிலைத்து விடும் 'மாய ஜோதி'
ந. செல்லத்துரை, மாயஜோதி இண்டஸ்றீஸ்.
128/3, வாட்பிளேஸ், கொழும்பு-7.

## நன்றி நவிலல்

எங்களது 16-5-65ல் நடந்த திருமண விருந்துபசார வைபவத்திற்கு சமூகம் தந்தும் ஆசிகள் அனுப்பியும், பரிசில்கள் வழங்கியும் எங்களை மகிழ்வித்த அன்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த

## 'நன்றி'

தனித் தனியே நன்றி கூற முடியாமைக்கு வருந்துகின்றோம்.

இப்படிக்கு,
பழனியப்பன் தம்பதிகள்

76, நாயன் மார்க்கட்டு,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடதுசாரி இயக்கங்களும் தமிழ் பேசும் மக்களும்

சுதந்திரன் அரசியல் நிருபர்

இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது அடிப்படைக் கொள்கைகளை எந்தச் சந்தர்ப்பத்திலும் விட்டுக் கொடுக்கமாட்டாது என்றும், இன்று தேசிய அரசாங்கம் ஒன்றை உருவாக்கி, சர்வாதிகாரத்தைத் தடுக்க ஐ. தே. கட்சியுடன், செய்து கொண்ட பொருத்தம் ஒரு இடைக்கால ஒப்பந்தம் என்றும் தமிழரசுக் கட்சித் தலைவர்களில் ஒருவரான பட்டிருப்புப் பிரதிநிதி திரு. சீ. மு. இராசமாணிக்கம் கடந்த வாரம் தெளிவு படுத்தியுள்ளார். தமிழரசுக் கட்சியின் நிலையைப் புரிந்து கொள்ளாத சிலர் இன்றைய அரசியல் பற்றி தப்பான விளக்கங்களைக் கொடுத்து வருகிறார்கள்.

### பதவியின் நோக்கம்

யாழ்ப்பாணத் தொகுதியின் பிரதிநிதி திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் 1948-ம் ஆண்டு நடைபெற்ற அரசியல் சம்பவங்களுடன் இன்றைய நிலையைத் தொடர்பு படுத்திப் பார்க்க முற்படுகிறார். நிபந்தனையற்ற முறையில் அன்று அவர் ஐ. தே. கட்சியுடன் இணைந்து பதவிகளைப் பெற்ற நிகழ்ச்சிகளை இன்றைய நிலையுடன் தொடர்பு படுத்த முற்படுவது மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதாகவே இருக்கும்.

இன்று வெளியாகும் செய்திகள் தமிழரசுக் கட்சியினர் எத்தனைக் கட்டுப்பாட்டுடன் நடந்துகொண்டார்கள் என்பதை தெளிவு படுத்துவதாக உள்ளது.

அமைச்சர் திருச்செல்வம் தான் பதவியேற்றதற்கான காரணங்களை தமிழ் பேசும் மக்களை நேரில் சந்தித்து விளக்கம் கூறி வருகிறார். ஐ. தே. கட்சிக்கும்-தமிழரசுக் கட்சிக்கும் இடையிலான பொருத்தத்தின் காவலரே திரு. திருச்செல்வம். மாவட்ட சபைகளை உருவாக்கும் நோக்கத்துடனேயே நான் அமைச்சராக இருக்கிறேன் என்று திரு. திருச்செல்வம் பகிரங்கமாகக் கூறியுள்ளார்.

இந்த நிலையில் தமிழரசார் கொள்கைகளைக் காற்றில் பறக்கவிட்டுவிட்டார்கள் என்றோ அல்லது பதவிக்குப் பல்லிளித்துவிட்டார்கள் என்றோ யாராவது கூறினால் அது நிச்சயம் அரசியலைப் புரியாதவரின் கூற்றாக இருக்கவேண்டும் அல்லது சாதகமான சூழ்நிலையைக் குழப்பியடித்து இலாபம் காண விரும்பும் அரசியற் கபடதாரிகளின் பிரச்சாரமாக இருக்கவேண்டும்.

### தென்னிலங்கை இடதுசாரிகள்

இந்தச் சந்தர்ப்பத்தில் இடதுசாரிகள் என்று கூறிக் கொள்பவர்கள் ஆளுக்கொரு கோணத்தில் நின்று புதுமையான வியாக்கியானங்களைக் கொடுக்க ஆரம்பித்துள்ளார்கள். டாக்டர் பெரேராவின் தலைமையில் உள்ள சமசமாசக் கட்சியினரும், கம்யூனிஸ்டுக் கட்சியினரும் தென்னிலங்கையில் பச்சை வகுப்புவாதக்குரல் எழுப்புகிறார்கள். நாட்டையும் பௌத்த சிங்களரையும் தமிழரசாருக்கு ஐ. தே. கட்சி விற்றுவிட்டது என்று மேடையேறிப் பிரசாரம் செய்கிறார்கள்.

சமசமாச மூதவை உறுப்பினரான டொறிக் டி. சூசா பௌத்த சிங்களர் மட்டுமே சமசமாச - கம்யூனிச - சுதந்திரக் கூட்டணிக்கு கடந்த தேர்தலில் வாக்களித்துள்ளார்கள் என்று கூறியுள்ளார். இத்தனை தூரம் தமிழர்களுக்கு எதிரான பிரச்சாரத்தில் சமசமாச பெருந் தலைவர்களே துணிந்து இறங்கிவிட்டார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் வட இலங்கையில் இருக்கக்கூடிய சமசமாசத் தோழர்கள் 'தமிழரசார் தமிழ் பேசும் மக்களை ஐ. தே. கட்சிக்கு அடைவு வைத்துவிட்டார்கள் என்று முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள். தென்னிலங்கை இடதுசாரித் தலைவர்களின் வகுப்புவாத வெறிக்கூத்துப்பற்றி தட்டிக் கேட்க அஞ்சுகிறார்கள்.

### புரட்சிவாதிகள்

புரட்சிவாத சமசமாசக் கட்சியென்று கூறிக்கொள்பவர்கள்கூட 'தமிழ் பேசும் மக்களும் தேசிய அரசாங்கமும்' என்று பேசத் தலைப்பட்டுவிட்டார்கள். கடந்த பொதுத்தேர்தலில் இவர்களின் கட்சி வேட்பாளர்களாகப் போட்டியிட்டவர்கள் நால்வர். அவர்களில் கட்சித் தலைவர் திரு. எட்மண்ட் சமரக்கொடிக்குக் கிடைத்த வாக்குகள் 238. ஏனைய மூவரும் பத்தாயிரத்திற்கும் குறைந்த வாக்குகளையே பெற்றார்கள்.

இந்தப் புரட்சிவாதிகளும் ஐ. தே. கட்சியின் வெற்றிக்குத் துணைநின்றார்கள் கூட்டரசாங்கத்தை வீழ்த்துவதற்கும் முன்னின்று பாடுபட்டார்கள். அப்பொழுது ஐ. தே. கட்சி ஒரு முதலாளித்துவக் கட்சி என்பது இவர்களுக்குத் தெரியாது போலும். இப்பொழுது ஐ. தே. கட்சி முதலாளித்துவக் கட்சி, அவர்களை நம்பிப் பயனில்லை என்கிறார்கள்.

தமிழ், சிங்கள தொழிலாளர்களின் புரட்சி மூலமே நாட்டின் அரசியல் அமைப்பை மாற்றியமைக்க முடியும் என்கிறார்கள். யாரும் மறுக்கவில்லை. புரட்சி செய்யும் திறன் இவர்களிடம் உண்டா?

238 வாக்குகளைப் பெற்ற இவர்களா புரட்சி செய்யப் போகிறார்கள்? புரட்சி என்று வெறுமனே வாயால் பேசிவிட்டால் புரட்சி நடைபெற்றுவிடாது. அதற்கு தொழிலாள விவசாயிகளின் ஒத்துழைப்பைப் பெறவேண்டும். பொதுமக்களின் ஆதரவும் இருக்க வேண்டும்.

புரட்சிவாத சமசமாசக் கட்சியினரின் முன்னாள் தலைவர் டாக்டர் பெரேராவே 'பௌத்த நாட்டில் புரட்சிக்கு இடமில்லை' யென்று சத்தியம்பண்ணிக் கூறிவிட்டார்.

### மீண்டும் வர்க்க ஒற்றுமையா?

வாழ்நாள் முழுவதும் புரட்சியைப்பற்றிப் பேசியவர்களே புரட்சி சாத்தியமில்லையென்று கூறியதுடன் மார்க்சிய தத்துவத்தைத் தூர வீசிவிட்டு முதலாளித்துவ சுதந்திரக் கட்சியினருடன் சேர்ந்துவிட்டார்கள்.

இந்த நிலையில் தொழிலாளர்களினதோ அல்லது பொதுமக்களினதோ ஆதரவு சிறிதும் அற்ற புரட்சிவாத சமசமாசக் கட்சியினர் புரட்சிபற்றி கூரையேறிக் கூவுகிறார்கள்.

தமிழ் - சிங்கள தொழிலாளர்களின் ஒத்துழைப்புடன் புரட்சியொன்றை நடாத்த வேண்டுமென்கிறார்கள் இந்தப் புரட்சிவாதிகள் வர்க்க ஒற்றுமை வெறும் வாட்டுக் கூச்சல். அது இயற்கையோடு ஒன்றியது அல்ல. மொழி வழி தொழிலாளர்கள் பிரிய வேண்டும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 1956-ம் ஆண்டிலிருந்தே கூறிவருகிறது.

தமிழரசுக் கட்சியினரின் கூற்று இன்று பெருமளவு வெற்றியைக் கொடுத்துவருகிறது. மொழிவழிப்பிரிவினை தவிர்க்க முடியாததும்கூட.

அண்மையில் இலங்கை மத்திய மாவங்கியில் நடைபெற்றது என்ன? தமிழ் தொழிலாளர்கள் தங்கள் சம்பளத்தைப் பெற முடியாத நிலையில் இருக்கும் போதும் அவர்களின் பிரச்சினையில் தலையிட தேசியத் தொழிற் சங்கம் மறுத்துவிட்டது. மாறாக வகுப்பு வெறியைத் தூண்டும் கேலிச் சித்திரங்களை வங்கி வட்டாரத்தில்வெளியிட்டுக்கொண்டிருந்தனர். எனவே மத்திய மாவங்கி ஊழியர்கள் மொழிவழி பிரிந்து தனி இயக்கம் கண்டனர். இந்த நிலையில் இயற்கையோடு ஒன்றாத முறையில் புரட்சிவாத சமசமாசக்கட்சியினர் பேசுகிறார்கள்.

### தனிநபரை ஒரு இனம் நம்ப முடியுமா?

புரட்சிவாத சமசமாசக் கட்சியினர் தொடர்ந்தும் மொழிச் சமத்துவத்தை வற்புறுத்துகிறார்கள். இது பாராட்ட வேண்டிய ஒன்றல்லவா என்கிறார்கள் சிலர். சமசமாசக் கட்சியினரும் பல ஆண்டுகளாக மொழிச் சமத்துவம் கோரினார்கள். பிலிப் குணவர்த்தன சமசமாசக் கட்சியை விட்டு வெளியேறி தீவிர சிங்களப் பிரச்சாரம் செய்த நேரத்திலும் மொழிச் சமத்துவம் பேசினார்கள். இன்று அவர்களின் நிலையென்ன?

தோழர் எட்மண்ட் சமரக்கொடி சமத்துவ வாதியாக இருக்கலாம். ஆனல், அவர் சிரஞ்சீவித் தன்மை நிறைந்தவரா? 238 வாக்குகளைப் பெற்ற தோழர் எட்மண்ட் சமரக்கொடி என்ற தனியொரு நபரை தமிழினம் நம்ப முடியுமா? இவற்றை யுணராது புரட்சிவாதிகள் பேசுகிறார்கள்.

புரட்சிவாத சமசமாசக் கட்சியினர் எத்தனை தூரம் சமத்துவம் பேசினுலும் தமிழ் பேசும் இனம் தனித் தன்மை வாய்ந்த தேசிய இனம் என்பதை ஏற்க மறுக்கிறார்கள். அவர்களின் கண்ணோட்டத்தில் தெரிவதெல்லாம் இலங்கையர் என்ற ஒரே இனம்தான். இந்த வாதம் பெரும்பான்மையினரைப் பொறுத்த வரையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த மாட்டாது. தமிழ் பேசும் இனத்தைப் பொறுத்தவரையில் இந்த இலங்கையர் என்ற வாதம் நாளை இரண்டறக் கலந்து ஏக சிங்களம் என்ற நிலை உருவாவதற்கே வழி சமைக்கும்.

### தமிழ்த் தேசியம்

இன்று தமிழ் பேசும்இனம் தனித்தன்மை நிறைந்தது என்பதையும் அவர்களும் இந்நாட்டு தனித் தேசிய இனம் என்பதையும் தமிழரசுக் கட்சியைத் தவிர வேறு எந்த அரசியல் கட்சியும் உணர, ஏற்க மறுக்கிறது.

தமிழ் பேசும் இனம்தனித் தேசிய இனம் என்பதை ஏற்க மறுக்கும் எந்த இயக்கமும் தமிழ் மக்களுக்கு வாழ்வு கொடுக்கமுடியாது. புரட்சிவாத சமசமாசக் கட்சியினர் சமத்துவம் பேசலாம், அது தமிழ் இனத்திற்கு வாழ்வு தர மாட்டாது.

இதே போன்றுதான் பொன்னம்பலம் கட்சியும். அவர்களிடம் கொள்கை

(5-ம் பக்கம் பார்க்க)

நூற்றுக்கணக்கான
வர்த்தக நண்பர்கள்
ஆயிரக்கணக்கான
வாடிக்கையாளர்கள்
மீண்டும்
விஜயஞ்செய்யுமாறு
வற்புறுத்தியதால்
அருந்த எண்ணெய்
வேன்களை
மட்டுநகருக்கு
இவ்வாரம்
அனுப்பிவைத்துள்ளோம்!
எமது சோல் ஏஜண்ட்:
மயில் கடை,
இல. 8, மெயின் வீதி, மட்டக்களப்பு.

ஏனைய விற்பனையாளர்கள்

| மட்டக்களப்பு | கல்முனை | வாழைச்சேனை |
|---|---|---|
| பரமேஸ்வரி ஸ்டோர்ஸ், இல. 1, திருமலை ரோட், சிவநடராசா ஸ்டோர்ஸ், (போன் : 319) 12, பஜார் வீதி, முருகன் ஸ்டோர்ஸ். 14, பஜார் வீதி, கணேசன் ஸ்டோர்ஸ், 13, மத்திய வீதி, | ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ், சோதி ஸ்டோர்ஸ், கணேசன் ஸ்டோர்ஸ், ரஹீம் ஸ்டோர்ஸ், (சாய்ந்த மருது) | எம். எஸ். மீராசாய்பு, (பள்ளிவாசல் கட்டிடம்) பரமேஸ்வரி ஸ்டோர்ஸ் முருகன் ஸ்டோர்ஸ், |
| **களுவாஞ்சிக்குடி** | **சம்மாந்துறை** | **ஏறாவூர்** |
| வி. மார்க்கண்டு, ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ், ரதி ஸ்டோர்ஸ், | கதிஜா நியூஸ் ஏஜன்ஸி | சிவநடராசா ஸ்டோர்ஸ், (போன் : 892) முருகன் ஸ்டோர்ஸ், 295, மெயின் வீதி, கிளை : செங்கலடி |
| | **காரைதீவு** | **கல்முனை** |
| | முருகன் ஸ்டோர்ஸ் (1ம் குறிச்சி) | டி. எம். மொஹிதீன் அப்துல்காதர்&பிரதர்ஸ் |

தயாரிப்பாளர்
பி. எம். திசாநாயக்க,
அருந்த எண்ணெய் தொழிலகம், [illegible] போன்: 454

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர்களின் யாழ்ப்பாண விஜயமும்

# தமிழ் பேசும் மக்களும்

இம்மாசம் 8, 9ந் திகதிகளில் தேசிய அரசாங்கத்தின் (தமிழரல்லாத) இரு மந்திரிகள் யாழ்ப்பாணத்திற்கு விசயஞ் செய்தனர். பத்திரிகைகளின் வர்ணனைப்படி (குறிப்பாக தினகரன், டெய்லிமிறர் ஏடுகளின் படி) நிறைகுடங்கள் வைத்து மலர்மாலைகள் சூட்டி இருவரையும் யாழ்ப்பாண மக்கள் குதூகலமாக வரவேற்றிருக்கின்றனராம். விமானம் வந்தடைந்தபோது 'பலாலி விமான நிலையத்தில் பெருக்கெடுத்துநின்ற சன சமுத்திரத்தின் வரவேற்பு ஆரவாரம் வானளாவக் கேட்டது' என்கிறார் தினகரன் நிருபர். ஒருசில தினங்களாக திரு. பொன்னம்பலம் அவர்களின் கண்ணிறைந்த படங்களைத் தினகரனில் எந்தப்பக்கத்தைப் புரட்டினாலும் பார்க்காமலிருக்க முடியவில்லை. விதம் விதமான 'போஸ்'கள்! விருந்தினர்க்கு விழுந்த மாலைகளிலும் பார்க்க அவர் கழுத்தில் கூடுதலான மாலைகளைக் காணக்கிடந்தது! வழமைபோல வந்தாரையெல்லாம் வரவேற்கும் வசாவிளான் கொந்தருத்துக்காரர் கொடி குடை ஆலவட்டம் பிடிக்கத் தவறவில்லை.

### அமைச்சர்களை அழைத்தவர்கள் யார்?

இந்நிலையில் தான் நாம் கேட்க விழைகின்றோம்: 'யாரின் அழைப்பின் பேரில் இவர்கள் சென்றார்கள்?' 'என்ன நோக்கத்துடன் அழைக்கப்பட்டார்கள்?' 'என்ன நோக்கத்துடன் சென்றார்கள்?'

தினகரன் நிருபர் சொல்லிவிட்டார் "தமிழ்மக்களின் அழைப்பின்பேரில்தான் விசயம் செய்தனர்' என்று. யார் இந்த தமிழ் மக்கள்?

அமைச்சர்களின் பேச்சின் படி, அகில இலங்கை தமிழ் காங்கிரசின் (அண்மையில் 20 வது வருடாந்த மாநாட்டை நடத்திய!) ஆயுள் காலத் தலைவரின் அழைப்பிற்கிணங்கவே சென்றிருக்கிறார்கள்.

அழைத்தது காங்கிரஸ்; சுற்றுப்பிரயாண நிகழ்ச்சி நிரலைத் தயாரித்தது காங்கிரஸ்; இருந்தும் யாழ்ப்பாணத் தொகுதியில்போட்டியிட இருந்ததாகச் சொல்லப்பட்ட 'டெயிலிமிறர்' ஆசிரியர் திரு. றெஜி மைக்கேலின் மிரண்ட பார்வையில் அமைச்சர்களுக்கு தமிழரசார் ஆராத்தி எடுத்து ஆலவட்டம் பிடிக்காதது ஒரு மகா பாவமாகத்தோற்றியிருக்கிறது!

இரு அமைச்சர்களும் அரசியல் அனுபவம் குறைந்தவர்களென்றே சொல்ல வேண்டும். அமைச்சரவையில் மூப்பிலும் குறைந்தவர்கள், தெரிந்தோ தெரியாமலோ பிழைகளைச் செய்துவிட்டார்கள்—பேச்சிலும், செயலிலும் பாராளுமன்றக் கோட்பாட்டைப் புறக்கணித்து காங்கிரஸ் அல்லாத தொகுதிகளுக்கு இட்டுச் செல்லப்பட்டிருக்கின்றனர்.

காங்கேசன்துறைத் துறைமுகத்தைத் அத் தொகுதியில் தோல்விகண்ட திரு. பாஸ்கரனின் சகிதம் சென்று பார்வையிட்டிருக்கின்றனர்.

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவைப் பார்க்கச் சென்றபோது அத்தொகுதியில் தோல்விகண்ட திரு. நடராசாவினால் வரவேற்கப்பட்டிருக்கிறார் அமைச்சர் சுகததாசா.

### பேச்சுக்களின் விளைவு

ஆனால் புதிய பாராளுமன்றக் கோட்பாட்டை வகுக்க முனைந்திருக்கிறார் 'திறமைசாலி' திரு. மு. சிவசிதம்பரம். கட்சிஉறுப்பினர் என்ற முறையில் சென்ற அமைச்சர் திரு. திருச்செல்வத்தின் உடுப்பிட்டி விசயத்திற்கும் அமைச்சர்களின் தமிழரசுத் தொகுதி விசயங்களுக்கும் (வேற்றுமையில்) ஒற்றுமைகாண்கிறார் வெண் சுருட்டு வீரர்.

அமைச்சர்களின் செய்கைகளிலும்பார்க்கப் பேச்சுகள் இன்னும் மிஞ்சியிருந்தன.

'ஒன்பது வருடங்களாக வடக்கு மாகாணம் அபிவிருத்தியடையவில்லை. இதற்கு அப்போதைய பா. உ.க்களை மட்டும் குறைகூற முடியாது' என்றிருக்கிறார் அமைச்சர் திரு. சுகததாசா. இது தமிழரசுக் கட்சியின்மேல் ஒரு கண்டனம்.

மேலும் சொல்லியிருக்கிறார்—'யாழ்ப்பாணம், உடுப்பிட்டி வரவேற்புகளிலிருந்து யாழ்ப்பாணத்தில் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்திற்கு இருக்கும் மதிப்புத்தெரிகிறது. இந்த வரவேற்பை நாங்கள் கொழும்பிலுள்ள மற்றவர்களுக்கும் கூறி திரு. ஜீ. ஜீ. யின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்கிறோம்.'

இரண்டு மாதங்களுக்கு முன்னர் நடந்த பொதுத் தேர்தலின் போதுதான் திரு. பொன்னம்பலத்திற்கு அளிக்க வேண்டிய மதிப்பை வாக்காளர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். மக்களின் மதிப்பிலும் பார்க்க மாலைகளின் கனத்திற்கு கனம் அமைச்சர் அவர்கள் மதிப்புக் கொடுக்க முனைந்தது வருந்தத்தக்கது.

ஏதோ தனது 17 வருடகாலக் கொள்கைசரியென்று நிருபிக்கப்பட்டது என்கிறார் திரு. பொன்னம்பலம். அந்தக் கொள்கைதான் என்னவென்று விளக்கப்படவில்லை.

17 ஆண்டுகளுக்கு முன் அலரிமாளிகைக்குச் சென்று திரு. டி. எஸ். சேனநாயக்காச் சிங்கத்திற்கு முன் மண்டியிட்டுத் தண்டனிட்டுத் தமிழினத்தின் தன்மானத்தை விற்றாரே அந்தக் கொள்கை சரியென்கிறாரா?

அக் கொள்கை சரியென்று ஏற்கத் தமிழ்மக்கள் ஒரு சிவர் இன்னும் இருந்தால் அது வருந்தத்தக்கூடியது, இந்நிலை உடனடியாக மாற்றப்படவேண்டியது.

மந்திரிகட்கு, நிலைமையை நேரில் காட்டுவதற்கு அவர்களை அழைத்தாராம் திரு. பொன்னம்பலம். விசயங்களை மந்திரிகள் நேரில்பார்க்கத்தான் வேண்டுமென்றால் ஒவ்வொரு திணைக்களத்திற்கும் ஒரு அமைச்சரே போதாது; வெந்துவிடும்.

தமிழ் அரசுக் கட்சியிடம் நேசக்கரம் நீட்டும் போலிவேடம்போடும் திரு. பொன்னம்பலம் அக் கட்சியின் அமைச்சரை அழைக்கலாமே! அழையாது விட்டாலும் அமைச்சர் திருச்செல்வம் காங்கிரஸ் [illegible]களுக்குச் செல்லும்போது அவரை வரவேற்று தமிழரசார் செய்த 'பிழையை' தாம் செய்யாதிருக்கலாமே! அதுதான் கசப்பாயிருக்கிறது!!

### மூன்று காரணங்கள்

அமைச்சர்களின் விசயத்தை யொட்டி மூன்று வியாக்கியானங்களை கொடுக்கலாம்.

ஒன்று, திரு. பொன்னம்பலத்தின் நோக்கம் காங்கிரசின் செல்வாக்கை உயர்த்துவதற்காயிருந்திருக்கலாம். தமிழரசுத் தொகுதிகளில் நடைபெறும் வரவேற்புபசாரங்களுக்கு மாற்றாகவும் தேர்தலின் முன்பும் பின்னும் தான் விட்ட பிழைகளை (காலம், நேரம்வரும் போது இவை விளக்கப்படும்) மூடி மறைப்பதற்கும் அவர் அமைச்சர்கள் இருவரை, அதுவும் மூப்பும் அனுபவமும் குறைந்த

## "சிவா"

இருவரை, அழைத்துக் காங்கிரஸ் பிரசாரம் நடத்தியிருக்கிறார் எனலாம். அமைச்சர்களும் கட்சி அரசியல் சதுரங்கத்தில் தம்மைக் காலாட்களாக (அல்லது கையாட்களாகவா?) காங்கிரஸ் தலைவர் பாவிக்க இடம் கொடுத்து விட்டனர் என்னலாம்.

இரண்டாவது, நினைக்கவே நெஞ்சம் பதறுகிறது. இடதுசாரிக் கட்சிகள் வியாக்கியானம் கொடுக்க முனைவது போல், தமிழரசுக் கட்சிக்கு எதிராக காங்கிரசுக்கும் யூ. என். பியின் ஒரு பகுதியினருக்கு மிடையில் உருவாகிவரும் சதியின் பிரதிமை.

இதில் அணுவளவேனும் உண்மை இருக்கக் கூடாது என்பதே எமது அவா.

பழைய காலத்தை மறக்கத் தொடங்கிவரும் தமிழ் மக்கள் மனத்தில் இதில் உண்மையிருக்குமோ அல்லது அரசாங்கத்தில் பிளவை ஏற்படுத்த முனையும் எதிர்க்கட்சியினரின் முயற்சி பலிக்குமோ என்ற ஐயந்தானும் ஏற்படாது பார்க்க வேண்டியகடமை பிரதமருடையதும் ஐ.தே. கட்சியைச் சேர்ந்ததும். அமைச்சர்களின் விசயத்தால், பிரதமருக்குத் தலையிடி உண்டாகியிருக்கும் என்றே நம்புகிறோம்.

மூன்றாவது, நினைக்கவே மனம் வேதனை அடைகிறது. எதிரிக்குச் சகுனப் பிழை ஏற்படுத்துவதற்காக தனது மூக்கை ஒருவன் அறுத்த கதையை பழமொழியில் தான் பார்க்கிறோம்.

### உள்நோக்கம் என்ன?

ஆனால் திரு. பொன்னம்பலத்தைப் பொறுத்த அளவில் இந்தக் கதையை மெய்ப்பிக்க முனைகிறாரோ என்று தான் நினைக்க வேண்டியிருக்கிறது பண்டா—செல்வா ஒப்பந்தத்தை முறிய வைத்த (பெருமையல்ல) சிறுமையில் அவருக்கு ஒரு பெரும் பங்குண்டு.

அதே கைங்கரியத்தை இப்போதும் செய்ய முயல்கிறார் என்றே சொல்ல [illegible] எல்லாருக்கும் சாதி, மத, மொழி வித்தியாசமில்லாத முறையில் சம சந்தர்ப்பம் கோரிக்கொண்டு, மறுபுறம் வடக்கு கிழக்கு மாகாணத்தின் பொருளாதார அபிவிருத்தியைப் பற்றியும் தமக்கென ஒரு மொழியும் பண்பாட்டையும் உள்ள மக்களுக்கு (இவர்களை ஒரு தேசிய இனம் என்று சொல்லக் காங்கிரசுக்கு வாய் கூசுகிறது) இவற்றைப் பாதுகாக்கும் உரிமையைக்கோரித் தமிழரசுத் தத்துவத்தின் கோட்பாட்டை உள்ளூர ஏற்று, முன்னுக்குப் பின் முரண்பட்ட கொள்கைகளைப் பிதற்றும் காங்கிரஸ் தலைவர்கள் (இன்னொரு தலைவர் காங்கிரசுக்குள் தோற்றியிருப்பதை எண்ணாமலிருக்க முடியவில்லை) கட்சிப் பூசலாலும் பொறாமையாலும் யூ. என். பிக்கும் தமிழரசுக்கட்சிக்கு மிடையில் ஏற்பட்டிருக்கும் பொருத்தத்தைமுறியடிக்கப்பார்க்கிறார்களோ வென்று ஐயப்படுவதற்குப் போதிய ஆதாரம் இருக்கிறதென்றே எண்ண வேண்டியிருக்கிறது.

அல்லா விட்டால் அமைச்சர்களை வரவேற்ற ஒரு கூட்டத்திலும், காங்கிரஸ் மாநாட்டிலும் "மாவட்ட சபைகளும், இரு கட்சிகளுக்கிடையே (அதுவும் பலவந்தத்தின் பேரில்) செய்யப்படும் பொருத்தங்கள் தமிழினத்தின் பிரச்சினைகளைத் தீர்க்க மாட்டா'' என்ற தோரணையில் பேச்சுக்கள் எழுந்திருக்க மாட்டா.

மூக்கும் முழியுமாயுள்ள திரு. பொன்னம்பலத்திற்கு மூக்குப் போனாலும் பாதகமில்லை. ஆனால் அவர் தமிழினத்தின் மூக்கை அறுக்கப் பார்க்கிறார். இது பற்றித் தான் தமிழ் பேசும் மக்கள் விழிப்பாயிருக்க வேண்டும்.

### ஏன் இந்த வீம்பு

சமஷ்டி ஆட்சி எடுப்பதென்றாலும் இந்தப் பொன்னன்தான் செய்வான் என்று வீம்புப் பேச்சுப் பேசியவர் திரு. பொன்னம்பலம் என்பதைநாம் மறக்கக் கூடாது.

தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் வழங்கப்படுமுன் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதி யார் என்ற சர்ச்சை கிளப்படுவதாயின் தமிழரசுக் கட்சித் தலைமை பீடமும் விழிப்பாகத்தான் இருக்க வேண்டும்.

கடைசியாக ஒரு வார்த்தை எதிர்காலத்தில் தமிழ் பிரதேசங்களுக்கு தேசிய அரசாங்கத்தின் அமைச்சர்கள் விஜயம் செய்ய வேண்டுமாயின் ஒரு புறம் அவர்கள் பாராளுமன்றக் கோட்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும். மறுபுறம் தமிழ் மக்களும் அமைச்சர்களுக்கு ஆரத்தி எடுத்து ஆலவட்டம் பிடித்தால் தான் காரியம் ஆகுமென்ற மனப்பான்மையை அகற்றி விட்டு பண்பான; ஆனால் கட்டுக்கோப்பான முறையில் அமைச்சர்களை வரவேற்கப் பழக வேண்டும்.

இலங்கை அரசியல் இன்னும் கொந்தளிப்புடன் தானிருக்கிறது வகுப்புவாத நஞ்சைக் கக்கும் அரசியல் வாதிகள் தங்கள் முயற்சியைக்கை விடவில்லை நாளை அவர்களே அரசோச்சும் நிலை ஏற்பட்டால்...? அந்நிலைக்கும் எம்மை நாம் தயாராக வைத்துக் கொள்ள வேண்டும்.

## இடதுசாரி...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இலட்சியம் என்று ஒன்றும் இல்லாவிட்டாலும், அவர்கள் தமிழர்களைக் கொண்ட ஒரு இயக்கமாக இருந்த போதிலும்கூட தமிழ்பேசும் இனம் தனித் தேசிய இனம் என்பதை உணரமறுக்கிறார்கள். அவர்களுக்கு இந்த உண்மைபுரியவில்லை. புரிந்தாலும் அதுபற்றித் தெரிய விரும்பவில்லை. தெரிந்தாலும் அதைக் கூறிக்கொள்ள விரும்பவில்லை.

### தமிழரசே வாழ்வளிக்கும்

சந்தர்ப்பத்திற்கு ஏற்ற மாதிரி தங்களை மாற்றிக் கொள்ளும் பொன்னம்பலம் கட்சியினருக்கு இப்படியான தத்துவங்கள் எல்லாம் தலையிடியாகவே இருக்கும். அவர்களின் குத்துக்கரணங்களுக்கு இந்த வாதங்கள் முட்டுக்கட்டை போடும். எனவே தான் அவர்கள் தமிழ் பேசும் இனத்தை தனித் தேசிய இனமாக ஏற்க மறுக்கிறார்கள்.

தமிழ் இனத்திற்கு வாழ்வு கொடுக்கக்கூடியவர்கள் தமிழரசுக் கட்சியினரே. இன்று ஒரு இடைக்கால எற்பாட்டின் மூலம் தங்கள் நடவடிக்கைகளை சிறிது ஒத்திப்போட்டிருக்கிறார்கள். ஆனால், இது தான் தமிழரசாரின் நிரந்தர மார்க்கம் என்று யாரும் முடிவு செய்தால், அது தவறு. அதைத்தான் பட்டிருப்புப் பிரதிநிதியும் வற்புறுத்தியுள்ளார்.


# வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்


## தையிட்டி கலாவல்லி வாசிகசாலை நடாத்திய சிறுகதை, கவிதைப் போட்டியின் முடிவுகள்

**சிறுகதை:**

1வது பரிசு: செல்வி சி. யோகேஸ்வரி, சுழிபுரம்
2வது பரிசு: ஐ. கந்தசாமி, சித்தங்கேணி
3வது பரிசு: த. சிவநாதன், யாழ்ப்பாணம்

**கவிதை:**

பரிசு பெறுபவர்: இ. குமாரகுலசிங்கம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு ஆண்டுகளுக்கு இந்தி எதிர்ப்பு போராட்டம் கிடையாது

## பொதுத் தேர்தலைக் கருதி தி. மு. கழகம் முடிவு

### அறிஞர் அண்ணா அறிவிப்பு

நடக்கவிருக்கும் பொதுத் தேர்தலை உத்தேசித்து இரண்டு ஆண்டுகளுக்கு கிளர்ச்சிகள் எதிலும் ஈடுபடுவதில்லை யென திராவிட முன்னேற்றக் கழகம் முடிவு செய்துள்ளது என்று திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அறிவித்துள்ளார்.

கோவையில் நடைபெற்ற ஒரு மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேசும் பொழுதே இந்த முடிவை அறிஞர் அண்ணா அறிவித்துள்ளார் என்று தெரிகிறது.

இந்தியை இந்தியாவின் ஒரே ஆட்சி மொழியாக்கக் கூடாதென்ற திராவிட முன்னேற்றக்கழகத்தின் இலட்சியத்தை மீண்டும் வலியுறுத்திய அறிஞர் அண்ணா மொழிப் பிரச்சினையை அவசர உணர்ச்சியுடன் தீர்க்க வேண்டுமென்றும் உறுதியாகக் கூறினர்.

கட்சில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பினால் மொழிப் பிரச்சினை பின்னுக்குப்போய்விட்டது என்று பார்லிமெண்டு விவகார அமைச்சர் சத்திய நாராயணசின்கா கூறியதைப்பற்றிக் குறிப்பிட்ட அறிஞர் அண்ணா "அதற்கு மாறாக மொழிப் பிரச்சினை அவசரமானதாகி விட்டது. இதற்கு விரைவில் தீர்வு காண வேண்டும். ஆக்கிரமிப்புக்கொதிராக வலுவான பாதுகாப்பு நாட்டு மக்களின் மன நிறைவேயாகும், வெறும் படைப்பலமல்ல" என்று வலியுறுத்தினர்.

சீன ஆக்கிரமிப்பின் ஆரம்ப நாட்களில் மறைந்த பிரதமர் நேரு மொழிப்பிரச்சினையில் இந்தி மொழியினரல்லாத மக்களுக்குக்கொடுத்த வாக்குறுதியை விரிவாகப் பிரச்சாரம் செய்ததை அறிஞர் அண்ணா டில்லிஆட்சியாளருக்கு நினைவூட்டினர். அக்கூட்டத்தில் அவசரநிலைக் காலத்தில் அடிப்படை பிரச்சினைகளின் தீர்வுகளை ஒத்திப்போடாமல் மக்களுக்கு மனக்குறை ஏற்படுவதற்கு இடமில்லாமல் 'செய்து, முழுப்பலத்துடன் மக்கள் ஆக்கிரமிப்பை எதிர்ப்பதற்கான நிலையை உண்டாக்க வேண்டுமென்று வற்புறுத்தினர்.

# ஆங்கிலம் நீடிக்கும்

## அவை விரும்பும் வரை இந்தி திணிப்பு இல்லை

இந்தி மொழி பேசாத மாகாணங்களின் சட்டசபைகள் அனைத்தும் ஒரு சிறப்புத் தீர்மானம் மூலம் ஆங்கில உபயோகத்தை நிறுத்துவது என்று முடிவு செய்யும் வரை மத்திய அரசுக்கும் இந்திபேசாத மாகாணங்களுக்கிடையேயும் -இந்தி பேசும் மாகாண அரசுகளுக்கும் இந்தி பேசாத மாகாண அரசுகளுக்கிடையேயும் கடிதப் போக்கு வரத்துக்கு ஆங்கிலம் தொடர்ந்து உபயோகிக்கப்பட்டு வரவேண்டும் என்று மத்திய அரசுக் காரியாலயங்களுக்கும் ஆங்கிலம் தொடர்ந்து உபயோகிக்கப்பட்டு வரவேண்டும் என்ற பொதுக் கருத்து இந்திய மத்திய அரசின் அமைச்சரவையில் ஏற்பட்டிருக்கிறதாம்.

மத்திய அரசின் அமைச்சர்களுக்கும் ஏனைய காங்கிரஸ் பிரமுகர்களுக்குமிடையில் நடைபெற்ற உயர்கட்டப் பேச்சுவார்த்தைகளின் விளைவாக இந்தக் கருத்து உருவாகியிருக்கிறதாம்.

அகில இந்திய ரீதியிலான உத்தியோகப் பரீட்சைகள் அனைத்தும் ஆங்கிலத்திலேயே நடைபெற வேண்டுமென்றும் இந்தியிலும் மற்றும் பிரதேச மொழிகளிலும் பரீட்சைகளை எழுத அனுமதிக்கும் முடிவு பின்னர் செய்யப்படுமென்றும் தெரிகிறது.

ஆங்கிலத்தை தொடர்ந்து உத்தியோக பூர்வமான இடத்தில் கணிப்பது பற்றியும் ஆட்சி மொழிச் சட்டத்தை திருத்துவதுபற்றியும் நேருவின் முடிவை இந்திய மத்திய அமைச்சரவை தொடர்ந்து ஆராய்ந்து வருகிறதாம்.

நீதிபதிகளின் வேண்டுகோளின்படி நீதிமன்றத்தில் ஆங்கிலமே தொடர்ந்து நீதிமன்ற மொழியாக இருக்குமாம்.

இந்தி பேசாத மக்களிடையே இந்தி திணிக்கப்படுகிறது என்ற பயத்தைப் போக்க நடவடிக்கை எடுப்பது என்றும் மத்திய அரசினர் தீர்மானித்திருக்கிறார்களாம்.

அதே நேரத்தில் தமிழ்நாட்டு மாணவர்கள் இந்தியை எதிர்த்து ஆகஸ்டுக்கு முன்னர் மீண்டும் பரந்த அடிப்படையில் ஒரு போராட்டத்தை நடாத்தவதற்குத் திட்டமிட்டு வருகிறார்களாம்.

இம்மாதம் 11-ம் திகதி திரு. ரவிச்சந்திரன் தலைமையில் தமிழ்நாட்டு மாணவர்குழுவின் சார்பில் மூவர் பிரதமர் சாஸ்திரியிடம் ஒரு மகஜர் சமர்ப்பித்துள்ளார்கள். அந்த மகஜரில் "இந்தி பேசாத பகுதியில் உள்ளவர்கள் பொதுசனவாக்கெடுப்பின் மூலம் தங்கள் சம்மதத்தைத் தெரிவிக்கும்வரை இந்தி ஆட்சி மொழியாகாது என்று மத்திய அரசு சட்டமூலமான வாக்குறுதி கொடுக்க வேண்டும்" என்று வற்புறுத்தியிருந்தனர்.

தமிழ் நாட்டு மாணவரின் இந்தக் கோரிக்கைக்கு மத்திய அரசு பணியமறுத்தால் மாணவரின் போராட்டம் நிச்சயம் நடைபெறும் என்று தெரிகிறது. அதே நேரத்தில் அறிஞர் அண்ணா இரண்டு ஆண்டுகளுக்கு போராட்டம் எதுவுமில்லை என்று அறிவித்திருப்பது இந்திய அரசியல் வட்டாரத்தில் ஒரு குழப்பமான நிலையைத் தோற்றுவித்துள்ளது. மாணவர்கள் தி. மு. கழகத்தின் ஆதரவு இன்றியே போராட்டத்தை நடாத்துவார்களா என்ற கேள்வியும் அரசியல் வட்டாரங்களில் கேட்கப்படுகிறது. அறிஞர் அண்ணா ஆகஸ்ட் மாதத்தின் பின்னரே தமது உலக சுற்றுப் பிரயாணத் திட்டத்தை மேற்கொள்ளப் போவதாக அறிவித்திருப்பதும் அரசியல் வட்டாரங்களில் குழப்பமான சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளது.

# உலகச் சுற்றுப் பிரயாணத்தை அறிஞர் அண்ணா பிற்போட்டார்

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா தமது உலகச் சுற்றுப் பிரயாணத்தை ஆகஸ்ட் மாதத்தின் பின்னரே மேற்கொள்வார் என்று தெரிகிறது. ஆரம்பத்தில் யூன் மாதத்தில் உலகச் சுற்றுப் பிரயாணத்தை ஆரம்பிக்கப்போவதாகவும், முதலில் இலங்கை வர இருப்பதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.



தி. மு. கழகத் தலைவர் அறிஞர் அண்ணா தமது உலக சுற்றுப் பிரயாணத்தை ஆகஸ்ட் மாதத்தின் பின்னரே ஆரம்பிப்பார் என்று தெரிகிறது. தமிழ் நாட்டு மாணவர்கள் மீண்டும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி ஒன்றை ஆகஸ்ட் மாதத்தின் முன்னர் நடாத்தப் போவதாக அறிவித்திருப்பதே இதற்குக் காரணம் என்று தெரிகிறது.

ஆரம்பத்தில் யூன் மாதத்தில் உலகச் சுற்றுப் பிரயாணத்தை ஆரம்பிக்கப்போவதாகவும், முதலில் இலங்கை வரவிருப்பதாகவும் செய்திகள் வெளியாகியது வாசகர்கள் அறிந்ததே.

அறிஞர் அண்ணா உலக சுற்றுப் பிரயாணத்திற்கான அக்காட்சிப் பத்திரத்தை (இண்டர் நாசனல் பாஸ் போட்) ஏற்கனவே பெற்று விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. எப்படியும் 1967ம் ஆண்டு இந்தியா பூராவிலும் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலுக்கு முன்னர் அறிஞர் அண்ணா உலகச் சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொள்வார் என்பதும், அவரின் பிரயாணத்திட்டத்தில் இலங்கையும் அடங்கியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கண்டதும் கேட்டதும்

மாயாவி

## பார்க்கச் சென்றவர் பதவி உயர்வை இழந்தார்

பொதுத்தேர்தல்முடிந்த பின்னர் தமிழரசுக் கட்சி வேட்பாளர்களாகப்போட்டியிட்டவர்களுக்கு வடமாகாணத்தின் முக்கிய தொகுதியொன்றில் மாபெரும் வரவேற்பு ஒன்று நடைபெற்றது பலரும்அறிந்ததே. இந்தவரவேற்பு நிகழ்ச்சியை சிறப்புற நடாத்துவதற்காக அத்தொகுதியைச் சேர்ந்த வெளியூர் வாசிகள் பலரும் ஒருவாரமாக ஊரில் தங்கியிருந்து ஒழுங்குகளை கவனித்து வந்தனராம். இச்சமயத்தில் தேர்தல் காரணமாக விடுமுறைபெறமுடியாதிருந்த ஒரு பொலீஸ் அதிகாரியும் விடுமுறையில் ஊருக்கு வந்திருந்தாராம்.

விடுமுறையில் வந்திருந்த பொலீஸ்அதிகாரி வேடிக்கை பார்க்கும் நோக்கத்துடன் தமிழரசு வேட்பாளர்களின் ஊர்வலத்திலும் கூட்டத்திலும் பார்வையாளராகச் சென்றிருந்தாராம்.

வரவேற்பு வைபவம் தடபுடலாக நடைபெற்றதாம். அத்தொகுதிமக்கள் திரண்டு சென்று இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டதாம் அத்தொகுதிப் பிரதிநிதியின் உள்ளத்தில் கொதிப்பை ஏற்படுத்தியதாம். வரவேற்பு நடாத்தியவர்கள் மீது வஞ்சம் தீர்க்கத் திட்டமிட்டாராம்.

திட்டத்தை அவரின் ஆதரவாளர்களுக்கு தெரியப்படுத்தி, இந் நிகழ்ச்சிகளில் யாராவது அரசாங்க ஊழியர்களும் கலந்துகொண்டார்களா என்ற விபரத்தைச் சேகரிக்க முயன்றார்களாம். அவர்களின் கண்ணில் பட்டவர் பாவம் பார்வையாளராகச் சென்ற பொலீஸ் அதிகாரியாம்,

அந்த பாராளுமன்ற உறுப்பினரின் முயற்சியால் அந்த பொலீஸ் அதிகாரி மூன்று வருடங்களுக்கு எத்தகைய பதவி உயர்வையும் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகப் பேசப்படுகிறது.

இவர்கள்தான் மேடையில் ஏறி ஒற்றுமைக்குரல் எழுப்பும் வீணர்கள்.

"பாராளுமன்ற தேனீர் சாலையில் ஒரேயொரு நாள் மட்டும் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டார நாயக்காவும் திருமதி சிறிமாவோவும் என்னுடன்சேர்ந்து தேனீர் அருந்தியிருக்கிறார்கள். அப்பொழுது மட்டும் தான் நான் அவர்களுடன் பேசியிருக்கிறேன். அதுவும் திருமதி சிறிமாவோ என்னைத் தேடி வந்தார். நான் திருமதி சிறிமாவோவைத் தேடிச் செல்லவில்லை. இதை வைத்துக்கொண்டு சிலர் இல்லாததையும் பொல்லாததையும் பேசுகிறார்கள். நான் மாவட்ட சபைகள் அமைக்கப்படுவதை எதிர்ப்பதாகவும் சுதந்திரக் கட்சியினருடன் சேர்ந்து சதிசெய்வதாகவும் கூறுகிறார்கள்." இப்படி திரு. வீ. வீ. யாழ்ப்பாணத்தில் பேசியிருக்கிறாராம்.

மாவட்டசபை அமைக்கப் படுவதற்கான எதிர்ப்பணியில் இவருக்கு உண்மையில் ஈடுபாடில்லையென்றால், எதற்காகப் பகட்டப்பட வேண்டும்? இதில் ஏதோ உண்மையிருப்பதாற்கானே அந்தரப்படுகிறார்'. இப்படி கூறினார்கள் அவரின் பேச்சைக்கேட்டுக்கொண்டுநின்ற வயோதிபர்கள் சிலர்.

ஆனால், சம்பந்தப்பட்ட இரு கட்சியினரும் எங்கே சந்திக்கிறார்கள். எத்தனை [illegible] சம்பந்தப்பட்டவர்கள் என்பது பொதுமக்களுக்குத் தெரியாதிருக்கலாம், சந்தர்ப்பம் ஏற்படும்போது அந்த உண்மைகள் வெளிவரவே செய்யும்.

அமைச்சர் திருச்செல்வத்தைப் பற்றி அபாண்டமான கதைகளைப் பரப்பும் முயற்சியில் ஒரு குழுவினர் தீவிரமாக இறங்கியிருக்கிறார்களாம். இவர்கள் பிற்பகல் ஐந்து மணி முதல் ஏழு மணி வரை யாழ்ப்பாணம் பஸ் நிலையப் பகுதியில் நின்று தங்கள் பிரச்சாரத்தை நடாத்துகிறார்களாம். இக்குழுவினர் ஒரு தலைவரின் கையாட்கள் என்றும் அவர்களில் தொழில் துறையில் அடியெடுத்து வைக்கும் இரண்டொரு சட்டவாதிகளும் ஒரு தமிழ் ஆசிரியரும் மூன்று நாலு பெரிய பணக்காரப் புள்ளிகளும் உள்ளார்கள் என்று தெரிகிறது.

இவர்களின் பிரச்சாரம் அடுத்த ஒருவார காலமாக நடைபெற்று வருவதாகவும், இதனால் சில குளிர்பானக்

(12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதருள் மாணிக்கம் நேரு

## பாரதத்தின் ஒரு சகாப்தம்

## அவரின் அரசியல் வரலாறு

இந்தியதுணைக் கண்டத்தின் முதலமைச்சராய் விளங்கி உலக அரங்கில் தனக்கென தனியிடம் பெற்று ''மாந்தருள் மாணிக்கம்'' என்று மகாத்மாவின் வாழ்த்துதலுக்கு உரியவராகி, பேரொளி வீசிய பெருந்தகை நேரு மறைந்து ஓராண்டு உருண்டு ஓடிவிட்டது. அவர் மறைந்தவுடன் அவர் பற்றி யாம் கட்டுரை வரைந்திருப்பின் அவரின் சிறப்பியல்புகள் தான் எம் சிந்தையை நிரப்பி உணர்ச்சி நிலையில் தான் அக் கட்டுரை உருவெடுத்திருக்கும். ஓராண்டிற்குள் மறைந்த ஒரு பெரு மகனைப் பற்றி உணர்ச்சிக்கு சிறிதும் இடம் கொடாது வெறும் அறிவு நிலையில் மதிப்பிடுதல் மிகக் கடினம். எனினும் முயற்சி திருவினையாக்கும் என்ற நம்பிக்கையில் முயலுவது நட்டமில்லையே.

### இந்திய விடுதலை இயக்கம்

இந்திய விடுதலை வரலாறு ஏறக் குறைய ஓர் நூற்றுண்டை உள் அடக்கியுள்ளது. 1857 இல் தொடங்கி 1947 இல் முடிவுற்றது என்று கூறின் அது தவறு காது. இந்த விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டுப் பணியாற்றிய மக்களின் எண்ணிக்கை எண்ணில் அடங்காது. தம் உயிரையே பணயம் வைத்து இந்திய விடுதலையை தம் வாழ்வோடு இணைத்துப் பிணைத்து வாழ்ந்து மறைந்த பெருமக்களின் தொகை பெரிதாக விரியும் எனினும் வீரபாண்டியன் கட்டபொம்மன், லோகமானிய திலகர், கோபால கிருஷ்ண கோகாலே, வ. உ. சிதம்பரம்பிள்ளை, லாலாலஜபதிராய், ராஜாஜி, சுபாஸ் சந்திரபோஸ், மகாத்மா காந்தி, யவர்கலால்நேரு போன்ற பெரும் தொண்டர்கள் - தலைவர்கள் நினைவு எம் நெஞ்சைவிட்டு என்றும் அகலாதிருக்கும். எனினும் மேற் குறித்த பலருள் காந்தியும், நேருவும் மக்களிடையே பெற்ற மதிப்பு—அன்பு தனித் தன்மை வாய்ந்தது. இந்தியா உள்ளளவும் இவ்விருவர் பேரும் நிலைத்து நிற்கும் என்ற கூற்றை ஏற்க மறுப்போரும் பல நூற்றுண்டுகளுக்கு இந்திய மக்களின் சிந்தனையை செயற்படுத்தும் ஆற்றல் இவ்விருவரின் பல துறைப் பணிக்கு உண்டென்பதை மறுக்கத் துணியார்.

### காந்தியும் நேருவும்

சாக்ரட்டீசின் வழி பிளேட்டோ, இராமகிருஷ்ணர் வழி விவேகானந்தர், என்றபடி மகாத்மாவின் வாரிசாக யவர்கலால் நேரு விளங்கினர். இதனல் மேற் குறித்த குரு சீடர்களிடையில் நூற்றுக்கு நூறு கருத்து ஒற்றுமை இருந்தது என்பதல்ல பொருள். ''எனக்கும் யவகர்லாலுக்குமிடையில் கருத்து வேற்றுமைகள் இருக்கலாம் ஆனல் எம் உள்ளங்கள் ஒன்று'' என்று காந்தி அடிகள் கூறிய கூற்று பொருள் பொதிந்த கூற்று. இவ்விருவர்களின் வாழ்வை, வாழ்வின் பணியை, [illegible] வின் நோக்கை ஒ[illegible] நுணுகி ஆராயின் பல ஒற்றுமைகளோடு, பல வேற்றுமைகளையும் காணக் கூடியதாக இருக்கும். எனினும் இவர்களிடை வெறும் ஆராய்ச்சிக்கு அப்பாற் பட்ட இதய இணைப்பு-உண்மையான அன்பு இருந்ததை யாம் மறுக்க முடியாது.

### சுபாஸ் உயிரோடு இருந்திருப்பின்

மகாத்மா காந்தி தனக்கு பின் நேருதான் இந்திய மக்களின் தலைவராக விளங்க வேண்டும் என்று விரும்பினர். எனது சட்ட வாரிசு நேருதான் என்று பல தடவை உறுதியாகக் கூறியுள்ளார். ஏறக் குறைய நேரு மக்களிடை பெற்ற அன்பை, பெரு மதிப்பை பெற்று விளங்கிய மற்றையவர் சுபாஸ் சுந்திர போஸ், அவர் விமான விபத்தில் சிக்கி உயிர் துறந்திராவிட்டால் நேருவோ, சுபாஷோ, காந்திக்குப் பின் இந்திய மக்களின் வாழ்வில் முதன்மை பெற்றிருப்பர் என்பதும்—

### "ஈழவேந்தன்"

இந்திய அரசியல் வரலாறு எப்படி மாறியிருக்கும் என்பதும் தர்க்கிக்கத்தக்க நல்ல கேள்வியாக விளங்கியிருக்கும். ஆனல் விதியின் விளையாட்டு காந்தி புகழ் ஏணியில் ஏறிக் கொண்டிருக்கையில் அவரோடு ஒத்த பெரும் புகழுடன் விளங்கிய திலகரின் உயிரைப் பறித்தது போல், நேருவுடன் போட்டியிடத்தக்க—கருத்து மோதுதலில் உச்ச கட்டத்தை உருவாக்கத்தக்க சுபாஸ் சந்திர போஸை இந்திய அரசியல் அரங்கில் இருந்து அகற்றி விட்டது. இந்நிகழ்ச்சிகள் இப்படியேன் நடந்ததென யாம் எம் இயற்கை அறிவைக் கொண்டு விளக்கம் கூறல் எளிதன்று.

### நேரு குடும்பம்

1917 இல் திலகரும் அன்னிபெசன்ட் அம்மையாரும் தொடக்கிய உள்நாட்டு ஆட்சி அவையில் சேர்ந்து பணியாற்றிய நேரு அவர்கள் 1964 வரை அதாவது அரை நூற்றாண்டு காலம் தனது எழுபத்தைந்து வயது வரை இந்திய அரசியல் வானில் சீலத்து நின்று பணி யாற்றிய பெருமையைத் தேடிக்கொண்டார். 1916ம் ஆண்டு நேருவைப் பொறுத்தவரையிலும், இந்திய அரசியலைப் பொறுத்தவரையிலும், ஒரு முக்கிய திருப்பம் என்று கூறின் மிகையாகாது. 1916 இல் தான் நேரு கமலாவை மணந்தார். அதே ஆண்டில் தான் நேரு முதன் முதலில் காந்தியடிகளைச் சந்தித்து அவரினல் ஆட்கொள்ளப்பட்டார். உலகில் பொதுவாக தந்தை காட்டும் வழியில் மக்கள் செல்வது இயல்பு. ஆனல் நேரு குடும்பத்தைப் பொறுத்தவரை யவகர்லால் நேருவின் வழியில் அவரின் தந்தை மோதிலால் நேரு சென்று இந்திய விடுதலை[illegible] வேறு குடும்பம் முழுதுமே அரசியலில் ஈடுபட்டு தம் செல்வம் சிறப்பு அனைத்தையுமே இந்திய விடுதலைக்கு அர்பணித்தது இது வரலாற்றில் குறிப்பிடத்தக்க பெரும் நிகழ்ச்சி.

### நேருவின் விடுதலைப் பணியும் வரைந்த நூல்களும்

நேருவின் விடுதலை இயக்கப் பணியை சுருக்கி ஆராயின் இந்திய விடுதலைக்காக தன் உயிரையே துச்சம் என



மதித்து அவர் போராடிய போராட்டங்கள் பல என்பதை நாம் நினைவில் கொள்ளல் வேண்டும். இராணுவத்துடனும் நகரக்காவலர்களிடமும் (பொலீசுடனும்) அவர் வாங்கிய அடியையும் உதையையும் இன்று நினைக்கின்ற போதுகூட எம் கண்களில் நீர் பெருகுவதை தடுக்க முடியாது. அவர் நாட்டின் விடுதலைக்காக ஒன்பது தடவை சிறை சென்று ஏறக்குறைய தன் வாழ்வின் ஒன்பது ஆண்டுகளை சிறையில் கழித்தார். சீரும் சிறப்பும்மிக்க குடும்பத்தில் தோன்றிய நேரு அவர்கள் கவலை என்பதே யாதென்று அறியாத அப் பெருமகன் சிறையில்பட்ட அல்லல்கள், தொல்லைகள் சொல்லும் தரத்தன்று. எனினும் அவரின் சிறை வாழ்வு இலக்கிய உலகைப் பொருத்தவரை மாபெரும் வெற்றியாக அமைந்துவிட்டது. ''என் வரலாறு'' ''இந்தியாவைக் கண்டு பிடித்தல்'' உலக வரலாற்றின் ஒளிக்கதிர்கள் முதலிய அவரின் அரிய நூல்கள் அனைத்தும் அவரின் சிறை வாழ்வில் மலர்ந்தவை இதை நினைவிற் கொண்டு தான் நேரு அவர்கள் அமெரிக்கா சென்ற போது ஒரு அமெரிக்க மாது ''உங்களை நான் சிறையில் அடைத்து வைத்திருப்பதை விரும்புகின்றேன்'' என்று கூறினர். நேரு காரணம் கேட்டதற்கு ''நீங்கள் சிறையில் இருந்தால் சிறந்த நூல்கள் எழுதுவீர்கள் என்று புன்முறுவலோடு பதில் அளித்தார். மேற்குறித்த நூல்கள் அனைத்தும் போதிய துணை நூல்களின் உதவியின்றி தன் நினைவாற்றலைக் கொண்டு எழுதப்பட்டன என்பதை நினைக்கும் போது எம் வியப்பு பன்மடங்கு பெருகுகிறது. உயர்ந்த சிந்தனையின் ஊற்ருக உள்ளம் உருக்கும் சொற்றொடர்களோடு, சொல்லாட்சித் திறன் அமைய பல நூற்றுண்டு காலம் கழிந்துவரும் எம் வழித்தோற்றல்கள் கூட உள்ளத்துடிப்போடு படித்து உயர்வுபெறும் முறையில் அவை அமைந்துள்ளன. சாகா இலக்கியங்களுக்கு சான்று அவை எனின் அதை மிக்கூற்று என்று ஒதுக்க முடியாது.

### பேச்சுத்திறன்

நேருவின் பேச்சுத்திறன் பற்றி சிறிது சிந்தித்தல் நலம் உலகப் பெரும் பேச்சாளர் வரிசையில் நேருவுக்கு இடம் உண்டோ என்ருல் உண்டு என்று அறுதியிட்டுக் கூறமுடியாது. இங்கிலாந்து அரசியலில் புகழ் பெற்று விளங்கிய எட்மண்ட்பேர்க், வின்சண்ட் சேர்ச்சில்போன்ருே அல்லது இந்திய அரசியலில் ஒளி விட்டு விளங்கிய சிறீனிவாச சாத்திரி, சரோஜினி நாயுடு போன்ருே பெரும் சொற் செல்வர் என்று நேருவை யாம் கணிக்க முடியாது எனினும் ஆழமான கருத்துக்களை உள்ளம்தொடு முறையில் எடுத்துரைப்பதில் நேரு வெற்றி கண்டார் என்று யாம் கூறமுடியும். மகாத்மாவுக்கு அடுத்த நிலையில் நேரு பேசும் கூட்டங்களில் தான் மக்கள் பல்லாயிரமாகப் பெருகினர்கள். காந்தியோ, நேருவோ பேசிய பேச்சுக்கள் அனைத்தும் பொதுமக்களுக்கு புரிந்திருக்கும் என்று யாம் கூற முடியாதெனினும் காந்தியையும், நேருவையும்நேரில் காண்பதில் மக்கள் காட்டிய ஆர்வம், அடைந்த மகிழ்ச்சிமனநிறைவவெறும் சொற்களில் அடக்கி எழுத முடியாது. பிரித்தானிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து3-11-40ல் கொறப்பூர்(Gorakhpur) நீதிமன்றத்தில் வாதிட்ட முறையும் 14-8-47ல் இந்தியாவின் விடுதலை யொட்டியும் 30-1-48ல் காந்தி அடிகள் மறைந்த போதும் அண்மையில் சீன இந்தியாவை தாக்கிய போதும் அவர் பேசிய பேச்சுக்கள் எம் நெஞ்சை விட்டு எளிதில் மறைய முடியாது.

### குடியாட்சிப் பண்பில் ஊறிய ஆட்சியாளர்

விடுதலை வீரர்கள் அனைவரும் சிறந்த ஆட்சியாளர் என்று கூறமுடியாது. ஆனல் நேரு அவர்களோ இப்பொது விதிக்கு மாறுபட்டவர். இந்திய விடுதலைப் போராட்டத்தில் தன் வீர உணர்ச்சியை காட்டிய நேரு அவர்கள் 1947 தொட்டு 1964 வரை ஏறக்குறைய17 ஆண்டுகள் வரை இந்தியாவின் முதல் அமைச்சராய் விளங்கி இந்தியாவின் பல் துறை முன்னேற்றத்திற்கும், உலக அமைதிக்கும் பெரும் பணி ஆற்றினர் பொறுப்பு வாய்ந்த பதவியை ஏற்று சீராக சிறப்பாக நடாத்தும் ஆற்றல் தனக்கு உண்டென்பதை நேரு தன் இளமையிலேயே காட்டிவிட்டார். 1923ம் ஆண்டு அதாவது அவரின் 34ம் வயதில் அவருக்கு இந்திய தேசிய காங்கிரசின் செயலாளர்ப் பதவி அளிக்கப்பட்டது. அத்துடன் 1929ல் அவரின் 40வது வயதில் இந்திய தேசீய காங்கிரசின் தலைமைப் பதவியும் இவருக்கு கொடுக்கப்பட்டு பொறுப்புணர்ச்சியோடு பணியாற்றினர்.

(14-ம் பக்கம் பார்க்க)

## இலக்கிய உலகு

-''வேதாளம்''-

### 'பிரளயம்'

கம்யூனிச முற்போக்கு எழுத்தாளர்களுக்கே ஒரு கேள்விக் குறியாக விளங்கும் சிறுகதை எழுத்தாளர் திரு. ஜெயகாந்தன் நல்ல சிறு கதைகளோடு சில கட்டுரைக் கதைகளும் எழுதுவதில் வல்லவர். கம்யூனிசம் என்பதே ஒரு சந்தர்ப்பவாதம்தான் இலங்கையில் இது மிகத்தெளிவு. கம்யூனிசவாதி என்று தன்னைக் கூறிக் கொள்ளும் ஜெயகாந்தன் கம்யூனிசக் கோட்பாடுகளைப் பிரதிபலிக்காத பல சிறு கதைகளை எழுதியது சந்தர்ப்பவாதத்தால் தான். 'முத்திரை'கள் பொறிக்கப்பட்ட அவரது கதைகள் தாம் அவரை நாடறிய வைத்திருக்கிறது. ஆனந்த விகடனின் கோட்பாடுகளுக்கு இணங்க, 'முத்திரை'களைப்பெற்ற அவரது கதைகள் தாம் கம்யூனிச முற்போக்கு எழுத்தாளர்களுக்கு அவரை ஒரு கேள்விக் குறியாக்கிவிட்டது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு கம்யூனிச எழுத்தாளர்களது அந்தரங்கக் கூட்டத்தில் திரு. ஜெயகாந்தன் நல்ல திட்டுக்களை வாங்கிக் கட்டிக்கொண்டார். இக்கூட்டத்தில் ஜெயகாந்தனுக்கு அழகான ஒரு 'முத்திரை' பொறிக்கப்பட்டது. என்னவென்று தெரியுமா? 'முதலாளித்துவ அடிவருடி எழுத்தாளர்' என. ஒருவரைப் போற்றுவதும், பின்னவரைத் தூற்றுவதும் கம்யூனிச வாதிகளிற்கேயுரிய வரப்பிரசாதம்.

இந்த ஜெயகாந்தன் இருக்கிருரே, அவர் அண்மையில் வெளிவந்த ஒரு புத்தாண்டுமலரில் நான்கு சிறுகதைகளை ஒரேயடியாக எழுதி இருக்கிருர். சேரி மக்களின் மனித உணர்வுகளையும், பழக்க வழக்கங்களையும்,பிரச்சனைகளையும் இச் சிறுகதைகள் நன்கு சித்தரித்துக் காட்டுகின்றன. ஆனல் இதிலொரு அதிசயம் என்னவென்ருல், இந்த நான்கு சிறுகதைகளுக்கும் 'பிரளயம்' என்று தலைப்பிட்டதோடு நில்லாமல் 'முழு நாவல்' என்றும் குறிப்பிட்டுள்ளமை தான்! நான்கு சிறுகதைகள் நாவலாக முடியுமா?

பாவம், ஜெயகாந்தன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1965 மே மாதம் 30-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலைபேசி எண் - 3411 த. பெ. 1183


## என்னே நெஞ்சழுத்தம்!

சுதந்திரனைக் கண்டால் சில அரசியல்வாதிகளுக்குஒரே நடுக்கம்! இதற்கு இரு காரணங்கள் உண்டு. ஒன்று மக்களிடம் சுதந்திரன் பெற்றுள்ள பேராதரவு. மற்றொன்று பசுத்தோல் போர்த்து மக்கள் மத்தியில் நடமாடும் புலிகளின் உண்மை உருவத்தை சுதந்திரன் அம்பலப்படுத்துவது. எனவே சிலர் சுதந்திரனைத் தாக்கத் தொடங்கியுள்ளனர். இத்தாக்குதலின் ஒரே நோக்கம் தங்களின் அரசியற் பித்தலாட்டங்களை மறைத்துக்கொள்வதே.

திரு. பொன்னம்பலத்துக்கும் அவரது சகாக்களுக்கும் 'சுதந்திரன்' என்றால் எட்டிக்காய்தான். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அவர்கள் சுதந்திரன் மீது பாய்கின்றனர். பொதுமேடைகளில் கன்றைபின்றை யென்று திட்டுகின்றனர். அறிக்கைமூலம் கண்டனக் கணைகளை ஏவுகின்றனர். காரணம், அவர்களின் செயல்களையும் அரசியற் தந்திரங்களையும் பித்தலாட்டப் பிரசாரங்களையும் இந்த ஏடு மக்கள்மன்றத்தில் தோலுரித்துக் காட்டுவதே.

இத்தகைய தாக்குதலால் சுதந்திரனின் வாயை அடைத்துவிட முடியாது. அன்றைய அரசாங்கம் அடக்குமுறைகளைக்கூட ஏவிப்பார்த்தது. அதற்கே அஞ்சாத சுதந்திரன், பதுங்கிப் பதுங்கித் தலையை நீட்டும் தற்காலிக அரசியல்வாதிகளின் சலசலப்புக்கும் உருட்டல் மிரட்டலுக்குமா அஞ்சிவிடப்போகிறான்?

'ஒருவரை ஒருவர் தாக்கிக்கொள்ளும் சமயமல்ல இது. தேசிய ஒற்றுமைக்காக வழிகாண்பதே இப்பொழுது முக்கிய வேலையாகும்' என்று தமிழரசுக்கட்சிப் பொதுக்காரியதரிசி விடுத்த அறிக்கைக்குப் பதிலளிக்குமுகமாக உடுப்பிட்டி திரு. சிவசிதம்பரம் விடுத்துள்ள அறிக்கையில் 'தமிழரசுக்கட்சி சுதந்திரன்மூலம் தமிழ்க் காங்கிரசைத் தாக்குவதை நிறுத்தவேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

திரு. சிவசிதம்பரம் அவலை நினைத்து உரலை இடிக்கிறார். தமிழரசுக்கட்சியைத் தாக்க நினைத்து, சுதந்திரனைத் தாக்கிவிட்டார். தமிழரசுக்கட்சி தமிழ்க் காங்கிரசைத் தாக்குவதென்றால் அதனைச் 'சுதந்திரன்' மூலம் செய்யவேண்டியதில்லை. நேர்முகமாகவே தாக்குதலைத் தொடுக்கலாம். அந்த அளவுக்குத் துரோகங்களையும் இமாலயத் தவறுகளையும் செய்தவர்கள்தான் தமிழ்க் காங்கிரஸ் தலைவர்கள்.

சுதந்திரன்மூலம் தமிழரசுக்கட்சி எப்படித் தாக்க முடியுமென்பதைத் திரு. சிவசிதம்பரம் விளக்கவில்லை. சுதந்திரன் ஒரு சுதந்திரமான ஏடு. 'சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்' என்னும் நிறுவனத்தைச் சேர்ந்தது. தமிழரசாரின் கட்சிப் பத்திரிகையல்ல இது.

காங்கிரசாரின் குற்றங்குறைகளையும் தவறுகளையும் எந்த ஏடு சுட்டிக் காட்டினாலும், அது தமிழரசுக் கட்சியின் ஏடு என்பது திரு. சிவசிதம்பரத்தின் முடிவு. சுதந்திரன் தமிழரசுக் கட்சி ஏடாக அவர் கண்ணில் படுவதற்கு அதுதான் காரணம். காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்!

சுதந்திரன் கடந்த 18 ஆண்டுகளாகத் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காகப் போராடி வருகிறான். இப்போராட்டப் பாதையிலே பல இன்னல்கள் தோன்றின. சோதனைகள் குறுக்கிட்டன. எதற்கும் அஞ்சவில்லை. தனது இலட்சியப் பாதையிலே தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருக்கிறான். சுதந்திரனின் தொண்டு மகத்தானது.

தமிழ் பேசும் மக்களிடையே விழிப்பை ஏற்படுத்தி, விடுதலை உணர்ச்சியை ஊட்டி வளர்த்த பெருமை சுதந்திரனுக்கு உண்டு. சுருங்கக் கூறின், சுதந்திரன் தமிழ் பேசும் மக்களுடன் பிணைந்து பிணைந்து நிற்கிறான். சுதந்திரப் போர்க்களத்திலே மக்களின் கையிலுள்ள பலம் வாய்ந்த ஓர் ஆயுதமே இந்த ஏடு. இந்த ஆயுதத்தை மக்களின் கையிலிருந்து பிடுங்கி எறிய இனி எந்தச் சக்தியாலும் முடியாது.

சுதந்திரன் அஞ்சா நெஞ்சம் கொண்டவன்—துணிவு மிகுந்தவன். அரசியற் பித்தலாட்டங்களை அம்பலப்படுத்தி, சுயநலப் புலிகளிடமிருந்து தமிழ் பேசும் மக்களைப் பாதுகாக்கும் பாதுகாவலன். என்ன நேரிடினும், தனது கொள்கையினின்று இம்மியும் நழுவாத பெருமை சுதந்திரனுக்கு மட்டுமே உண்டு. அரசியல் வாதிகளின் தவறுகளையும், சூழ்ச்சிகளையும், சதிகளையும் அவ்வப்பொழுது மக்களிடம் விளக்கிக்கூறி, எச்சரிக்கை செய்வதில் சுதந்திரன் என்றுமே தவறியது கிடையாது. இந்த எச்சரிக்கையால் அவர்களுக்கு மக்களை ஏமாற்ற முடியவில்லை. எனவே அவர்கள் சுதந்திரன் மீது சீறிப்பாய்கின்றனர்.

திரு. பொன்னம்பலமும், அவரது சகாக்களும் அவ்வப்பொழுது பல்வேறு முகமூடிகளை அணிந்து மக்கள் முன்வந்து ஆடியபோதெல்லாம், அந்த முகமூடிகளை நிர்தாட்சண்யமாகக் கிழித்தெறிந்தவன் சுதந்திரனே. அவர்களின் மக்கள் — விரோதச் செயல்களை அவ்வப்பொழுது சுதந்திரன் அம்பலப்படுத்தியதால் மக்கள் அவர்களின் வேடத்தைக் கண்டு ஏமாறவில்லை. கடந்த 17 ஆண்டுகளில் அவர்கள் செய்த ஒவ்வொரு துரோகச் செயலும் சுதந்திரன்மூலம் அம்பலத்துக்கு வந்துள்ளது. எனவே அவர்கள் சுதந்திரனைக் கண்டு நடுநடுங்குகின்றனர்.

சுதந்திரனின் இலட்சியம் தமிழரசுக் கட்சியின் கொள்கைகளாய் இருப்பதால், இது தமிழரசாரின் கட்சிப் பத்திரிகையாகிவிட்டது. சுதந்திரமாகக் கருத்துக்களை வெளியிடும் சுதந்திர ஏடே சுதந்திரன். விடுதலைக்காகப் போராடும் சுதந்திரன் விடுதலைப் போராட்டங்களையும், விடுதலை வீரர்களையும் ஆதரிப்பதும், எட்டப்பர்களையும் துரோகிகளையும் வெறுத்தொதுக்குவதும் ஆச்சரியமன்று. தமிழ் பேசும் மக்கள் ஓரணியில் திரண்டுநின்று போராட வேண்டுமென்பதே சுதந்திரனின் கோரிக்கை. மக்களிடையே இன்று நிலவும் ஒற்றுமையை உருவாக்கியதில் சுதந்திரனுக்குப் பெரும்பங்கு உண்டு.

மக்களின் ஒற்றுமைக்காகப் போராடி ஒற்றுமையைப் பெருமளவு உருவாக்கிய ஒரு பத்திரிகையைப் பார்த்து ஒற்றுமை ஏற்பட அது தன் வாயை மூடிக்கொள்ள வேண்டுமென்று கூறுகிறார் திரு. சிவசிதம்பரம். என்னே நெஞ்சழுத்தம்!

சுதந்திரன் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரல். இக்குரல் என்றென்றும் ஒலித்துக்கொண்டுதானிருக்கும். அதனால் தங்களின் முகமூடி கிழிபடுகிறதே என்று அங்கலாய்ப்பவர்களுக்கு அதிலிருந்து தப்புவதற்கான ஒரே வழி அரசியல் அரங்கிலிருந்தே ஓடிப்போவதே!

பொன்னம்பலம் கட்சியும் தேசிய அரசாங்கத்தில் சேர்ந்திருப்பதால் தமிழரசுக் கட்சி அவர்கள்மீது கடுமையான தாக்குதலைத் தொடுக்கவில்லை. ஆனால் அவர்களோ இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி கட்சியைக் கன்மூடித்தனமாகத் தாக்குகின்றனர். ஒற்றுமையைக் குலைக்கும் இத் [illegible] விட்டுவைக்க மாட் [illegible] மாகக் கூற விரும்புகின்றோம்.

## வட-கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்றுக

பூநகரிப் பகுதியிலுள்ள நரியிறவு என்றஇடத்தில் மீன்பிடிப்பதற்காகச் சென்றிருந்த மண்டைதீவைச் சேர்ந்த ஆறு மீனவர்கள் இலங்கை இராணுவத்தின் மிருகத்தனமான தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்கள். இதேபோன்று மன்னார் தொகுதியைச் சேர்ந்த பேசாலையென்ற இடத்திலும் போலீசார் பொதுமக்களைத் தாக்கினார்களென்றும் தெரிகிறது.

பூநகரியில் இராணுவத்தின் தாக்குதலுக்கு இலக்கானவர்களை சட்டவிரோத குடியேற்றக்காரர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் கிளிநொச்சிப் பொலீசார் 2000 ரூபா பிணையில் விட்டிருக்கிறார்களாம். இரவு நேரங்களில் வீதியில் நடமாடும், இந்நாட்டில்பிறந்துவளர்ந்த தமிழ் மக்களை 'கள்ளத் தோணியா' என்று கேட்டு பொலீசார் தாக்குகிறார்களாம் பேசாலையில்.

இராணுவத்தினரும் பொலீசாரும் கடந்த சில ஆண்டுகளாக தமிழ்பேசும் மக்களை மிருகத்தனமாகத் தாக்குவதையே தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். பழைய அரசாங்கத்தின் காலத்தில் மன்னார் முதல் முல்லைத்தீவுவரை இப்படியான சம்பவங்கள் பல நடைபெற்றுள்ளன.

### பழைய சம்பவங்கள்

பல இடங்களில் தமிழ் பெண்களின் கற்பைச் சூறையாடும் முயற்சியிலும் இராணுவவீரர்கள் முனைந்திருக்கிறார்கள்என்று அப்பொழுது செய்தி அடிபட்டது. மீனவர்களின் உடமைகளைப் பலசந்தர்ப்பங்களில் நாசப்படுத்தியிருக்கிறார்கள். ஒரு சில இடங்களில்மட்டும் இராணுவத்தினரின் கொடுமையைத் தாங்கமாட்டாத பொதுமக்கள் ஒன்று இரண்டு இராணுவத்தினரைப் புறமுதுகிடச் செய்திருக்கிறார்கள்.

பழைய அரசாங்கத்தின் காலத்தில் வட—கிழக்கு மாகாணம் யுத்த நேரத்தில் இராணுவம் ஆக்கிரமிப்புச் செய்து ஆட்சி நடாத்தும் பிரதேசம் போன்றே கணிக்கப்பட்டு வந்தது. வட்டுக்கோட்டைப் பிரதிநிதி, மன்னார் பிரதிநிதி போன்றவர்கள் இராணுவத்தினரின் அட்டூழியங்களைப் பாராளுமன்றத்தில் பலமுறை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அன்றைய அரசாங்கம் இப்பிரச்சினையைத் தட்டிக்கழித்துக் கொண்டே வந்தது.

### மக்கள் நம்பினர்

தேர்தல் வந்து புதிய அரசாங்கம் உருவானதும் இராணுவத்தினரின் அட்டகாசம் குறைந்திருந்தது. வட—கிழக்கு மாகாணங்களிலிருந்து இராணுவத்தினர் வெளியேற்றப்படலாம் என்ற நம்பிக்கையும் தமிழ் பேசும் பொது மக்கள் மத்தியில் நிலவியது. இராணுவத்தை வெளியேற்ற முயற்சி எடுக்கப்படுமென்று திரு. துரைரத்தினம் அவர்களும் பொதுக் கூட்டமொன்றில் கூறியிருந்தார்.

ஆனல், மீண்டும் பழைய கதை தொடங்கி விட்டது. தமிழ் பேசும் மக்கள் மீது வஞ்சம் தீர்க்க இராணுவத்தினரும் பொலீசாரும் தலைப்பட்டு விட்டார்கள். அன்றும்—இன்றும் இராணுவத்தினரதும் பொலீசாரினதும் தாக்குதலுக்கு இலக்காகிய தமிழ் மக்களை கள்ளத் தோணிகள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே கைது செய்ததாக காரணம் கூறப்படுகிறது.

**சுதந்திரன் அரசியல் விமர்சகர்**

### கள்ளத்தோணிகளும் மனிதர்களே

உண்மையில் கள்ளத் தோணிகளைத்தான் கைது செய்தாலும் அவர்களை மிருகத்தனமாகத் தாக்க வேண்டும் என்று சட்ட முறைகள் ஏதாவது உண்டா? கள்ளத் தோணியில் வருபவர்கள் மனிதர்களில்லையா? அவர்கள் தவறு செய்பவர்களாக இருந்தாலும், அவர்களை மனிதத்தன்மையில் நடாத்தக் கூடாதா? இராணுவத்தினரதும் பொலீசாரினதும் கடமை மனிதர்களை மிருகத்தனமாகத் தாக்குவதா?

வட மாகாணத்தில்கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக கள்ளத்தோணி யென்ற பெயரில் கைது செய்யப்பட்டவர்களில் எத்தனை பேர் உண்மையான கள்ளத்தோணிகள்? இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்களில் நூற்றுக்கு ஐந்து பேர்தானும் கள்ளத் தோணிகள் இல்லையே!

### கைதானவர்கள் தொகை என்ன?

எனவே இராணுவத்தினரதும் பொலீசாரினதும் செயல் தேவையற்ற, பயனற்ற நடவடிக்கையென்பதா அல்லது திட்டமிட்டுத் தமிழ் பேசும் மக்களைச் சித்திரவதை செய்யும் முயற்சியா என்பதை யாவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

1957ம் ஆண்டுக்கு முன்னரும் கள்ளத் தோணிப் பிரச்சினை இருக்கவே செய்தது. அப்பொழுது பொலீசார் கிராம அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இப்பிரச்சினையை. சமாளித்தார்கள். பின்னர் கடற்படையினரிடம் இப்பொறுப்பு கொடுக்கப்பட்டது. 1960ம் ஆண்டுக்குப் பின்னரே இராணு

(9-ம் பக்கம் பார்க்க)

## பிறந்த நாள்

அன்பார்ந்த வாசகர்களுக்கு,

இவ்விதழில் தனது 19-வது வயதைத் தொடங்கும் உங்கள் அன்புக்குரிய 'சுதந்திரன்' பத்திரிகை வாழ்த்துக்கோரி உங்கள் முன் வீரநடைபோட்டு வருகிறது. தமிழ்பேசும் மக்களின் வாழ்த்தைப் பெறுவதற்கு எந்தப் பத்திரிகைக்கும் இல்லாத உரிமை சுதந்திரனுக்கு உண்டு.

கடந்த 18 ஆண்டுகளாக இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் வாழ்விலும் தாழ்விலும் இரண்டறக்கலந்து அவர்களின் தனியொரு உரிமைக் குரலாக சுதந்திரன் ஒலித்துக்கொண்டு வருகிறது. இலங்கைவாழ் தமிழ் பேசும் இனத்தின் விடுதலையே சுதந்திரனின் இதயகீதம். இதற்காக சுதந்திரன் தன்னால் இயன்றவரை உழைத்து வருகிறது.

இனத்தின் விடுதலைக்கான பணியில் சுதந்திரன் தன்னை ஈடுபடுத்திக் கொண்டமையினால் சிங்களவெறிபிடித்த முன்னைய அரசின் அநாகரிகமான அடக்குமுறைச் சட்டத்திற்கு பலதடவை இலக்காகியது. அடக்குமுறைச் சட்டத்தை நீட்டி சுதந்திரனின் வளர்ச்சியை, வேகத்தைக் கட்டுப்படுத்திவிட முன்னைய அரசு முனைந்தது. என்றாலும் தடைகள் பலவற்றையும் வெற்றியுடன் தாண்டி தனது கடமையைக் குறைவின்றி செய்துவருகிறான் சுதந்திரன்.

தமிழ் பேசும் இனத்தின் விடுதலை வாழ்வுக்கு குந்தகம் விளைவிப்போரை சாடி சந்தியில் இழுத்து நிறுத்த சுதந்திரன் என்றுமே தவறியதில்லை. அதே நேரத்தில் இனத்தின் விடுதலைக்கு— உயர்வுக்கு ஆக்கபூர்வமான பணிகளைச் செய்பவர்கள் எங்கிருந்தாலும் அவர்களின் சேவையைப் பாராட்டி மக்கள் அரங்கிற்கு அறிமுகப்படுத்தவும் சுதந்திரன் தவறியது கிடையாது.

அரசியலில் ஆன்மீகத்தைக் கலந்து நேர்மையுடன் தமிழ் பேசும் இனத்தின் விடுதலைக்கு தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட தியாகசீலன் இலங்கைவாழ் தமிழ் பேசும் தேசிய இனத்தின் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகத்தையும்அவர் வழியையும் சுதந்திரன் பெருமையுடன் நோக்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்கே 20 வடக்கே 40

'எத்த' பத்திரிகை 25-5-65ந் திகதி பின்வருங் காணும் செய்தியை வெளியிட்டுள்ளது:-

'தேசிய வீடமைப்புத் திணைக்களம் யு. என். பி.—சமஷ்டிக் கொள்கையைச் சரிவர அமுல் நடத்தத் தொடங்கியுள்ளது. காலி, கண்டி, அனுராதபுரம் ஆகிய இடங்களிலுள்ள இத்திணைக்களத்தின் கிளை அலுவலகங்களால் பெரும் நஷ்டம் ஏற்படுவதால் அவை களை மூடிவிட வேண்டுமென முன்னுள் அரசாங்கம் முடிவுசெய்தது. அதற்கேற்ப காலி அலுவலகம் அண்மையில் மூடப்பட்டது.

7-கட்சி கூட்டரசாங்கம் பதவிக்குவந்து வடபகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்த வீடமைப்பு அமைச்சர் ஜனுப் முகம்மது யாழ்ப்பாணத்தில் வீடமைப்புத் திணைக்களத்தின் கிளை அலுவலகமொன்றைத் திறக்கும்படி கட்டளையிட்டுள்ளார். யூன் மாத மத்தியில் இக்கிளையைத் தொடங்குவதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெறுகின்றன.

இதுவரை 1000க்கு 5வீதம் கூட வீடமைப்பு மனுப்பத்திரங்களை அனுப்பாத யாழ்ப்பாணப் பகுதியில் கிளை திறக்கவேண்டிய தேவையென்ன? 'நமது ஆட்களுக்குச் சலுகைகாட்ட வேண்டும்' என்ற கொள்கைக்கிணங்க வீடமைப்பு திணைக்களத்தின் சமஷ்டிக் கோஷ்டியை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பவா? இல்லையேல், நஷ்டத்தில் நடைபெறும் கிளை அலுவலகங்களின் எண்ணிக்கையைக் கூட்டுவதின் மூலம் அரசாங்கத்தை 'வங்கரோத்து' வாங்கச் செய்யவா என்று கேட்கப்படுகிறது.

சிங்களப் பிரதேசத்தில் ஒருவருக்கு ஒரு வீடு அமைத்துக் கொள்வதற்கு இந்தத் திணைக்களம் கொடுக்கும் மிக அதிகமான காணிஅளவு 20 பர்சஸ்தான். ஆனல் 7-கட்சி கூட்டு ஆட்சிக்கு வந்தவுடன் சமஷ்டிக்கட்சியின் விசேட கோரிக்கையின்மீது யாழ்ப்பாணப் பகுதி மக்களுக்கு வீடு அமைக்க 40பர்சஸ் வீதம் கொடுப்பதற்கு வீடமைப்பு திணைக்களக் கமிஷனர் உத்தரவிட்டுள்ளார்.'

## த. கா....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வின் பேச்சுக்குமிடையே நெருங்கிய தொடர்பிருப்பதாகவும் கூறப்படுகிறது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய திரு. பொன்னம்பலம் தான் ஓரேயொரு நாள் மட்டுமே செனிமாவோவுடன் சேர்ந்து தேநீர் அருந்தியதாகக் கூறியுள்ளார், அப்பொழுது அவர்களிடையே உண்மையில் நடந்த சம்பாஷணை என்ன என்று அரசியல் வட்டாரங்களில் கேட்கப்படுகிறது.

தமிழரசார் சுதந்திரக் கட்சியினரை ஏமாற்றிவிட்டார்கள் என்றும் அவர்களைப் பழிவாங்க சுதந்திரக்கட்சியினர் தமிழ் காங்கிரசிற்குத் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்வார்களென்றும் அரசியல் வட்டாரங்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாண மாநகரசபையின் முதல்வரைத் தெரிவு செய்யும் விடயத்தில் தமிழரசாருக்கும் தமிழ் காங்கிரசாருக்குமிடையில் ஒரு கனவான் ஒப்பந்தமும் உண்டு என்பது குறிப்பிடத் தக்கது.

# எம். பி. களின் சம்மதத்துடன் சிங்கள ஆசிரியர்கள்

## சிங்களப் பத்திரிகை கூறுகிறது

தமிழ் பிரதேசங்களின் பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்மதத்தின்பேரில் அந்தந்தத் தொகுதிகளிலுள்ள அரசாங்கப் பாடசாலைகளுக்குச் சிங்கள ஆசிரியர்களை நியமிப்பதென கல்வி அமைச்சர் முடிவு செய்திருப்பதாக தவஸ (25-5-65) ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

"இந்த முடிவுக்குக் காரணம், சிக்கலின்றி இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதே. வட—கீழ் மாகாணங்களில் நியமனம் செய்வதற்காக கல்வி இலாகா கடந்தகாலத்தில் இரு பரீட்சைகள் நடத்தியதெனினும் இதுவரை யாரும் நியமிக்கப்படவில்லை.

தத்தம் தொகுதிகளிலுள்ள பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர்களை நியமிக்க விருப்பம் தெரிவித்துள்ள சில தமிழ் எம். பி.கள் தங்களுக்குத் தேவைப்படும் சிங்கள ஆசிரியர்களின் எண்ணிக்கையைக் கல்வி இலாகாவுக்கு அறிவித்தால் அதுபற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க அமைச்சர் எண்ணியுள்ளார்.

அந்தப் பிரதேசங்களிற் பணிபுரிய பரீட்சையிற் தேறிய அநேகர் ஆவலுடன் காத்திருக்கின்றனர்" என்று அச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### இலாபத்தில் பங்கு

"அரசாங்க நிறுவனங்களிலும் தனியார்துறை நிறுவனங்களிலும் இலாபத்தின் ஒரு பகுதியை சிப்பந்திகளிடையே பங்கிட்டுக்கொடுக்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக முதலாளிப் பத்திரிகைகள் பிரசாரம் செய்தன.

எனினும் மாதம் ரூபா 200க்கு மேல் சம்பளம் பெறும் ஒவ்வொரு சிப்பந்தியிடமிருந்தும் 100க்கு 3 வருமானவரி அறவிடுவதற்கு 7 கட்சிக் கூட்டரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மாதம் ரூ. 200க்கு மேல் வருமானம் பெறும் ஒவ்வொரு சிப்பத்தியினதும் வருமானத்தின் முழுவிபரம் இவ்வாரத்திலிருந்து ஒரு மாதத்துள் தேசிய வருமான வரி இலாகாவுக்குத் தெரிவிக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது".

"எத்த"— (24-5-65)

# பாடசாலைகளுக்கு உதவி நன்கொடை

'தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான பாடசாலைகளாக இதுவரை நடாத்தப்பட்டுவரும் கத்தோலிக்கப் பாடசாலைகளுக்கு அரசாங்கத்திடமிருந்து நன்கொடை உதவிப்பணம் பெறுவதற்கான ஓர் இயக்கம் இரகசியமாக நடைபெறுகிறது. பாடசாலைகளை அரசாங்கம் கையேற்றபொழுது இப் பாடசாலைகளைத் தனிப்பட்ட சமயப் பாடசாலைகளாக நடத்த கத்தோலிக்க தேவாலயம் முன்வந்தது.

இதுவரை இந்தப் பாடசாலைகளில் நிறுவப்பட்டுள்ள சேமநலச் சங்கங்கள் வாயிலாகப் பெற்றோரிடமிருந்து பணம் வசூல் செய்து நடத்தப்பட்டுவருகின்றன. ஆயினும் செலவுக்குத் தகுந்த வருமானத்தைத் தேடிக் கொள்ளமுடியவில்லை.

எனவே இப் பாடசாலைகளுக்கு அரசாங்கத்திடமிருந்து உதவிநன்கொடை பெறுவதற்குச் சில கத்தோலிக்க எம். பி. கள் இரகசியமாக நடவடிக்கையெடுத்து வருகின்றனர். உதவி நன்கொடை வழங்க முடியாவிட்டால், பாடசாலை நடத்துவதற்குத் தற்போதைய நிர்வாகிகளின் உரிமையையும் பாதுகாத்துக்கொண்டு பாடசாலைகளை அரசாங்கத்திடம் கையளிக்கும் ஒரு திட்டமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த முறையின்படி இந்தப் பாடசாலைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்ட பிறகு அதன் நிர்வாகம் ஒரு குழுவிடம் ஒப்படைக்கப்படும். அந்தக்குழுவில் தற்போதைய நிர்வாகிகளும் இடம்பெறுவர்.'

—ஜனசத்திய (23-5-65).

## தமிழிலும்...

'சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்ட ஆங்கில நூல் அனைத்தையும் தமிழிலும் மொழிபெயர்ப்பதற்கு அரசகருமமொழித் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது. கிளிநொச்சி எம். பி. திரு. கே. பி. இரத்தினத்தின் வேண்டுகோளின் மீதே அரசாங்கம் இந்த நடவடிக்கை எடுத்துள்ளது.'

—எத்த (25-5-65)

# சிங்கள இதழ்களில்...

## வட-கிழக்கில்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

வத்தினர் இப்பொறுப்பை ஏற்ருர்கள் இராணுவத்தினர் பொறுப்பேற்ற பின்னர் ஆண்டிற்கு இரண்டொருகள்ளத்தோணிகளே உண்மையில் கைது செய்யப்பட்டிருக்கிருர்கள்.

### நிரந்தர தீர்வு வேண்டும்

மீண்டும் பழைய நிலை தொடருகிறது. இதை ஆரம்பத்திலேயே மட்டம் தட்ட வேண்டும். அன்ஹேல் நிலைமை மீண்டும் மோசமாகலாம்.

பூநகரிச் சம்பவத்தை யிட்டு திவுப் பகுதிப் பிரதிநிதி திரு. வி. நவரத்தினம் நடவடிக்கை யெடுத்து வருகிறுர். இச் சம்பவத்தை யிட்டு விசாரணை நடாத்தும்படி பிரதமரை தந்திமூலம் கேட்டிருக்கிருர் திரு. நவரத்தினம்.

இராணுவத்தினரதும் பொலிசாரினதும் அட்டகாசம் பற்றி வெறுமனே விசாரணை நடாத்திவிட்டால் மட்டும் போதாது. இப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு வேண்டும். இதற்கான முயற்சியில் தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### கிராம அதிகாரிகளை நியமிக்கட்டும்

வட-கிழக்கு மாகாணத்திலிருந்து இராணுவத்தினரையும் கடற் படையினரையும் உடன் வெளியேற்றும்படி தமிழரசுக் கட்சி அரசாங்கத்தைப் பலமாக வற்புறுத்த வேண்டும். கள்ளத்தோணி என்ற பயம் இருந்தால் அதற்கான காவல் பொறுப்பை பொலிசாரிடம் ஒப்படைக்கட்டும். பொலிசாருக்கு துணையாக-முன்பிருந்தது போன்று கரையோர கிராம அதிகாரிகளை அவ்வவ் ஊரிலிருந்து நியமிக்க வேண்டும்.

இது உடன் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை.

தேசிய அரசாங்கம் தமிழ் மக்களின் பூரண ந[illegible]யைப் பெற இது அ[illegible] கூட.

## பேச்சு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டாக்டர் பெரேரா: அது முழு நாடும் சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜு.

திரு. டட்லி சேனநாயக்கா: ஒரு அரசாங்கத்தை உருவாக்க முன்னர் இரு கட்சித் தலைவர்களுக்கிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை அது. எனவே அது அரசாங்க தஸ்தாவேஜு அல்ல மேலும் இதற்கு எவ்வகையிலும் பதிலளிக்க வேண்டிய அமைச்சரீதியான பொறுப்பு எனக்குக் கிடையாது. முழுக்கேள்விக்கும் பதிலளிக்க முடியாது என்று நான் கூறியிருக்க முடியும். அது என் கீழ் உள்ள எந்த இலாகாவும் சம்பந்தப்பட்டதுமல்ல. அவற்றிற்கு பதில் கூறவும் நான் மறுத்திருக்கலாம் இக் கேள்வி ஒழுங்கற்றது.

## யூன் ஐந்து...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"யூன் 5ம் நாள் தமிழ் பேசும் இனத்தின் விடுதலைப் போராட்டம் ஆரம்பமாகிய நாள். யூன் 5 தமிழ் பேசுமினத்தின் உரிமைகளை பறிக்க முனைந்த சட்டங்களில் ஒன்றான சிங்களம் மட்டும் மசோத சமர்ப்பிக்கப்பட்ட நாள். இந்நாள் ஈழம் வாழ் தமிழ் பேசுமினத்தின் வரலாற்றில் ஓர் முக்கிய நாள்ளாகும்.

"இன்று ஏற்பட்டிருக்கும் தேசிய அரசாங்கம் எமக்கு ஓரளவு சாதகமான முறையில் அமைந்திருக்கிறது. நமது இழந்த உரிமைகளில் சில வற்றைறபெறுவதற்கான நல்ல அறிகுறிகள் தென்படுகின்றன. எனவே இந்நாளை எமது விடுதலைப் போராட்டத்திற்கு வலுவூட்டியதியாகிகள் தினமாக அனுட்டிப்போம்.'

யூன் 5ம் திகதியன்று யாழ். கோட்டை மைதானத்தில் தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் தலைமையில் ஓர் மாபெரும் கூட்டம் நடைபெறும். இக் கூட்டத்தில் விடுதலைப் போராட்டத்தில் உயிர் ஈர்ந்த தியாகிகளையும் இன்னல் பல ஏற்றவீரர்களையும் நினைவு கூருவார்கள். [illegible] பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சி மூதவை உறுப்பினர்களும் இக் கூட்டத்தில் உரை நிகழ்த்துவார்கள்.

யூன் 5 திரு. வி. ஏ. கந்தையா நினைவு தினம் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## சாரணர் விழா

'சமயத்தாலும் மொழியாலும், சாதியாலும் நிலைபெற்ற வேற்றுமைகளைக் களைந்தெறிதல் வேண்டுமென்னும் கருத்துத்தோன்றிய இக்காலத்தில் பேடன் பவல் அவர்களின் தத்துவமாகிய கீழ்ப்படிதல் கௌரவித்தல், தன்னல ஒடுக்கல் முதலான பத்துக் கொள்கைகளும் எம் நாட்டின் சகோதரத்துவத்திற்கும் நட்புறவுக்கும் உதவும்' என்று யாழ். இந்துக்கல்லூரி சாரணரின் ஆண்டுவிழாவின் போது சாரண ஆசிரியர் தமது அறிக்கையில் குறிப்பிட்டார்.

இவ்வைபவத்தில் இலங்கைப் பிரதம சாரண ஆணையாளரான திரு. க. சோமசுந்தரம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். அகில இலங்கை ரீதியில் இரண்டு பரிசுகளைப்பெற்ற இந்துக்கல்லூரி சாரணர் குழு மகத்தான பணி செய்கிறதுஎன்றுகுறிப்பிட்டு சாதாரண ஒருமானவனுக்கு சாரணீயம் சிறந்த வழிகாட்டி என்று கூறினர்.

கல்லூரி அதிபர் திரு. சபாரத்தினம் அவர்கள் விழாவுக்குத் தலைமைதாங்கி சாரண ஆசிரியர்களானமுத்துக்குமாரன், சிவசுப்பிரமணியம், சிவநேசராசா ஆகியவர்களின் விடாமுயற்சியைக்குறிப்பிட்டுப்பாராட்டினர்.

முக்கிய அறிவித்தல்

உங்களுக்கோ அல்லது உங்கள் உறவினருக்கோ

துன்பமோ, துயரமோ, துக்கமோ, கரச்சலோ, கஷ்டமோ, கண்டுபிடிக்க முடியாத நோய்களோ, காதல் விவகாரமோ, விவாக இடையூரே, குடும்ப சச்சரவோ, உத்தியோக பிரச்சினையோ, எதிரிகளின் தொல்லையோ

எதுவானுலென்ன

தேவ அருளினுலும், மந்திர பலத்தினுலும் ஞான சக்தியினுலும் நிறைவேற்றித் தர முடியும்.

இரகசியங்கள் வெளியிடப்பட மாட்டாது.

எழுதுங்கள் அல்லது நேரில் சந்தியுங்கள்.

மகா மாந்திரிக கலாநிதி

பி. எம். திசாநாயக்க,

103, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,
மருதானை—கொழும்பு.

கடிதங்கள் கம்பளை விலாசத்திற்கே எழுதப்படவேண்டும்.

ஞாயிறும் திங்களும் இருக்கும் விலாசம்:
அமுத எண்ணெய் தொழிலகம்,
கம்பளை போன் : 454

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரச் சிறுகதை

# செய் நன்றி

நேரம் இரவு எட்டுமணி 'சிறீ முருகன் கபே' ஒளி வெள்ளத்தில் மூழ்கிக்கொண்டிருந்தது. அதன் உரிமையாளர் குமாரவேலு அன்றைய வியாபாரத்தின் லாப நட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

எங்கிருந்தோ வந்த சிறுவன் ஒருவன் அவருக்கு முன்னால் மிகவும் பணிவுடன் வந்துநின்றான்.

'அய்யா! மாத்தையா! மாத்தையா!' என்றுகுரல் கொடுத்தான் சிறுவன்.

'யாரய்யா அது? காசு மாத்த இப்பதானு வாறது?' என்று ஏதோ நினைவில் வினவியபடியே நிமிர்ந்து பார்த்தார் குமாரவேலு. அவர் முன்னே சிறுவன் ஒருவன் பரிதாபத்துடன் நின்று கொண்டிருந்தான்.

'யார் தம்பி நீ? உனக்கு என்ன வேண்டும்?' என்று மிகவும் பரிவுடன் கேட்டார் குமாரவேலு.

'மாத்தையா நான் ஓர் அனாதை! எனக்குஉங்கடை கடையிலே ஏதாவது வேலையிருந்தால் கொடுங்க!' என்று வேண்டினான் சிறுவன்.

'ஏன் தம்பி! நீ எங்கிருந்து வருகிறாய்? உனக்கு அம்மா அப்பா யாருமே இல்லையா?'

'இல்லை! எனக்கு அம்மா அப்பா எல்லாம் சின்னன்லே செத்துப்போயிட்டாங்க. இப்போ நான் தனியத்தான் ரெண்டு நாளாய் எனக்குச் சாப்பாடுகூட இல்லை' என்று கூறியதும் சிறுவனின் கண்கள் நீரைப் பொழிந்தன.

'அழாதே தம்பி! வா! முதலில் சாப்பிடு. பிறகு பேசுவோம்!' என்றுகூறியபடியே சிறுவனை உள்ளே அழைத்துச் சென்று சாப்பாடு கொடுக்கும்படி கூறிவிட்டு தானும் சிறுவனுக் கருகில் அமர்ந்துகொண்டார்.

சிறுவனின் முன்னால் பலவிதமான உணவுகள் வைக்கப்பட்டன. சிறுவனும் உண்ணத்தொடங்கினான்.

'தம்பி! உன்னுடைய பெயர் என்ன?' என்று பேச்சைத் தொடங்கினார் குமாரவேலு.

'குணவர்த்தனா' என்றான் சிறுவன்.

'அடே! பெயரையும், ஆளையும் பார்த்தால் சிங்களப் பெடியன் மாதிரியிருக்கிறாய். ஆனால் நல்லாகத் தமிழ்பேசுகிறாயே!' என்று வியப்புடன் கேட்டார் குமாரவேலு.

'நாங்க இருந்த இடத்திலே அதிகமாகத் தமிழ் ஆக்களும் இருக்கிறாங்க. அதனாலே எனக்கும் நல்லாத் தமிழ்பேச வரும்.' 'ஓகோ! அப்படியா!' சரி. இங்கே உனக்கு என்ன வேலையைத் தருவது?' என்று மோவாயைத் தடவினார் குமாரவேலு.

'நான் செய்யக்கூடிய எந்த வேலையைத் தந்தாலும் என்னால் செய்ய முடியும்!' என்று மிகவும் துணிச்சலாகக் கூறினான் சிறுவன்.

'அடே கெட்டிக்காரனாக இருக்கிறாயே! சரி. நீ இனிமேல் இங்கேயே இருக்கலாம். என்னுடைய வேலைகளை முடித்துக்கொண்டு வந்து நீ என்ன வேலைசெய்யவேண்டுமென்று கூறுகிறேன். இப்போ நல்லாய்ச் சாப்பிடு!' என்று கூறிவிட்டு எழுந்தார் குமாரவேலு.

'மாத்தையா, நீங்க நல்லாயிருப்பீங்க!' என்று வாழ்த்தினான் சிறுவன். குமாரவேலு புன்சிரிப்புடன் அந்த இடத்தை விட்டு அகன்றார்.

அனுராதபுரத்தில் குமாரவேலுவுக்கு பெரும் மதிப்பும் மரியாதையும்இருந்து வந்தது. அந்த நகரத்து மக்கள்அவரைக் 'கொடை வள்ளல் குமாரவேலு' என்றுதான் அழைப்பார்கள். அந்த நகரில் நடக்கும் ஒவ்வொரு நல்ல காரியங்களிலும் கூடிய பங்கு அவருடையதாகத் தான் இருக்கும். இனபேதம் பாராது எல்லோருக்கும் உதவுவார். எத்தனையோ ஏழைமக்களின் வாழ்வை உயர்த்தியிருக்கிறார். குழந்தைகள் என்றால் அவருக்கு உயிர். அவருக்குக் குழந்தைகள் இல்லாததேஅதற்குக் காரணம். அவருடைய மனைவியும் பல வருடங்கட்கு முன்பு மறைந்து விட்டாள். இப்போது சிறீமுருகன் கபே தான் அவருக்கு எல்லாம்.

காலச் சக்கரம் உருண்டு கொண்டிருந்தது. மூன்று வருடங்கள் எப்படியோ முடிந்துவிட்டன. சிறுவன் குணவர்த்தனாவுக்கு இன்று பதினாறு வயது. அன்றைய அவனுடைய மெலிந்த உருவம் மாறி இன்று கட்டான உடலமைப்புடன் விளங்கினான். குமாரவேலுவுக்கு நாற்பத்தெட்டாவது வயது பூர்த்தியாகியது. அவருடைய கட்டான உடல் தளர்ந்து மிகவும் மெலிந்து காணப்பட்டது. தலையிலே சாடையாக நரையும் வழுக்கையும் கலைகாட்டியது.

'சே! என்ன வாழ்வு! மனிதன் பிறக்கிறான். இடையிலே வாழவேண்டுமென்ற அவாவினால் ஏற்படும் தொல்லைகள்தான் எத்தனை? இறுதியில் இறந்து விடுகிறான் இதுதானா மனிதவாழ்வு?' குமாரவேலு இப்படிப்பல தடவைகள் தன்னைத்தான் கேட்டிருக்கிறார்.

ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தியெட்டாம் ஆண்டும் வந்தது. யார் மறந்தாலும் ஈழத்துத் தமிழ் மக்கள் மறந்திருக்க மாட்டார்கள் இந்த அண்டை. ஆம்! இந்த ஆண்டுஎத்தனையோ தமிழ்மக்களின் உயிர்களைப் பலிவாங்கியது; பொருட்களைச் சேதமாக்கியது.

அந்த ஆண்டில் இலங்கையில் இன வேறுபாட்டுணர்ச்சி உச்ச நிலையை அடைந்திருந்தது. ஒன்றும் அறியாத தமிழ்மக்களிற் பலர் சிங்கள வெறியர்களின் சீற்றத்துக்கு ஆளானார்கள். சித்திரவதைகள் செய்யப்பட்டார்கள்; உயிர்கள் பலிவாங்கப்பட்டன. பொருட்கள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டார்கள். நாட்டிலே அமைதி அழிந்து அநியாயங்களும், அக்கிரமங்களும்அதிகரித்தன. ஆட்சியாளர்கள் அமைதியை நிலைநாட்டப் பாடுபட்டார்கள். ஆயினும் ஆர்ப்பாட்டக்காரர்களின்அகங்காரம் அடங்கவில்லை.

அன்றுஇரவுநேரம்எட்டு மணி. குமாரவேலு வழக்கம்போல் அன்றைய லாப நட்டம் பார்ப்பதில் சிந்தனையை விட்டிருந்தார்.

திடீரென்று சிங்களக் காடையர் கூட்டம் ஒன்று சிறீமுருகன் கபேயினுள் நுழைந்தது.

'அடே பனங்கொட்டை சூப்பி! ஓடடா தமிழப்பண்டி!' என்று குமாரவேலுவைப் பார்த்து அரைகுறைத் தமிழில் இரைந்தார்கள் காடையர்கள்.

குமாரவேலு பயமோ சிற்றமோகொள்ளவில்லை. பதிலாகத் திகைப்புக் கொண்டார். 'நன்றி கெட்ட நாய்கள்!' என்று அவருடைய வாய் முணுமுணுத்தது. காடையர்களின் கைகளிலே பயங்கரமான ஆயுதங்கள் தோன்றின. அவர்கள் உள்ளே நுழைந்ததும் 'அப்பன்வீட்டுச் சொத்தை மக்கள் எடுப்பதுபோல்' பொருட்களைக் கொள்ளையடித்துக் கொண்டிருந்தார்கள்.

## 'கலைவாணி'

குமாரவேலுவினால் அளிக்கப்படும் ஊதியத்தினால் உயிர்வாழ்ந்து கொண்டிருந்த சிங்களவர்களும் காடையர்களுடன் சேர்ந்து கொண்டார்கள். ஆனால் குணவர்த்தனா மட்டும் இவர்களுடன் கலக்கவில்லை.

காடையர்களிடம்கெஞ்சிக் கெஞ்சிச் சமாதானப் படுத்தமுயன்றான்.பாவம்! அதற்குப்பதிலாக அவன் சித்திரவதைகள் செய்யப்பட்டான். குமாரவேலுவும் தன்னால் இயன்றமட்டும் சமாதானம் செய்ய முயன்றார். முடிவு? 'கலீர்! கலீர்!' கண்ணாடிப் பொருட்கள் காடையர்களால் நொறுக்கப்பட்டன, குமாரவேலு தன் காதுகள் இரண்டையும் பொத்திக்கொண்டார். காடையர்களின் பிடியினின்றும் தப்பிவந்த குணவர்த்தனா குமாரவேலுவைப் பிடித்திழுத்துக்கொண்டு பின்பக்கமாக ஓடினான். குமாரவேலுவும் இழுபட்டார். பின்னால் வந்ததும் பின்கதவை இழுத்து மூடினான் குணவர்த்தனா.

'மாத்தையா! நீங்க இன்னும் இங்கேயிருந்தா ஒங்கடை உயிரையும் கொண்டு போயிடுவாங்க. நீங்க என்னோடு வாங்க. ஒருவருக்கும் தெரியாமே பொலிஸ் டேசனிலே கொண்டுபோய் விடுறன்' என்று நடுங்கும் குரலிற் கூறினான் குணவர்த்தனா.

'குணவர்த்தனா! இத்தனை காலமும் குழந்தை போல வளர்ந்து வந்த கடையை விட்டு விட்டு என்னை எங்கே வரச்சொல்லுகிறாய்?' குமாரவேலுவின் கண்களிலிருந்து நீர் வழிந்தது.அதைப்பார்த்த குணவர்த்தனாவும் கண் கலங்கினான்.

'மாத்தையா, கடை போனாலும் பிறகு பார்த்துக்கொள்ளலாம். ஆனால் உயிர்போனா என்ன செய்யிறது? வாங்க கெதியாக!' என்று குமாரவேலுவின் கைகளைப் பிடித்து அவசரப்படுத்தினான் குணவர்த்தனா.குமாரவேலு மௌனமாகக் கடையை ஒருதரம் திரும்பிப் பார்த்தார்.எறிகுண்டுகளின் சத்தம் வானைப் பிளந்தது; புகை துர்நாற்றத்துடன்லேசாக வெளிவந்து கொண்டிருந்தது.

'மாத்தையா!கெதியாக வாங்க. வெறிகாரங்கஇங் சேயும் வரப்போறாங்க' என்று கூறியபடியே குமாரவேலுவைப் பிடித்திழுத்தான் குணவர்த்தனா. பாவம்! குமாரவேலு இழுபட்டுக் கொண்டிருந்தார்.

இருவரும் ஒரு தொல்லைகளிலும் அகப்படாமல் ஒருமைல் தூரத்தைக் கடந்து விட்டார்கள். இன்னும் அரைமைல் சென்றால் 'பொலிஸ் ஸ்டேசனை' அடைந்துவிடலாம். குமாரவேலுவுக்கு முன்னால் அவருடையசிந்தனைக் குதிரை ஓடிக் கொண்டிருந்தது.

'எங்கிருந்தோ வந்தான் குணவர்த்தனா. இன்றுஎன் உயிரைக் காப்பாற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறான். அப்படி என்னதான் இந்தச் சிறுவனுக்குச் செய்துவிட்டேன்?......வேலை வேண்டுமென்று கேட்டவனுக்கு வேலை கொடுத்தேன். அவ்வளவுதானே! அந்த நன்றிக்காகவா இன்று இவ்வளவு கஷ்டங்களையும் படுகிறான்?......சிங்களச் சிறுவன் என்றாலும்அவனிடம் சிறந்த பண்பாடு இருக்கிறது. பாவம்! அவனுக்கு என்னால் எத்தனை தொல்லைகள்!......சே! என்ன உலகம்?......இதிலும் பார்க்க எத்தனையோ பேருக்கு பல உதவிகளைச் செய்தும் இன்று மறந்துவிட்டார்களே! ஏன்! என் உப்பைத் தின்று வளர்ந்தவர்களே இன்று என் வாழ்வுக்கு உலைவைக்கப் பார்க்கிறார்கள். ம்......காலம் கெட்டுப்போய்க் கிடக்கிறது. யார் யாரை நோவது...?' குமாரவேலுவின் சிந்தனைக் குதிரை திடீரென்று நின்றது.

வேகத்துடன் நடந்து கொண்டிருந்த குணவர்த்தனா திடீரென்று நின்றான். குமாரவேலுவின் காதுக்குள் எதையோ ரகசியமாகக் கூறினான். பின் இருவரும் பதுங்கிப் பதுங்கி நடந்தார்கள்.

பிரதான வீதியொன்றைக் கடக்கவேண்டும். அங்குமிங்கும் பார்த்தபடியே வீதியைக்கடந்து கொண்டிருந்தார்கள். குணவர்த்தனாவின்இதயம் பயத்தால் விரைவாக வேலைசெய்துகொண்டிருந்தது. திடீரென்று எங்கிருந்தோ வந்த ஒருவன் அவர்களின் முகங்களுக்கு நேரே 'டார்ச்லையிற்'றின் ஒளியைப் பரப்பினான். குமாரவேலுவும் குணவர்த்தனாவும் திகைத்து நின்றார்கள். ஒரு கையில் 'டார்ச்'சையும், மறுகையில் பளபளக்கும் கத்தியொன்றையும் பிடித்துக் கொண்டு அவர்களை நோக்கிவந்தான் அந்தக் காடையன். குணவர்த்தனா உள்ளத்தாலும், உடலாலும் நடுங்கிக்கொண்டிருந்தான்.

'அடேய்! யார்ராநீங்க?' என்று சிங்களமொழியில் கேட்டபடியே அவர்களை நெருங்கினான் காடையன்.

'நீ யார்டா அதைக்கேட்பது?' என்றார் குமாரவேலு கோபத்துடன். காடையன் அவர்களுக்கு அண்மையில் வந்து யாரென்று அவர்களை ஆராய்ந்தான்.

'அடடே! எங்கடை கொமாரவேலு மொதலாளியா? வாங்கோ! வாறுங்கோ! மொதலாளி எங்கே போறது? நாங் கொஞ்சங் சாப்பாடு தாறது. நீங்க சாப்பிடுறது தானே! பண்டித்தமிலு! பனங்கொட்டை சூப்பி! எங்கேடா டைபோறது.' பற்களை நெருமுகிறான்.

குமாரவேலுவிடம்பெயரவில்லை. ஒருமுறைஅந்தக் காடையனுக்கு ஐம்பது ரூபா கடனைக் கொடுத்து அதை அவன் இன்னும் திருப்பித் தராததும் அவருடைய மனக்கண்ணில் மோதியது. காலம் செய்யும் கோலத்தை எண்ணிக் கலங்குகிறார். குணவர்த்தனா காடையனைக் கெஞ்சுகிறான்.

'அடேபண்டி! தப்பிஓட பாக்கிறது! ராஸ்க்கல்!' என்று இரைந்தபடியே கத்தியால் அவருடைய மார்பை நோக்கிக் குத்துகிறான் காடையன். சதக்! அந்தோ! உடலொன்று துடித்தபடியே கீழே வீழ்ந்தது. குமாரவேலு அசையாது நின்றார். குணவர்த்தனாவின் உடல் கீழேதுடிக்கிறது. 'பொலிஸ் ஜீப்' ஒன்றின் இரைச்சல் கேட்டு ஓடி மறைகிறான் காடையன். காடையன் குமாரவேலுவைக் குத்தப் போகும் சமயத்தில் குறுக்கே பாய்ந்த குணவர்த்தனாவின் கழுத்தில் கத்தி ஆழமாகக் குத்தியது. அவனுடைய கழுத்திலிருந்து இரத்தம் குபுக்! குபுக்' என்றுவெளியேறிக் கொண்டிருந்தது. திகைப்பிலிருந்து மீண்ட குமாரவேலு 'அய்யோ குணவர்த்தனா! என்ன காரியம் செய்துவிட்டாய்?' என்று கூறியபடியே அவனைக் தூக்கித் தன் மடிமீதிருந்திக் கண்ணீர் விட்டார். குணவர்த்தனாவின் கண்கள் மகிழ்ச்சியால் ஒளித்துக்கொண்டிருந்தன.

'எங்கிருந்தோ வந்த நீ இன்று என்னுயிருக்காக உன்னுயிரைத் தியாகம் செய்துகொண்டிருக்கிறாயே' என்று விக்கி அழுதார் குமாரவேலு.

(யாவும் கற்பனை)

**சேற்றிலே தான் தாமரை மலர்கிறது! கெட்டவர்களிடையே நல்லிதயம் படைத்தவர்களும் இருக்கத்தான் இருக்கின்றார்கள்! —குமாரவேலுக்காகத் தன்னையே காவு கொடுக்கின்றான் குணவர்த்தனா! ஏன்?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியத் திறனாய்வு

ஆங்கிலத்திலே 'கிரிடிசிசம்' (Criticism) என்பதைத்தான் நாம் தமிழிலே திறனாய்வு என்று சொல்லுகிறோம். திறனாய்வை நாம் ஒருவிதமான தீர்ப்பு என்றுகூடச் சொல்லலாம். எடுத்துக்கொண்ட நூலைப் பற்றி நல்லதையும், கெட்டதையும், நிறைவையும் குறையையும் தரத்தையும் தகுதியையும் நிர்ணயித்துக் கூறுவதே திறனாய்வு எனப்படும். திறனாய்வு செய்வது என்பது எளிதான காரியமல்ல. மேலும் திறனாய்வாளன் எனப்படுபவன் ஒரு குறிப்பிட்ட எழுத்தாளர் எழுதிய ஒருகுறிப்பிட்ட நூலின் கண் உள்ள குறைபாடுகள் நிறைபாடுகள் ஆகியவற்றை நுணுகி ஆராய்ந்து பார்க்குந் திறமை படைத்தவனாக இருக்க வேண்டும். எனவே நாம் இலக்கியத் திறனாய்வு என்று கூறுகையில் அதில் எல்லாமே அடங்கியுள்ளது. அந்த இலக்கியம் உட்பட.

## எது திறனாய்வு?

இலக்கியத்தை எடை போடுவதோ, விரிவாக எழுதுவதோ, விளக்கம் தருவதோ பிரித்துணர்வதோ எவையாக இருந்தாலும் அவை பற்றிய இலக்கியத்தையும் இலக்கியத் திறனாய்வில் சேர்த்தல் வேண்டும்.

கவிதையும், கதையும் நாடகமும் வாழ்வில் நேரடியாக ஈடுபடுகின்றன. திறனாய்வு கவிதை, கதை, நாடகம் ஆகியவற்றில் மட்டுமல்லாமல் திறனாய்விலும்கூட, ஈடுபடுகின்றது.

'இலக்கியக் கலையின் பல்வேறு பாகங்களைக் காட்டும் வாழ்க்கையின் தத்துவத்தை தெள்ளத் தெளியக் காட்டும் படைப்பைத்தான் இறவா இலக்கியம் என்று சொல்லுகிறோம். அதுபோலவே அந்த இறவா இலக்கியத்தையும் அது காட்டும் இலக்கியக் கலைகளின் பல்வேறு பாகங்களையும் தெள்ளத்தெளியக் காட்டும் வல்லாங்கைத் தான் நாம் இலக்கியத் திறனாய்வு என்று பகர்கின்றோம்.'' என்று வில்லியம் என்றி அட்சன் என்பார் தன் இலக்கிய ஆய்வுக்கு ஒரு முன்னுரை (An Introduction to the Study of Literature)'' எனும் நூலின்கண் கூறுகிறார்.

ஆனால் பொதுவாகவே திறனாய்வு என்பதைப் பெரும்பாலோர் வெறும் குறைகளைக் கூறும் கலையென்றே கணித்து விடுகின்றனர். திறனாய்வு அவ்வாறன்று. ஒரு படைப்பில் (எழுத்துதான்) உள்ள குறைகளை மட்டுமல்லாமல் நிறைகளையும், குற்றங்களை மட்டுமல்லாமல் நல்லனவற்றையும் உள்ளதை உள்ளபடியே உரைப்பதுதான் 'திறனாய்வு' எனப்படும். திறனாய்வாளர்களின் வேலையெல்லாம் குற்றம் கண்டு பிடிப்பதே என்று ஒரு தவருன கருத்தும் உலவி வருகிறது அதற்கேற்றாற்போல் சில திறனாய்வாளர்கள் நடந்து கொள்கிறார்கள்.

## எதற்காக திறனாய்வு?

பொதுவாகத் திறனாய்வைப் பற்றி கூறிவரும் குறை ஒன்று உண்டு. நமக்கு ஓர் அசிரியரிடமிருந்து என்ன வேண்டுமென்றால் அவர் தாம். ஆம். அவர் படைப்பைத்தான் நாம் நமக்காகப் படித்து உணரப் போகிறோம். எனவே, எதற்காகத் திறனாய்வாளன் என்ற பெயரில் ஒரு 'பூசாரி' நடுவில் என்றும் கேட்கப்படுகிறது. செகப்பிரியரைப்பற்றி இவர் இதைச் சொல்கிறார், பெர்னார்ட்சாவைப் பற்றி அவர் அதைச் சொல்கிறார், சோமர்செட்மாம், டாப்னே டுமாரியர், எர்னெஸ்ட் ஹெமிங்வே, ஆல்டஸ்அக்ஸ்லி ஆகியோரைப் பற்றி மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைப் படிப்பதை விட, படித்துப் பயனுள்ள நேரத்தைப் பாழாக்குவதை விட அவர்கள் படைத்து விட்டுப் போன இலக்கிய ஒளித்துண்டுகளைப் படிக்கச் செலவிட்டால் என்ன என்றும் கேட்பவர் உளர்.

## திறனாய்வுக்கு திறனாய்வு

நூல்களைப் பற்றி நூல்கள் ஏராளம் உள்ளன. செகப்பிரியர் எழுதியது முப்பத்திநாலு நாடகங்கள் தாம் என்றாலும் அவருடைய நாடகங்களைப் பற்றிய விரிவுரைகளும் விளக்கவுரைகளும் திறனாய்வும் ஒரு நூல் நிலையத்தில் பாதியளவு கொள்ளத்தக்க வண்ணம் எழுதப்பட்டிருக்கின்றன. எனவே இவற்றையெல்லாம் படித்துக் கொண்டிருந்தால் செகப்பிரியரின் நாடகங்களைப் படிப்பது எப்போது என்று கேட்போர் உளர்.

இதில் இன்னொரு வேடிக்கை. ஒரு குறிப்பிட்ட நூலைத் திறனாய்வு செய்திருப்பதை அப்படியே திறனாய்வுசெய்து எழுதிய நூல்களும் இப்போது நிறைய உண்டு. உதாரணமாக செகப்பிரியரின் நாடகங்களைப் பற்றி பென்ஜான்சன் எழுதியிருக்கிறார். ஆனால் செகப்பிரியரின் நாடகங்களைப் பற்றி பென்சான்சன் எழுதியிருப்பதைப் பற்றி விளக்கவுரைகளும் எழுதப்பட்டிருக்கின்றன. இப்படி இருக்கையில் எப்பமக் திறனாய்வு செய்யப்பட்ட மூலகர்த்தாவின் படைப்பைப் படிக்க முடியும் என்று மயங்குவோர் உளர்.

நூலைப்பற்றிய நூல் மட்டுமில்லாமல் நூலைப் பற்றிய நூலும் உண்டு சுருங்கச் சொன்னால் திறனாய்வு நூல் உண்டு! திறனாய்வைப் பற்றிச் சரித்திரங்கள் உண்டு! திறனாய்வாளர்களின் திறமையைப் பற்றிய நூல்கள் உண்டு! இவைகளைப் பற்றிச் சுருக்கமாக எடுத்துச் சொல்லும் பத்திரிகைக் கட்டுரைகள் இருக்கின்றன. இப்படித் திறனாய்வு வளர்ந்து கொண்டிருக்கிறது. உலகப் பெரும் இலக்கியங்களைப் பற்றி இன்னொருவரின் மூலம் அல்ல இன்னொருவரின் இன்னொருவர் மூலமும் தெரிந்து கொள்ளக் கூடிய அளவில் இலக்கியத் திறனாய்வு வளர்ந்திருக்கிறது.

## திறனாய்வின் பயன்

குறிப்பிட்ட இலக்கியத்தைப்பற்றித் திறனாய்வு செய்திருப்பதைப் படிப்பது அந்த இலக்கியத்தையே படிப்பது போலாகாது. அதற்கு ஈடும்ஆகாது. இலக்கியத்தைப் பற்றியும், அதன் ஆசிரியரைப் பற்றியும் நாமே அவற்றைப் படித்து ஆராய்வதுதான் சிறந்தது. அதற்கு இலக்கியத் திறனாய்வு உறுதுணை செய்யும்.

இலக்கியத்தைப் படிப்பது என்னவோ இன்றியமையாததுதான். ஆனால் இலக்கியத் திறனாய்வை வீண் வேலைத்தனம், என்று கூறிவிட முடியாது. இலக்கியத் திறனாய்வு ஓர் அரிய கலை. யாருக்கும் எளிதில் கைவராத கலை. நல்ல திறமையும், தன்மையும் கொண்டவர்களால் தாம் செவ்வனே திறனாய்வு செய்ய இயலும் திறனாய்வுக் கலைக்கு அதற்குரிய மேலிடம் உண்டு.

வாழ்க்கை துரிதமாகிவிடும் இந்த அணுயுகத்தில் நாம் ஆர அமர இலக்கியத்தைப் படித்துப் பின்னர் அதன் திறனாய்வை படிக்க முடிவதில்லை. 'ஒடிஸ்சி' (Odyssey) யைப் படிக்க நேரமும், பொறுமையும்நன்கு இருப்பதில்லை. அதே நேரத்தில் அந்தக் கதையை 'Ancient clssics for English Readers' என்ற நூல் வரிசையில் வந்துள்ளதைப் படிக்கிறோம். இது தவறு; இது கூடாது என்று கூறுவாரும் உளர். ஒரு விதத்தில் பார்த்தால் இது ஒருவராகத் தென்பட்டாலும் கூட மற்றொரு விதத்தில் இதை வரவேற்கவே வேண்டியுள்ளது. 'ஒடிஸ்சி' யைப் படிக்காமல் அதைப் பற்றி ஏதும் தெரியாமல் இருப்பதை விட அதைப் பற்றிய கட்டுரையையோ, அதன் கதைச் சுருக்கத்தையோ படித்து அதைப் பற்றிக் கொஞ்சமாவது தெரிந்து கொள்வது நல்லதல்லவா?

## கூட்டு மொத்தம்

வாழ்வு சிறிது! அதிலும் நமக்கு நூல்படிக்கக் கிடைக்கும் காலம் குறைவு அதிலும் எத்தனையோ வேலைகள். எனவே நாம் ஒவ்வொரு நூலையும் முதலினின்று கடைசி வரையில் படிக்க நேரம் போதாது. நமக்

**இரா. மதனகோபால்**

கென்னவோ இலக்கிய உலகில் ஒளி வீசும் வைரங்களைப் பற்றியும் அவற்றைப் படைத்த அறிஞர்களைப் பற்றியும் அறிந்து கொள்ள ஆவல் ஏற்படும். ஆனால் இந்தக் குறுகிய கால ஓய்வில் அது இயலுமா? இயலாது!

பதினெட்டாம் நூற்றாண்டில் பிரெஞ்சு நாட்டால் பாருக்களிக்கப்பட்ட இலக்கிய மேதை ஈடும் எடுப்பு மற்ற பெரும் அறிஞன் வால்டேர். அவரைப் பற்றி அறிந்துக்கொள்ள நிச்சயமாக எல்லோருக்கும் ஆவல் ஏற்படும். அதுமட்டு மல்லாமல் அவரைப் பற்றிப் பொதுவாகவாவது தெரிந்துகொள்வது இன்றியமையாதது. வால்டேர் யார்? எதற்காக அவர் எழுதினார்? அவர்நோக்கமென்ன? அதில் அவர் வெற்றி பெற்றாரா? சரித்திர ரீதியில் முக்கியத்துவம் பெற்ற அவர் படைப்பு யாது? அவர் படைப்புகளில் தலைசிறந்தது எது? என்பன போன்ற கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டுமானால் அவருடைய படைப்புகள் அத்தனையையும், அவருடைய வாழ்வைப் பற்றிய நூல்களையும் படிக்க வேண்டும். அது ஆகும் காரியமா?

வால்டேர் எழுதி வெளிவந்திருக்கும் நூல்கள் ஏறக்குறைய இருநூற்றி அறுபதுக்குமேல் இருக்கின்றன. அவர் கவிதை, நாடகம், நாடகத் திறனாய்வு, சரித்திரம், வரலாறு, தத்துவக் கதைகள், தத்துவக் கட்டுரைகள் எழுதியுள்ளார். இவற்றையெல்லாம் படிக்க இயலுமா? இயலாது! ஒன்றோ இரண்டோதான் படிக்க இயலும். இதற்கு என்ன செய்வது? இங்குதான் திறனாய்வு உதவிசெய்கிறது.

## தேன் பருகினாற் போல

வால்டேரின் வாழ்க்கை, தத்துவம், படைப்புகள், கொள்கை, இலட்சியம் ஆகியவற்றைப் பற்றிக் கூறுகின்ற பக்கங்களில் லார்டு மோர்லி என்பார் எழுதியுள்ள நூல் ஒன்று உள்ளது. இதைப் படித்தால் போதும் வால்டேரைப் பற்றிய முழு விபரமும் மற்றவையும் கிடைக்கும். வால்டேர் எழுதியுள்ள அத்தனை நூல்களையும் —அவரைப்பற்றிய அத்தனை நூல்களையும் படிக்க எவ்வளவு நாள் ஆகும். எவ்வளவு சக்தி செலவாகும். ஆனால் லார்டு மோர்லேயின் ஒரே நூலைப் படித்தால் வால்டேரின் நூல்களையும் அவரைப்பற்றிய நூல்களையும் படிக்க நேரமும் சக்தியும் செலவிடவேண்டியதில்லை. தேனீக்களைக் கொன்று, தேன் கூட்டை எடுத்துத் தேன் பிழிவதைவிட நமக்காக வேறொருவர் எல்லாவற்றையும் செய்து, தேன் மட்டும் எடுத்துத் தருவதுபோல் திறனாய்வும் இலக்கியத் தேனைத் தருகிறது. இதனால் திறனாய்வுக்கு எதிராகக் கூறப்படும் குறையும் நிறைவாகப் போய்விடுகிறது அல்லவா?

ஆனால் மூல இலக்கியத்தைப் பற்றி முழுவதும் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் அதற்கு அந்தமூல இலக்கியத்தையே படிக்க வேண்டும். ஓர் அமெரிக்கப் பேராசிரியரை ஒரு கல்லூரி மாணவன் வந்து 'செகப்பிரியர் எழுதியிருக்கும் டைமன் ஆப் எதன்ஸ்-என்ற நூலைப் பற்றிய சிறந்த நூல் எது? நான் படிக்க வேண்டும்' என்று கேட்டான். அதற்கு அவர் 'டைமன் ஆப் எதன்சைப்பற்றிய சிறந்த புத்தகம் நீ படிக்க விரும்பினால் டைமன் ஆப் எதன்சையே படி' என்றாராம்.

## குறை

திறனாய்வில் இன்னொரு குறையும் உண்டு. குறிப்பிட்ட எழுத்தாளரைப் பற்றியோ நூலைப் பற்றியோ ஒரு திறனாய்வாளரின் தீர்ப்பு சில சமயங்களில் நம்மை ஆட்கொண்டு விடுவதுண்டு. இவர் எழுத்து நன்றாக இல்லை. அந்த நூல் மோசம் என்று அவர் கூறுவதை நாம் ஒத்துக்கொண்டு விடுவோம். அதுவும் அத் திறனாய்வாளர் மிக மிகத் திறமைசாலியாக, எழுத்து வேந்தனாக இருந்தால் சொல்லவேண்டாம். அவருடைய எழுத்துக்கு எழுத்து நம் கருத்து ஒத்துவிடும். இதனால் நம் தனித்தன்மையும், சொந்தக் கருத்தும் சிதைந்துவிடும். அவர் அந்த நூலில் கண்டதைத்தான் நாமும் காணுவோம். அவர் காணத் தவறிவிட்டதை நாமும் காணத் தவறிவிடுவோம். சுருங்கச் சொன்னால் அவர் கட்டியவழியில்கெட்டியாக நாம் நடப்போம். திறனாய்வின் முக்கியமான பயனை வழிகாட்டுவதைவிட வழியையே அடைத்து விடுவார் இத்தகைய திறனாய்வாளர்.

## எச்சரிக்கை

எனவே திறனாய்வு நூல்களைப் படிப்பதில் மிக மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

திறனாய்வு, வழிகாட்டி நம் விருப்பத்தை தூண்டும் வண்ணம் அமைந்தால்தான் சிறப்பு திறனாய்வில் குறை இருக்கிறதே என்று அதைப் புறக்கணிப்பதோ, பழிப்பதோ அறிவுடைமையாகாது. திறனாய்வு ஒரு சிறந்த கலை.

நம் தமிழகத்தைப் பொறுத்தவரை திறனாய்வு அவ்வளவு வளர்ச்சியடையவில்லை. மேல்நாடு போல் மிகச் சிறந்த முறையில் அண்ணா, டாக்டர் மு.வ. பன்மொழிப் புலவர், மறைமலையடிகள், திரு. வி. க. போன்றவர்கள் திறனாய்வு செய்திருக்கின்றனர். அவர்களைப் போல் திறனாய்வு செய்பவர்கள் இன்னும் பெருக வேண்டும்.

—தென்றல்

---

# மக்கள் குரல்

## ஒற்றுமை சாத்தியமா?

ஒற்றுமை ஒற்றுமைஎன்ற சங்கநாதம் தொனிக்கிறது. வெவ்வேறு கொள்கைகளைக் கொண்ட கட்சிகள் எப்படி ஒற்றுமைப்படுவது? ஒற்றுமை என்பதன் கருத்து ஒரு கட்சியின்கொள்கைகளை மற்றொரு கட்சியின் கொள்கைகளுக்கேற்றவாறு மாற்றி அமைக்கவேண்டும். இதுதான் ஒற்றுமையின்உட்கருத்து. இது சாத்தியமா என்பதைக் கூர்ந்து கவனிப்போம்.

ஒற்றுமை என்பதை ஒற்றை ஆட்சி என்று திரித்துக் கூறப்படுகிறது. ஒரு கட்சிக்கு ஒற்றை ஆட்சியில் நம்பிக்கை. மற்றக்கட்சிக்குப் பிரதேச சுதந்திரத்தில் நம்பிக்கை. இலங்கையில் 100 லட்சம் மக்கள் வதிகின்றனர். இதில் சிறுபான்மையினர் 30 லட்சம்; சிங்கள மக்கள் 70 லட்சம். இந்த முப்பது லட்சம் சிறுபான்மையினரையும் மேலெழுந்தவாரியாகப் பிரித்தால் 10 லட்சம் இலங்கைத் தமிழர், 10லட்சம்இந்தியவம்சாவளியினர் 10 லட்சம் இஸ்லாமியரும் மற்றையோரும்.

ஒற்றையாட்சியின் நோக்கம் (அது சம அந்தஸ்தாக இருந்தாலும் கூட) காலப் போக்கில் இரண்டறக்கலத்தலே, சைவசித்தாந்திகளுக்குத் தெரியும் இரண்டறக் கலந்தல் அல்லதுஅத்வைதம் என்றால் தன்நிலையற்றுஇறைவனுடன் கலத்தலே இது பேரின்ப நிலைக்குகந்தது. ஆனால் நம் அரசியலில் இரண்டறக்கலத்தலால் பெரும்பான்மையினரின் நிலையில் மாற்றம் இருக்காது. சிறுபான்மையினரே தம் நிலையற்றுப்போகவேண்டும். இதற்கு உடன்படின் எங்களுடைய பாரம்பரியத்தில் எமக்குநம்பிக்கைஇல்லை என்பதுதானே. எங்கள் கலைஞர்கள், விற்பன்னர்கள்,குரவர்கள், ஞானிகள் ஒருவரிலும் எமக்கு நம்பிக்கை இல்லை என்பதுதானே கருத்து. தமிழ்ப் பெருமக்கள் இதனை நன்றாக உணரும்படி வேண்டுகின்றேன்.

அடுத்ததாக நாம் பழையனவற்றை நினைவு கூரவேண்டும் அநேகமாக நாம்மறந்து விடுவது வழக்கம். ஆங்கிலத்தில் "Man's memory is short" என்று சொல்லுவார்கள். டீ. எஸ். சேனநாயக்கா ஓர் பெரிய ராஜதந்திரி. தமிழ்ப் பிரதிநிதிகள் எல்லோரும் ஏகோபித்து இலங்கை இந்தியப் பிரசாவுரிமை மசோதாக்களை வன்மையாக எதிர்த்திருந்தால், அந்த மசோதாக்களை ஒருபோதும் பெரிய சேனநாயக்கா கொண்டுவந்திருக்கமாட்டார். ஏனெனில் அவர் பொதுசன அபிப்பிராயத்துக்கும் உலக அபிப்பிராயத்துக்கும் கட்டுப்பட்டவர். இதனால் எந்தத் தொகுதி

(12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டதாம்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கடைகளுக்கு நல்ல வியாபாரம் என்றும் தெரிகிறது.

திருமலை மாவட்டத்தில் உள்ள சில உயர்தர அதிகாரிகள் தேசிய அரசாங்கத்திற்கு விரோதமான நடவடிக்கைகளில் மறைமுகமாக இறங்கியிருப்பதாக நம்பப்படுகிறது. தமிழரசுக் கட்சியை எதிர்க்க வேண்டுமென்ற அவர்களின் தலையாய நோக்கம்தான் இந்த மறைமுக நடவடிக்கைக்குக் காரணம் என்று பேசப்படுகிறது. கடந்த தேர்தலின் போதும் இவர்கள் திரு. மாணிக்கராசா, ஜனுப் முகம்மதலி ஆகியோருக்கு எதிராக மறைமுகமான தீவிர நடவடிக்கை எடுத்தனர் என்று தெரிகிறது.

இவர்களின் ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் திரு. மாணிக்கராசாவும், ஜனுப் முகம்மதலியும் கண்ணோட்டம் செலுத்த வேண்டும். இன்றேல் இவர்கள் இனத்திற்கு எதிரான நடவடிக்கைகளையும் மறைமுகமாகச் செய்யலாம் என்று பொது மக்கள் சிலர் நம்புகிறார்கள்.

## இரவும் பகலும்

(13ம் பக்கத் தொடர்ச்சி)

போகும் வேகத்தில், அவை சரியாகப் புலப்படவில்லை.

ஆலங்குடி சோமுவின் பொருட்செறிவுள்ள பாடல்களுக்கு, இனிமையாக இசை அமைத்துள்ளார் டி. ஆர். பாப்பா. சௌந்தரராசன், சுசீலா, சீர்காழிகோவிந்தராசன் ஆகியோர் அருமையாகப் பாடியுள்ளனர். 'இரவும் வரும்...,' உள்ளத்தின் கதவுகள்...,' 'இறந்தவனைச் சுமந்தவன்...' ஆகிய பாடல்கள் ரசிகர்களின் உள்ளங்களில் நிலைத்து நிற்கும்.

சண்டைகள் மெய்சிலிர்க்கும் வகையில் படமாக்கப்பட்டுள்ளன. ஜெய்சங்கர் தமிழ்த் திரைக்குக் கிடைத்துள்ள புதியவோர் 'சண்டைக் கதாநாயகன்.'

நடனங்களும் கண்ணுக்கு நல்ல விருந்தாகவே அமைந்துள்ளன.

சுருங்கக் கூறின், பொழுது போக்குஅம்சங்கள் நிறைந்த சிறந்த சித்திரம் "இரவும் பகலும்."

—மாறு

## மதுபாலா மீண்டும் நடிக்கிறார்

இந்தி நடிகர் கிஷோர் குமாரின் மனைவி நடிகை மதுபாலா கடந்த நான்கு ஆண்டுகளாக - பைத்தியமாகியதன் காரணமாக-திரையுலகிலிருந்து ஒதுங்கியிருந்தார்.

இப்பொழுது அவர் மீண்டும் நடிக்க ஆரம்பித்துள்ளார். இவரின் வருகையால் மூலையில் முடிங்கிக் கிடந்த மூன்று இந்திப் படங்கள் உயிர்பெற்றுள்ளன.

## மக்கள் குரல்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

யிலும் இந்திய வம்சாவழியினருக்கு வாக்குரிமைஇருக்கும். எந்தச் சிங்கள அபேட்சகரும், தெரிவு நேரங்களில் இவர்கள் வாக்குரிமையைக் கோருவதற்காக அன்பான வார்த்தைகளையே மேடைகளிலும்சரி, வீடுகளிலும்சரி வேறு எங்கே என்றாலும்சரி உபயோகித்திருப்பார்கள். வகுப்புவாதப் பேய் தலை நிமிர்ந்திருக்காது. அடிவாங்கிக் கப்பல்களிலும் வரத் தேவையில்லை. இதைவிடத் தமிழ்மொழி உரிமைகாக்கக் குறைந்தது 35 பிரதிநிதிகளாவது பாராளுமன்றத்திலிருப்பர்.

மூன்றாவதாக 50க்கு 50 பிரதிநிதித்துவம் கோரியசமயத்தில் 60-40 பிரதிநிதித்துவம் திரு. மொலமுரே அவர்களால் அரசாங்கத்தின்சார்பில்கொடுக்கஆயத்தமாக இருப்பதாகச் சொல்லிய நேரத்தில் அந்தவாய்ப்பை ஏற்காது மறுத்தது பெருந்தவறென்பதை யாவரும் அறிவர். 60-40 பிரதிநிதித்துவம் உண்மையில் 50-50 ஆகவே அமைந்திருக்கும்.

இன்னும் தமிழ்ப் பிரதேசங்களில் (அல்லை, கந்தளாய், கல்ஓயா போன்ற இடங்களில்)சிங்களமக்களைக் குடியேற்றியதற்கு அந்தக் காலத்தில் இருந்த பிரதிநிதிகள் எவ்வாறு எதிர்ப்புத் தெரிவித்தார்கள்? 1956ம் ஆண்டில் தமிழரசுக்கட்சியினரின் பிரதிநிதித்துவம் ஓங்கிய பின்னரே இப்பிரவாகம் தடுத்து நிறுத்தப்பட்டதென்பதை எவரும் அறிவர்.

இந்நிலையில்ஒற்றுமைப்படுவது சாத்தியமா? தமிழ்ப் பெருமக்கள் சிந்திப்பார்களா!

அ. கனகராசா.
அளவெட்டி.

## அழகுகூடும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்த்த போது வெண் தாமரைப் பூவில் வாசம் செய்கின்ற கலைமகள் போல் ஒளிர்ந்தாள் அவள். புத்த பகவானின் பாதகமலங்களில் தன் துயர் தீர அழுது பிரார்த்தித்துக் கொண்டு எழுந்த அவளுடைய முகத்தில்ஒரு தெளிவும்,சாந்தியும் சிறைப்பட்டுக் கிடந்தன. அந்தப் புனிதமான தோற்றத்தோடு கணேசனை நோக்கி ஒரு புன்னகையை வீசினள் அவள். நட்சத்திரங்களை வாரி இறைத்தது போன்று மின்னிய அந்த நிறைச் சிரிப்புக்கு என்ன விலை தரலாம் என்று 'வியாபாரம்' பேசியது கணேசனுடைய உள்ளம்.

இந்த வியாபாரச் சூழலைக் கலைத்துக் கொண்டு, கணேசனும், தாமகுமாரியும் நின்ற திசை நோக்கி ஒரு பெண்ணுருவம் நெருங்கிக் கொண்டிருந்தது. அந்தப் பெண்ணுருவம் வேறு யாருடையதுமல்ல; சாட்சாத் டீச்சர் அக்கா இலட்சுமியுடையதுதான்!





அருந்துக
நுவரெலியா
இது சிறந்த பியர் ஏனெனில்



★ 100 வருட வடிமுறை அநுபவத்தைக்கொண்டு தயாரிக்கப்படுகிறது.

★ 8 சர்வதேச பரிசுகளை சுவீகரித்தது.

★ இதன் தனிப்பெரும் சுவையின் ரகசியம், தெளிவான, சுத்த நுவரெலியா நீரின் தன்மையேயாகும்.

மேலும், வடிமுறையில் முதிர்ந்த அநுபவமுடைய நால்வ ரால் உங்களுக்கென விசேஷமாக வடித்தெடுக்கப்பட்டது.தெரிவதற்கு பில்ஸனர், ஏல், லாகர்.

[illegible] லிமிட்டெட்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம். ஜி. ஆர்.
சிவாஜி
ஜெமினி

# கூட்டு ஆதாரமற்றது

## பத்மினி பிக்சர்ஸ் அதிபர் மறுப்பு

தமிழ்த் திரையுலக மூவேந்தர்களான மக்கள் திலகம் எம். ஜீ. ராமச்சந்திரன் நடிகர் திலகம் சிவாஜி கணேசன், காதல் மன்னன் ஜெமினி கணேசன் ஆகிய மூவரும் ஒரே படத்தில் நடிப்பார்களெனவும், அப்படத்தைப் பத்மினி பிக்சர்சார் தயாரிப்பார்களெனவும்வெளியான செய்தியை பத்மினி பிக்சர்சார் அதிபரும் இயக்குனருமான திரு. பி. ஆர். பந்துலு மறுத்துள்ளார்.

திரையுலக முப்பெரும் கதாநாயகர்களான எம். ஜீ. ஆர்,சிவாஜி, ஜெமினி ஆகிய மூவரும் ஒரேபடத்தில் நடிப்பார்களென்றும், அப்படத்தை பத்மினி பிக்சர்சார் தயாரிப்பார்களெனவும் தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் சில செய்தி வெளியிட்டிருந்தன. இதைப் பத்மினி பிக்சர்சார் அதிபரும் பிரபல இயக்குனருமான திரு.பி.ஆர். பந்துலு ஆதாரமற்ற செய்தியென மறுத்துள்ளார்.





திரு. பந்துலு இச்செய்தியையொட்டி சினிமா நிருபர்களிடம் பேசுகையில் எம். ஜீ. ஆர்., சிவாஜி, ஜெமினி ஆகிய மூவரும் பத்மினி பிக்சர்சாரின் ஒரு படத்தில் நடிப்பார்களென்ற செய்தி ஆதாரமற்றது என்றும் இதை அநாவசியமாக, எதையோ மனதில்கொண்டு யாரோ திரித்துவிட்டுள்ளார்கள் என்றும் கூறினராம்.

பத்மினி பிக்சர்சார் வீரபாண்டிய கட்டப்பொம்மன் கப்பலோட்டிய தமிழன்

**நமது சென்னை நிருபர்**

போன்ற வரலாற்றுப் படங்களைத் தயாரித்து வெளியிட்டிருந்ததும் இப்படங்களில் சிவாஜியும், ஜெமினியும் சேர்ந்து நடித்திருந்ததும் சினிமா இரசிகர்கள் அறிந்ததே.

பத்மினி பிக்சர்சார் தொடர்ந்து வெளியிட்ட படங்களில் குறிப்பாக 'கர்ணன்,' 'பலேபாண்டியா' போன்ற படங்களில் சிவாஜி கணேசனே நடித்துவந்துள்ளார். இப்பொழுது பெரும் செலவில் தயாரிக்கும் சண்டைக் காட்சிகள் நிறைந்த பத்மினி பிக்சர்சாரின் படத்தில் முதல்முதலாக எம். ஜீ. ஆர். நடிப்பது தமிழ் சினிமா உலகில் பல வதந்திகளை ஏற்படுத்தியுள்ளது.

பத்மினி பிக்சர்ஸ் அதிபரான திரு. பந்துலுவுக்கும் சிவாஜி கணேசனுக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டிருப்பதாவும், சிவாஜியைப் போட்டு எடுக்கும் படங்கள் நல்ல வசூலைக் கொடுக்காத காரணத்தினலேயே இப்பொழுது எம். ஜீ. ராமச்சந்திரனை புதிதாக ஒப்பந்தம் செய்திருப்பதாகவும் செய்திகள் அடிபடுகின்றன. வதந்திகள் பல அடிபட்ட பொழுதிலும் நல்ல வசூலை மனதில் கொண்டே திரு. பந்துலு எம். ஜீ. ஆரை "ஆயிரத்தில் ஒருவனுக்கு" ஒப்பந்தம் செய்துள்ளார் என்று தெரிகிறது.



எம். ஜீ. ஆர். 'ஆயிரத்தில் ஒருவனில்' நடிப்பதை மனதில்கொண்டே சிலர் மூன்று கதாநாயகர்களும் பத்மினி பிக்சர்சாரின் ஒரே படத்தில் நடிப்பார்கள் என்ற கதையைக் கட்டிவிட்டார்களாம்.

## பச்சை விளக்கு

பொறுப்புணர்ச்சியும், கடமையுணர்ச்சியும் கொண்ட புகையிரதச் சாரதியொருவர் வாழ்க்கையில் அனுபவிக்கும் இன்பதுன்ப நிகழ்ச்சிகளை இயற்கையோடு ஒன்றிய முறையில் சித்தரிக்கும் திரையோவியமே பச்சை விளக்கு.

சத்தியஜித் ரேயுடைய பாணியைச் சிறிதளவு பின்பற்றி இயற்கையோடு இணைந்த முறையில் காட்சிகளை அமைத்து நடிகர்களிடம் நல்ல வேலை வாங்கி



இருக்கிறார் இயக்குனர் பீம்சிங்.

காட்சிகளைப் பெருமளவில் செட்டுக்கு வெளியிலேயே எடுத்திருக்கிறார்கள். இதனால் இரசிகர்கள் ஒவ்வொரு கட்டத்திலும் ஒன்றிய நிலையில் தங்களை மறக்க முடிகிறது.

ஏழைப் புகையிரத ஊழியரின் மகனாகப் பிறந்து, புகையிரதச் சாரதியாகப் பதவியேற்று பெரிய விபத்தொன்றை புத்திசாலித்தனமாகத் தடுத்து, உயர் அதிகாரியின் அன்புக்கு ஆளாகி, ஈற்றில் சுயநலத்துடன் கலந்த பொது நலத்தின் காரணமாக புகையிரத விபத்தைத் தடுக்கும் முயற்சியில் உயிரையே அர்ப்பணிக்கிறார் சிவாஜி கணேசன்.



சிவாஜி கணேசனின் வளர்ப்புத் தங்கையாக வரும் விஜயகுமாரி பலசந்தர்ப்பங்களில்சிவாஜியையே மிஞ்சிவிடுகிறார். அண்ணனின் கனவை நிறைவேற்றி சிறந்த டாக்டராக மாறும் விஜயகுமாரி தன் படிப்பற்ற கணவனுக்கு முன்னால் குடும்பப் பெண்ணாகவே தோன்றி இராசேந்திரனின் உள்ளத்தில் மட்டுமல்ல இரசிகர்களின் உள்ளத்திலும் இடம் பெறுகிறார்.

சௌக்கார் ஜானகிக்கு அதிக வேலையில்லாவிட்டாலும் தனது முத்திரையை ஒருசில இடங்களில் பொறிக்கிறார். ராசனும்—புஸ்பலதாவும் கதையுடன் சம்பந்தமில்லாவிட்டாலும் இரசிகர்களுக்கு தேவைப்படுகிறார்கள்.

எம். ஆர். ராதா தமது வழமையான அட்டகாசங்களைச் செய்கிறார். நாகேஷ் சிரிப்பு நடிகர் மட்டுமல்ல, சிறந்த குணசித்திர நடிகரும் கூட என்று எண்ணத் தோன்றுகிறது.

எஸ். எஸ். ராஜேந்திரனுக்கு அதிக சந்தர்ப்பம் கிடைக்காத போதும் கிடைத்த சந்தர்ப்பத்தை கனகச்சிதமாகப் பயன்படுத்தியுள்ளார். நாகையா ரங்கராவ் இருவரும் முதிர்ந்த நடிகர்களேதான்.

புகையிரதப்பகுதி சம்பந்தப்பட்ட காட்சிகள் நன்றாக அமைந்துள்ளன. படத்தின் பெயரே புகையிரதப் பகுதியுடன் சம்பந்தப்பட்டதாகவே இருக்கிறது.

பல வருடங்களின் பின்னர் சிவாஜியின் தரமான நடிப்புக்கு"பச்சை விளக்கு" ஒரு எடுத்துக் காட்டு.

—பூ

## இரவும் பகலும்

மரகதவல்லிபெரியபணக்காரி. ஒரு நாள் அவளுடைய சொத்தெல்லாம் கொள்ளைக் கூட்டத்தாரால் அபகரிக்கப்படுகிறது. கொள்ளைக் கூட்டத்தைக் கண்டுபிடித்து, தம் குடும்பத்தின் பொருளை மீட்கும் முயற்சியில்இறங்குகிறன் மகன்,ராசசேகரன்.பல தொல்லைகளைத் தாண்டி, அவன் அம்முயற்சியில் வெற்றியடைவது மாத்திரமல்ல, கதையிலுள்ள பல சிக்கல்களை அவிழ்க்கவும் துணை செய்கிறன்.

இப்படத்தில் கதாநாயகன், கதாநாயகி பாத்திரங்களில் தோன்றுபவர்கள் ஜெய்சங்கர், வசந்தா ஆகிய இரு புது முகங்களாவர். மிகத் திறமையாக—இயற்கையாக—நடித்துள்ளார்கள். தனிப்பட்ட முறையில் இவர்கள் இருவருக்கும் இப்படம் ஓர் வெற்றிப் படமாகும்.


அசோகனும், பண்டரிபாயும் தமது பாத்திரங்களை நன்குணர்ந்து நடித்துள்ளார்கள். இப்படத்திலே அசோகன் முதன் முறையாக சொந்தக் குரலில் பாடுகிறர். உண்மையிலேயே, இவ்வளவு இசை ஞானம் இதுவரை எப்படி இவரிடம் மண்டிக் கிடந்தது என்பது ஆச்சரியம் தான்!

நாகேசின் நகைச்சுவை நயமாகவும், கருத்துள்ளதாகவும், சிரிப்பைத் தூண்டுவதாகவும் அமைந்துள்ளது.

கள்வர் தலைவனாக வரும் ராமதாசும், ராசசேகரின் நண்பனாக வரும் பாஸ்கரும், பேபி பவானியும் நன்றாகவே நடித்துள்ளனர்.

கதை விறு விறுப்புடன் செல்கிறது.அலுப்பே தெரியவில்லை. தமிழ்த் திரைக் கதைகளுக்குள்ள சில நம்ப முடியாத அம்சங்கள் இங்கும் உண்டென்றாலும்,கதை

(12-ம் பக்கம் பார்க்க)



**எமது விமர்சனம்**

## சினிமாவில் முத்தம் தேவையா?

சினிமா படங்களில் முத்தம் கொடுக்கலாமா, கூடாதா என்பது குறித்து தில்லி ராஜ்ய சபையில் விவாதிக்கப்பட்டது. அப்பொழுது 'மேற்கத்திய நாட்டு சினிமாப் படங்களில் முத்தக் காட்சிகளை அனுமதிப்பதைப் போல இந்தியப் படங்களிலும் முத்தக் காட்சிகளைக் காட்டலாம்—இதில் ஒன்றும் தப்பில்லை' என்று லோத்நாத் மிஸ்ரா கூறினராம்.

'பொது இடங்களில் முத்தம் கொடுக்கும் பழக்கம் நமது நாடுகளில் கிடையாது. ஆகவே சினிமாவில் முத்தமிடுவதைக் காட்டுவது நம் நாட்டு உண்மை நிலைக்கு முரணனது' என்று குமாரிமேரி கூறினராம்.

தற்போதைய சினிமா தணிக்கை முறை; அதனால் சமுதாயத்தில் ஏற்படும் விளைவுகள் ஆகியவற்றை பரிசிலனை செய்து, தணிக்கை அபிவிருத்தி செய்வதற்கான வழிவகைகளைக் கூறுவதற்கு அறிஞர்கள், கல்வி நிபுணர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் முதலியோர் அடங்கியகுழு ஒன்றை நியமிக்க வேண்டுமென்ற விவாதத்தின்போதேஇக்கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டதாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தில் இ. தொ. கழகம் மலைபோல் வளருகிறது

## மலைநாடு

பொதுத் தேர்தலின்பின்னர் இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் உறுப்பினர் தொகை பெருமளவில் கூடியிருப்பதாகத் தெரிகிறது. அட்டன்மாவட்டத்தில் பெரும் தொகையான உறுப்பினர்களை இ. தொ. கழகம்ஏற்கனவே பெற்றிருந்த போதிலும், இப்பொழுது கழகத்தின் உறுப்பினர் தொகை ஏனைய சங்கங்களின் தொகையைவிட அதிகரித்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

மலையகத்தில் நிலையான சில இலட்சியங்களோடுநேர்மையாகச் செயற்படும் ஒரேயொரு தொழிற் சங்கம் இ. தொ. கழகம் என்றே தெரிகிறது. ஏனைய தொழிற் சங்கங்கள் சந்தர்ப்பவாதத்திற்கு ஏற்ப கொள்கைகளை மாற்றிக்கொள்வதுடன், தொழிலாளர்கள் பிரச்சினைகளில் போதிய கவனம் செலுத்தாது தட்டிக்கழித்தும் வருகின்றன.

### ல. தோ. யூனியன்

தேசியவாதம் பேசிய லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் போன்ற சமசமாசக்கட்சியின் தொழிற்சங்கங்களிலிருந்து மலையகத் தொழிலாளர்கள் தினம் தினம் விலகி வருகிறார்களாம். இச் சங்கத்தின் தலைவர்கள் எழுப்பும் வகுப்புவாதக் கூச்சலே இந்நிலைக்குக் காரணம் என்பது அவர்களுக்கே நன்கு புலனாகிறதாம்.

லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியனில் இருந்து தொழிலாளர்கள் வெளியேறும் வேகத்தைக்கவனித்தால் இன்னும் சில வாரங்களில் இச் சங்கம் கலைக்கப்படலாம் என்றும், அதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லையென்றும் நம்பப்படுகிறது. இச் சங்கம் கலைக்கப்படுவதை சமசமாசத் தலைவர்களும் உள்ளூர விரும்புகிறார்களாம்.

### ஜ. தோ. கா.

ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தேர்தலின் போது கூட்டர சாங்கவாதிகளை ஆதரித்ததைத் தொழிலாளர்கள் சிறிதும் விரும்பவில்லை. தேர்தல் காலத்திலிருந்தே சிறு சிறு தொகையாக தொழிலாளர்கள். இச் சங்கத்திலிருந்து வெளியேறிவருகிறார்களாம்.

சாத்திரி—சிறிமா உடன் படிக்கைபற்றி இச் சங்கம் நிலையான கருத்தை வெளியிடாமை தொழிலாளருக்கு பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்ததுடன், இச் சங்கத்தின் மீது வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளதாம். இச்சங்கத்தினர் தொழிலாளர் பிரச்சினையிலும்போதிய கவனம் செலுத்துவதில்லையாம்.

### இ. தொ. கா.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இரண்டுபட்டு விட்டது. போட்டியும்

**நமது மலையக நிருபர்**

பொருமையும் சாதி, மத அடிப்படையில் தலைதூக்கியுள்ளதாம். இதனால் ஒவ்வொரு தலைவர்களும் ஒவ்வொரு கோணத்தில் சிதறுண்டு நிற்கிறார்களாம்.

இ. தொ. காங்கிரசின் பழம்பெரும் தலைவர்களில் ஒருவரான திரு. வெள்ளையன் பிரிந்துசென்று புதிய சங்கம் அமைத்துள்ளார். இவர்கள் தலைமைப் பதவியைக் காப்பாற்றுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்களாம். தொழிலாளரின் அன்றாடப் பிரச்சினைகளில் இவர்களுக்கு சிறிதும் கவலையில்லை.

சாத்திரி—சிறிமா உடன் படிக்கை பற்றிநீண்டகாலத்தின் பின்னரே இவர்கள் வளவளாமுறையில் தீர்மானம் எடுத்தார்கள். அதுவும் தமிழரசுக்கட்சியும்—இ. தொ. கழகமும் இந்த உடன்பாட்டை எதிர்த்து வேகமான பிரச்சாரத்தில் இறங்கியதை உணர்ந்த பின்னரே அந்த வளவளா முடிவிற்கும் வந்தார்கள். இச்சம்பவங்களும் இவர்கள்மீது தொழிலாளர்களுக்கு இருந்த நம்பிக்கையை படிப்படியாக இழக்கச் செய்துள்ளதாம்.

நிலையான கொள்கையுடன் போட்டி பூசல்கள் இன்றி உண்மையில் தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டு செயற்படும் ஒரேயொரு இயக்கம் இலங்கைத் தொழிலாளர் கழகம்தான். இந்த உண்மையைமலையகத் தமிழ் தொழிலாளர்கள் படிப்படியாக உணர்ந்துவருகிறார்களாம். ஏனைய சங்கங்களுடன் உள்ள தொடர்பை அறுக்கும் தொழிலாளர்கள் இ. தொ. கழகத்தை நாடி வருகிறார்கள். நாளை மலையகத் தமிழ் தொழிலாளரின் ஒரே இயக்கமாக இ. தொ. கழகம் திகழும் என்ற திடமான நம்பிக்கை தோன்றியுள்ளது. மலையகத் தமிழ் தொழிலாளர்களும் தங்கள் துயர் இ. தொ. கழகத்தினுல்தான் துடைக்கப்படும் என்று நம்புகிறார்கள்.

---

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

நேருவுக்கு குடியாட்சியில் அசைக்கமுடியாத நம்பிக்கை. ஆனால் வெறும்பேச்சுரிமை, எழுத்துரிமை, வாக்குரிமை மட்டும்தான் குடியாட்சி என்பதை அவர் ஏற்க மறுத்தார். உண்மையான குடியாட்சி நிலவ வேண்டின் மக்களின் பசி, பிணி தீர்க்கப்பட்டு ஒத்த உரிமையுடன் (சமத்துவத்துடன்) வாழுகின்ற உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதை அவர் அடிக்கடி வலியுறுத்தினர். நேருவின் நீண்டகால அரசியல் அனுபவம், அவரின் ஆளுமை (persona-lity) போன்ற பண்புகள் பல தலைவர்களை அவரின் சொல்லுக்கு கட்டுப்படுத்தியது. அவரின் சில கருத்துக்களோடு மாறுபட்டவர்கள் கூட அவரை எதிர்க்கத்தயங்கினர். மிகச் சிலர்தான் அவர் கருத்தோடு மாறுபட்டு வெளிப்படையாகத் தன் கருத்தை வெளியிட்டு அவரின் தவறுதல்களைச் சுட்டிக்காட்டினர். அவர்களுள் ராஜாஜி, கிரிப்பலானி, ஜெயபிரகாஷ் நாராயனர், அறிஞர் அண்ணுபோன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். எனினும் இவர்களில் இராஜாஜி முதலிடம் வகிக்கிறார்.

நேரு விரும்பியிருந்தால் மக்கள் தன்னிடம் வைத்திருந்த நம்பிக்கையையும், அன்பையும் பயன்படுத்தி ஒரு தனியாள் ஆட்சியாளராக (சர்வாதிகாரியாக) மாறியிருக்கக்கூடும். எனினும் அவரின் உள்ளத்தில் ஊறியிருந்த குடியாட்சி பண்பு சர்வாதிகார முறைக்கு இடம் கொடுக்கவில்லை. அவர் ஓர் ஆலமரம் போல்வளர்ந்து விழுதுவிட்டு எல்லோருக்கும் நிழல் கொடுத்தார். ஆனால்எப்படி அந்த ஆலமரத்தின் கீழ் ஒன்றும் முளைக்க முடியாதோ அதுபோல் அவர் வாழ்ந்த காலத்தில் அவரின்இடத்தை நிரப்பத்தக்க ஒரு தகுதி வாய்ந்த தலைவர் உருவாக முடியவில்லை. நேரு அவர்கள் தான் வாழ்ந்த காலத்திலேயே பொறுப்பு வாய்ந்த ஒரு தலைவரை உருவாக்கி இருப்பின் இந்தியாவில் நன் முறையில் குடியாட்சிவளர வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். இதை நேரு செய்யவில்லை என்று சிலர் கூறும்குறையை நாம் எளிதில் புறக்கணிக்க முடியாது.

# மனிதருள் மாணிக்கம் நேரு

நேரு அவர்கள் இந்தியாவின் நன்மை கருதி எந்தவல்லரசுகளுடனும் சாராது கடைப்பிடித்து வந்த நடுநிலைமைக் கொள்கைவெற்றியளித்துள்ளதா இல்லையா என்பதையிட்டு பலரிடை கருத்து வேறுபாடு உண்டு. ஆனால் அவர் கொள்கை நல்ல கொள்கை என்பதைப் பலரும் ஏற்கின்றனர். உலக அமைதியை அடிக்கடி வலியுறுத்தி ஆயுதப்போரையும் அணுக்குண்டையும்எதிர்த்த நேரு அவர்கள் கைத்திரபாட்டில் கைஷ்மீரில் சரி, கோவாவில் சரி சீனவின் தாக்குதலை எதிர்த்து சரி ஆயுதம் தாங்கிஇந்தியாவை போரிடச் செய்தது முறையா? என்று சிலர் கேட்கும் கேள்வி மிக சிக்கல் நிறைந்த கேள்விதான். உண்மையை ஒப்புக்கொள்ளின் அகிம்சைக் கொள்கைக்கு எல்லைக்கோடு வைத்து ஆயுதம் தாங்கித் தான் ஒரு நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்ற மறக்கமுடியாத உண்மையை நாம் ஏற்றேயாக வேண்டியிருக்கிறது. இதனாற்தான் போலும் அன்பையும், கொல்லாமையையும் வலியுறுத்திய வள்ளுவர்கூட அரசியல் அதிகாரத்தில் படையாட்சியின்மாண்பைப் பேசுகிறார். நேருவின் நடுநிலைமைக் கொள்கை காஷ்மீர் பிரச்சினையைப் பொறுத்தவரை ஒரு சார்புடையதாய் விளங்கி உலகின் கண்டனத்துக்கு ஆளாகியதை யாம் மறப்பதற்கில்லை. இப் பிரச்சினையில் இவரின் ஆத்ம நண்பன் கிருஷ்ணமேனன் இட்டுச் சென்ற தவறான வழியில் இவர் இழுத்துச்செல்லப்பட்டார் என்று கூறின் அது தவறாகாது.

### நேருவின் உள்நாட்டுக் கொள்கை

நேரு உள்நாட்டில் கடைப்பிடித்த கொள்கைகள்பற்றி நாம் ஆராயும்போது அவை பெரும்பாலும் நல்லனவாகவே தோன்றுகின்றன. குறிப்பாக சிறுபான்மை இனங்களுக்கும், சிறுபான்மை மதங்களுக்கும் உரிய பாதுகாப்பை [illegible] தாரண்மையோடு அவர் [illegible] கினர் என்பதை யாம் மறுக்கமுடியாது. குறிப்பாக மதவெறி அவரிடம் மருந்தளவும் தலைகாட்டவில்லை. இந்தியாவுக்கு விடுதலை கிடைக்கின்ற சூழ்நிலை உருவாகிய அந்நாட்களில் அதாவது 1946-47 ம்ஆண்டுகளில் 'இந்தியாவில் எந்தத்தேசிய இனமும் பிரிந்து தன் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவதற்குதான் தடையில்லை என்று கூறியநேரு' அவர்கள் அவர்இறப்பதற்குசிலகாலத்திற்கு முன் 'தி. மு. க. வின் பிரிவினைக் கொள்கையை எதிர்த்து பாராளுமன்றத்தில் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றியது நேருவின் நேர்மைக்கு ஏற்றதா என்பதை வாசகர்கள் சிந்தித்தல் நலம். அதுமட்டுமல்ல'' ஆங்கிலம் இந்தியாவின் ஆட்சி மொழியாக கால வரையறையின்றி, இந்தி பேசாத மக்கள் போதும் என்று சொல்லும் வரை நீடிக்கும் என்று பாராளுமன்றத்திலும் ஏனைய இடங்களிலும் அளித்த உறுதி மொழி உலகறிந்த உறுதி மொழி. இவ் உறுதி மொழியை ஏற்று நம்பிய இந்திபேசாத மக்கள் எண்ணற்றோர். ஆனால் அவர்களின் நம்பிக்கையில் இடி விழுந்ததற்கு அமைய வட இந்திய வகுப்புவாதிகளுக்கு அஞ்சி, இந்தி வெறியர்களுக்கு அடங்கி ''நான் கூறியது உறுதிமொழியும்அன்று! அரசியல் சார்புடையதும் அன்று அது என் சொந்தக் கருத்து'' என்று டில்லி பாராளுமன்றத்தில் உறிய கூற்று நேருவின் வாய்மை பற்றி ஐயுறும் நிலையை உருவாக்கியது.

இதனால் நேருவை ஒரு வகுப்புவாதியென்றோ ஒரு பொய்யுரையாளன் என்றோ நாம் குற்றம்சாட்ட முன்வரவில்லை. ஆனால் அரசியற் காரணங்களுக்காக தன் நேர்மைக்கு இழுக்கு தேடிவிட்டாரே என்று எண்ணி வருந்த இடம் தருகிறது. அதுமட்டுமல்ல பஞ்சாப் சுப்பகோரிக்கையை அடக்கி ஒடுக்குவதற்கு துணை நிற்பவர் பஞ்சாப்பின் முதலமைச்சர் கையிரோன் என்பதற்காக அவர் செய்த [illegible] கையும் நேரு [illegible] தது நேருவுக்கு பெருமைதரவில்லை. மாறாக பலர் நேருமீது குறைகாண இடம் கொடுத்தது.

### நேருவும் தமிழரும்

உலக அரங்கில்அல்ஜிரியாவுக்கும், அங்கோலியாவிற்கும் மற்றும் எத்தனையோ ஆபிரிக்கா ஆசிய நாடுகளின் விடுதலை வேட்கைக்கு மதிப்பளித்து, உரிமைக்குரல் எழுப்பிய பெருமகன் நேரு அவர்கள், ஈழம்வாழ் தமிழ் பேசும் மக்கள் உரிமையிழந்து தவித்த போது குறிப்பாக 1958 இனக்கலவரத்தின் போதாவது எமக்காக உரிமைக்குரல்எழுப்பாவிட்டாலும் ஏதாவது ஆறுதல் மொழியாவது கூறியிருக்க வேண்டும். இலங்கை-இந்தியப் பிரச்சினையில் கூட உழைத்து உழைத்து உருக்குலைந்த மலைநாட்டுத் தமிழரின் வருங்கால வாழ்வுபற்றி அவர் காட்டிய அக்கறை போதாது என்றுதான் சுட்டிக் காட்ட வேண்டும். மேற் கூறிய இக்குறை பாடுகளை நேருவிடம் காணும் போது ''அபாயம் எனபதற்காக உண்மையை அவர் கைவிடப் பிடிக்கத் தயங்கவில்லை. அல்லது வசதிக்காக பொய்மையோடு என்றும் உறவு கொண்டதில்லை.'' என்று இரவீந்திரநாத தாகூர் நேருவுக்கு சூட்டிய புகழ்மாலை எவ்வளவு தூரம் உண்மை என்பதைப் பற்றி எம் சிந்தை மீண்டும் சிந்திக்க வேண்டி இருக்கிறது. இதனாற்தான் சில வேளையில் 1947க்கு முந்திய விடுதலை வீரன் நேருவை விரும்பிய அளவிற்கு ஆட்சியாளர் நேருவை விரும்ப எம் உள்ளம் தயங்குகிறது.

### மாசு படிந்தாலும் மாணிக்கம்தான்

நேருவின் வாழ்வை, பணியை தொகுத்து ஆராயும் போது அவரை நாம் தெய்வீக நிலைக்கு உயர்த்த முடியாது. தெய்வத்தில் அவருக்கு நம்பிக்கை இருந்ததோ இல்லையோ என்பதே ஒரு பெரும் கேள்வியாய் இருக்கையில் தெய்வீக நிலைக்கு உயர்த்தப்படுவதை அவர் என்றும் விரும்பியிருக்கமாட்டார். அவர் அடிப்படையில் ஒரு மனிதர் மனிதரிடம் காணப்படும் குறைகளும், நிறைகளும் அவரிடம் இருந்தன ஆனால், அவர் சாதாரண மனிதர அல்ல சாதாரண மனிதரிடம் இல்லாதபல சிறப்பியல்புகள்-உலகம் வியந்து போற்றும் பல பண்புகள் அவரிடம் குடிகொண்டிருந்தன.

உலகத் தலைவர்கள் பலர் தலை தாழ்த்தி தம் இறுதி வணக்கத்தை செலுத்தியிருக்கமாட்டார்கள், இவை அனைத்தும் சிறிது மாசுபடிந்தாலும் ''மனிதருள் மாணிக்கம் நேரு,'' என்ற மகாத்மாவின் கூற்றை மீண்டும் மெய்ப்பிக்கிறது. ''என்னை யாராவது நினைவு கொள்ள விரும்பின் பின்வருமாறு என்னைப்பற்றி மொழிய வேண்டும் என்று விரும்புகிறேன்'' இந்த மனிதன் உள்ளத் தூய்மையோடு உள்ள நிறைவோடு இந்தியா மீதும் இந்திய மக்கள் மீதும் அன்பு காட்டினன். முறையே இந்திய மக்களும் இந்த மனிதன் மீது காட்டிய பரிவும் பாசமும் பொழிந்த அன்பும் எல்லை கடந்தவை'' என்றுநேரு தன்னைப் பற்றி மொழிந்தவை இந்திய மக்களைப் பொறுத்தவரை இன்னும் உண்மையாகவே இருக்கிறது.

ஏறக்குறைய இதே கருத்தை இராஜாஜி அவர்களும் ஏற்று நேரு மறைந்த போது பின்வருமாறு மொழிந்து உள்ளம் உருகினர்'' என்னைவிட பதினெரு பிராயம் சிறியவர், நாட்டுக்கு என்னைவிட பதினெரு மடங்கு முக்கியமானவர். நாட்டு மக்களின் அன்பை பதினேராயிரம் மடங்கு பெற்றவர். நேரு அவர்கள நம்மை எல்லாம் திடீர் என பிரிந்து சென்றுவிட்ட சோகச்செய்தியைக் கேட்க நான் தொலைபேசி பக்கம் நின்றேன். அதிர்ச்சியைத் தாங்கிக் கொண்டு வாழ்கிறேன்'' இவ் இரங்கல் உரை நேருவின் அரசியற் கொள்கையோடு பெருமளவு மாறுபட்ட இந்தியாவின் முதுபெரும் அரசியற் தலைவரின் கூற்று என்று எண்ணும் போது மாறுபட்ட கருத்துடைய உள்ளத்தில் பெருந்தகை நேரு பெற்ற உயர் விடத்தை எடுத்து காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுகால் மடம்

## எங்கே அவன்?

தென்னங்கீற்றினால் வேயப்பட்ட அந்த நாற்சார் வீட்டின் புறத்திண்ணையில் மாணிக்கச்சித்தப்பா அமர்ந்திருந்தார். வீட்டைச்சுற்றி வளவுமுழுவதும் தென்னை மரங்களே வளர்ந்து காட்சி தந்தன. தென்னம் வட்டுகளிற் குலை குலையாகக் காய்த்துத் தொங்கிய காய்களைப் பார்த்தபடி பலத்த சிந்தனைவயப்பட்டு இருந்தார். அவருடைய தலை, கை, கால் முதலியனவற்றில் துணிக்கட்டுகள் காட்சிதந்தன. முகம் ஓரளவு வீங்கியிருந்தது.

மாணிக்கச்சித்தப்பாவின் வீடு காங்கேசன்துறைக்குச் செல்லும் கல்வீதியினருகே இருந்ததால் வீதியிற் சனப்புழக்கம் அதிகமாயிருப்பதை அவர் அருகே அமர்ந்திருந்த தில்லைகவனித்தான். மாட்டு வண்டிகளின், 'லொட லொட' சத்தத்தினிடையே பெரும் உத்தியோகத்தர்களும், வீரர்களும் குதிரைகளிற் செல்வதையும், குதிரைவண்டிகள் வேகமாகச் செல்வதையும் இவனாற் காணமுடிந்தது.

இருவரிடையேயும் நீண்ட மௌனம். அமைதியைத் தில்லை கலைத்தான்:

"சித்தப்பா...!" என அழைத்தான். சிந்தனை வயப்பட்டிருந்த சித்தப்பா திரும்பினார்.

"என்ன, தில்லை?" என்றவர் தொடர்ந்து, "தில்லை நீ உண்மையிலேயே கெட்டிக்காரன்தான்! அதுசரி நீ எனக்குக் கூறியவற்றை வேறு யாருக்காவது கூறினாயா?" எனக்கேட்டார்.

"ஒருத்தருக்கும் கூறவில்லை, சித்தப்பா!"

"உன் ஐயாவிற்கு?..."

"அவருக்கும் கூறவில்லை!"

"நீ இதை இனி ஒருவருக்கும் கூறிவிடாதே!"

"சரி, சித்தப்பா!... நாளைக்கு உடையார் வீட்டாலே அவர்கள் களவெடுப் போகிறார்களே?...அதைத் தடுக்க முடியாதா, சித்தப்பா?"

சித்தப்பா தூணோடு சாய்ந்து கொண்டார்.

"அதைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்! விதானையாருக்கு இந்த விடயத்தை அறிவித்து எச்சரிக்கை செய்ய வேண்டும்! கலெக்டருக்கு அறிவித்து அவர்களைப் பிடிக்க வீரர்களைத் தருவிக்க வேண்டும்!... தில்லை ... இதை நீ வேறு யாருக்காவது கூறினாயோ, அது எப்படியாவது இந்தக் கள்ளர் கூட்டத்திற்குத் தெரிந்துவிடும்! பின் அவர்கள் வகுத்த திட்டத்தை மாற்றிவிடுவர்கள்...!"

"சித்தப்பா! இந்தக் கள்ளர் கூட்டத்தை இவ்வளவு காலமும் பிடிக்காது ஏன் விட்டு வைத்திருக்கிறீர்கள்?"

சித்தப்பா இதைக் கேட்டுச் சிரித்தார்.

"ஏன் சிரிக்கிறீர்கள், சித்தப்பா?"

"தில்லை! வெள்ளை வேட்டிக் கள்ளர் என்று கேள்விப்பட்டிருக்கிறாயோ?"

"அதென்ன, சித்தப்பா?"

மாணிக்கச்சித்தப்பா சிறிது நேரமௌனத்தின் பின் கூறினார்:

"இந்தக் கள்ளர் இருக்கிறார்களே ... அவர்களுக்குத் துணையாகப் பல பெரிய மனிதர்கள் இருக்கிறார்கள்! பகலிலே இந்தப் பெரிய மனிதர்கள் நல்லவர்களாகக் காட்சி தருவார்கள்! இரவிலே கள்ளருக்கு உதவி செய்து, அவர்கள் களவெடுப்பதில் பங்கு வாங்குவார்கள்! இந்தப் பெரிய மனிதர்களைத்தான் கூறுவது வெள்ளை வேட்டிக் கள்ளர் என்று...

தில்லைக்கு ஒரு சந்தேகம். "ஏன் சித்தப்பா! இந்த வெள்ளை வேட்டிக் கள்ளரையும் பிடித்தால் என்ன?"

**செங்கை ஆழியான்**

"அது அவ்வளவு சுலபமல்ல. தில்லை! அவர்கள் யார்...யார்...என்று தெரியாதே?"

"நீங்கள் முந்தி ஒரு கள்ளர் கூட்டத்தையாவது பிடிக்க வில்லையா?"

"நானா...?"

"இல்லை...உங்கள் கவுண்மேந்து?..."

"மூன்று நான்கு கள்ளர் கூட்டங்களைப் பிடித்திருக்கின்றோம்! ஆவரங்கால் ஆறுமுகம், சுன்னாகத்து மாடன், வேலணை முத்தன் முதலியோர் கூட்டம் பிடிக்கப் பட்டு விட்டது! இப்போது ஆனைக்கோட்டையில் ஒரு கள்ளர் கூட்டம் இருக்கிறது!...அதைத்தான் நீ இராத்திரி கண்டாய்!... அவர்களுக்கு உதவி செய்ய ஒரு சில வெள்ளை வேட்டிக் கள்ளரும் இருக்கிறார்களாம்! அவர்கள் யார் என்று தெரியவில்லை! ... இவர்களை எப்படியாவது பிடிப்பது என்று நான் தீர்மானித்து விட்டேன்..."

"உங்களை அடித்துக் கட்டிப் போட்டதற்காகத் தானே, சித்தப்பா?"

"போடா, போக்கிரி!"

மாணிக்கச்சித்தப்பா எழுந்திருந்தார். தில்லையும் எழுந்தான்.

"தில்லை! சாப்பிட்டு விட்டாயா?"

"சாப்பிட்டிடேன்!... ஆனைக்கோட்டைக் கள்ளருக்குத் தலைவன் யார்?... உங்களுக்குத் தெரியுமா, சித்தப்பா?"

"யாரோ... கந்தப்பன் என்றுதான் செய்தி கிடைத்தது!"

தில்லை சித்தப்பாவிடம் விடை பெற்றுக் கொண்டு வீட்டிற்குத் திரும்பினான். வீட்டிற்கு வந்தவனை அவனுடைய தகப்பன் நின்ற கோலம் திடுக்கிட வைத்தது. நன்றாகக் குடித்துவிட்டு, வெறி மயக்கத்தில், "எங்கே அவன்?" என்று கத்திக் கொண்டிருந்தார். தன்னைத்தான் அப்பா தேடுகிறார் என்பதை அவன் உணர்ந்து கொண்டான். எதற்கும் பயப்படாத அவன் உடல் தந்தையின் குரலால் நடுநடுங்கியது.







# சவகரின் சத்தியப் பாதையில் செல்லுவோம்

நவாலியூர் த. பரமலிங்கம்

'நேரு மாமா' எங்களை பிரிந்து ஓராண்டும் பூர்த்தியாகின்றது. அவரின் பிரிவு சிறுவர்களான எங்களுக்கும், எங்களின் மூத்தவர்களுக்கும் பெரும் இழப்பு மட்டுமன்றி, உலக சமாதானத்திற்கே ஒரு சமாதானப் புறுவை இழந்துவிட்ட இடைவெளி, ஏற்பட்டுள்ளது. வெளிப்படை!

அவரின், பிறந்த தினத்தை இந்தியா முற்றுகக் குழந்தைகள் தினமாகக் கொண்டாடும்போது, பிரிந்த தினத்தையும் நினைவு கூர்ந்து அவரின் பிரிவையுணர்ந்து; எங்களின் போதாத் தன்மையை நொந்துகொள்வோம்.

இந்தியக் காங்கிரசின், பழம் பெரும் தலைவராயிருநது சுதந்திரப் போராட்டத்திலும் பன்முறை சிறை சென்றவரான மோதிலால் நேருவே எங்கள் 'சாச்சா' நேருவின் தந்தை. நேருவின் தந்தை காலத்திலேயே நேருவின் குடும்பம், சுதந்திரப் போராட்டத்தில் பெரும் பங்கு கொண்டிருந்ததை, இதன்மூலமாக நாமுணர்ந்து கொள்ளலாம். நேரு மாமாவின், அன்னைபெயர் சொரூபராணி என்பதாகும். உத்திரப்பிரதேச ராச்சியத்திலுள்ள அலகாபாத் நகரத்தில்தான், எங்கள் நேரு பிறந்தார். 1889-ம் வருடம் நவம்பர் மாதம் 14-ந் திகதியே, நேருமாமா பிறந்த தினமாகும்.

மோதிலால் நேரு, பெரிய கோடீஸ்வரர். ஆதலால் தனது மகன் சவகர்லால் நேருவை இளவயதிலிருந்தே ஐரோப்பா போன்ற மேல் நாடுகளில்கல்விகற்க ஒழுங்கு செய்திருந்தார். மேல். நாடுகளில் கல்விபயின்று, 'பாரிஸ்டர்' பட்டத்தோடு நேரு மாமா தாயகம் திரும்பினார்.

அவர் கல்வி பயின்ற நாட்களிலேயே தான் பெரிய போர்வீரனக வேண்டுமென்றாசைப்பட்டார். "இத்தாலிய வீரன் 'கரிபால்ட்டி' தாய் நாட்டு விடுதலைக்குப் போராடியதைப் போல் நானும் இந்தியாவின் விடுதலைக்காகப் போராடுவேன்." என்றன்று கூறியதைப்போல்தாயகம் திரும்பிப் பற்பல சுதந்திரப்போராட்டங்களில் குதித்து, பன்முறை சிறைசென்று தனது இன்பமான இளமைக்காலத்தைச் சிறையிலேயே கழித்தமை, எத்தகைய தேசத்தியாகம் என்பதை சொல்லித் தெரியவேண்டியதில்லை.

லட்சுமணபுரி, என்றவிடத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மகாநாடொன்றின் மூலமாகத்தான், 'சாச்சா' நேருவுக்கும் மகாத்மா காந்திக்கும் சந்திப்பு ஏற்பட்டு, நட்பு வளர்ந்தது. நேருமாமாவின் பேச்சு வன்மையையும் மகாத்மா கவனித்துப் பாராட்டினர். அதன் மூலமாக, மகாத்மாவோடு சேர்ந்து பல போராட்டங்களில் நேரு உழைத்து வந்தார். அவரின் சேவையையும், நாட்டிற்காக உழைக்கும் துடிப்பையும் கண்ணுற்ற மகாத்மா, நேரு மாமாவை காட்டி "இவரே என் அரசியல் வாரிசு" எனமனமுவந்து கூறி ஏற்றுக்கொண்டாரென்ருல், இதைத்தவிர வேறு சான்றேதும்கூறவேண்டுமா?

இத்தகைய ஓர் தேசத்தியாகியை; சமாதானச் சின்னத்தை இழந்து பாரதநாடு மட்டுமல்லாமல், உலகிலுள்ள அனேக பகுதிகள் சீர்குலைந்து போய்விட்டன. அவர் இந்த உலகைவிட்டு மறைந்தபின்பு, எத்தனையெத்தனையோ இன்னல்கள் பூமி மாதாவை இம்சித்துச் சென்றுள்ளன. அப்போதெல்லாம், நேரு மாமா, இருந்திருந்தால் பூமி மாதாவுக்குச் சிறிது ஆறுதலாய் இருந்திருக்கும். அதற்கு முன்னரே தன் இடைவிடாத; நித்திரையில்லாத உழைப்பிலிருந்து நேரு மாமாவே, ஆறுதல் பெற்று விட்டாரன்றே!

# அழுத நாள்! 'மாமா' மறைந்த நாள்!

-மட்டுநகர் முத்தழகு-

நேருமாமா மறைந்துசென்ற நாளிதுவே!—எங்கள்
நாட்டினரும் ஒளியிழந்த நாளிதுவே!
போர்க்கரங்கள் குவிந்துநின்ற நாளிதுவே!—நாட்டின்
பகைவர்களும் அழுதுநின்ற நாளிதுவே!

மலர்களெல்லாம் மணமிழந்த நாளிதுவே!—உலக
மாணிக்கங்கள் சுடரிழந்த நாளிதுவே!
புலர்ந்துவரும் கதிரவனின் கரங்களெல்லாம்—அன்று
பொழுதுபட்டுச் சேர்ந்திருந்த நாளிதுவே!

பாட்டிசைத்துப் பகலவனை வணங்கிவரும்—சோலைப்
பறவைகளும் மௌனமான நாளிதுவே!
பட்டுமேனிப் பாலகரின் உள்ளமெலாம்—அன்று
புழுவினம்போல் துடித்தழுத நாளிதுவே!

உலகத் தலைவர்களின் வரிசையிலே!—எங்கள்
உத்தமரின் பிரிவுகண்ட நாளிதுவே!
நெல்லுணவால் எம்முயிரைக் காத்துவரும்—பரந்த
நிலங்களெல்லாம் நடுங்கிநின்ற நாளிதுவே!

# புகழை ஏற்றுவோம்

'கல்முனைக் கலைராஜி'

போற்றுவோம் போற்றுவோம்-பாரத
சோதியின் சேவையைப் போற்றுவோம்
ஏற்றுவோம் ஏற்றுவோம்-மாமா
நேருவின் புகழை ஏற்றுவோம்

சூடுவோம் சூடுவோம்-இதய
ரோசாப் புகழ்மாலை சூடுவோம்
பாடுவோம் பாடுவோம்-பண்டிட்
பண்பின் மகத்துவம் பாடுவோம்

நோகுதே நோகுதே-நெஞ்சம்
நேசக் கரங்களை இழந்ததினுல்
சாகுதே சாகுதே-சமுதாயம்
சாத்விகத் தந்தையை இழந்ததினுல்

வாடுதே வாடுதே-ரோசாப் பூ
ராசாவின் மென்கரம் பட்டிடாமல்
தேடுதே தேடுதே-குழந்தை யினம்
தேசத்தின் தந்தையைக் காணுது

வாழ்த்துவோம் வாழ்த்துவோம்-சவகர்
நேருவின் சேவையை வாழ்த்துவோம்
செல்லுவோம் செல்லுவோம் சூழ்ந்து-நேரு
மாமாவின் செம்மையறத்தை நோக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்பொழுது வெற்றிகரமாக நடைபெறுகிறது!

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| செண்ட்ரல் (மருதானை) | ரோஸ் (பாமன் கடை) | ராணி (யாழ்ப்பாணம்) | ஜோதி (திருமலை) | ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) | லிபோடி (அட்டன்) | ஜூன் 5 வெள்ளி முதல் லிபோடி பதுளை |
| தினசரி 2, 6, 9-30 | 2-30, 6-30, 9-30 | | 2-30, 6-30, 9-30 | | | |

நாகேஷின் இணையற்ற நகைச்சுவை!

அருமையான பாடல்கள்!

இசை: டி.ஆர். பாப்பா

தயாரிப்பு: ஜோஸப்தாமஸ்

அசோகன் சொந்தக்குரலில் பாடும் புதுமை!

ஜெய்சங்கர் வசந்தா அசோகன் நாகேஷ் ராமதாஸ் பண்டரிபாய் மற்றும் பலர் நடித்தது



பின்னணி: டி.எம். சௌந்தரராஜன் சுசீலா சீர்காழி கோவிந்தராஜன்

ஒளி: பி.பி. லுக்காஸ்

வசனம்: நாஞ்சில் ராஜப்பா

இனிமையான இசையமைப்பு!

என்டெர்டெயின்மெண்ட் அளிக்கும்

# இரவும்பகலும்

டைரக்ஷன்: ஜோஸப்தளியத்

---

3வது வாரம்

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாசா (வெள்ளவத்தை) | நவா (கொம்பனித்தெரு) |
| வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜயா (மட்டக்களப்பு) | விஜிதா (அட்டன்) |
| தீவொளி (நுவரெலியா) | லட்சுமி (இரத்தினபுரி) | மொர்டேன் (பதுளை) |





சிவாஜி கணேசன்-எஸ். எஸ். ராஜேந்திரன்
விஜயகுமாரி-சௌகார் ஜானகி-நாகேஷ்
எம். ஆர். ராதா-ரங்கராவ்-நாகையா
ராஜன்-புஷ்பலதா
முதலியோர் நடித்த

# பச்சை விளக்கு

டைரக்ஷன்: ஏ. பீம்சிங்

---

## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!


| | | |
|---|---|---|
| எல்பின்ஸ்டன் (மருதானை) | ரொக்சி (வெள்ளவத்தை) | நெல்சன் (திருமலை) |
| அசோகா (புத்தளம்) | இம்பீரியல் (மட்டக்களப்பு) | வேல்ஸ் (கண்டி) |
| வின்சர் (யாழ்ப்பாணம்) | தாஜ்மகால் (மாத்தளை) | றீகல் (நீர்கொழும்பு) |

எம். ஜி. ராமச்சந்திரன்-சரோஜாதேவி-ராஜம்மா
எம். ஆர். ராதா-அசோகன்-சின்னப்பாதேவர்
மற்றும் பலர் நடித்த

தேவர் பிலிம்ஸ் அளிக்கும்

# குடும்பத்தலைவன்

டைரக்ஷன்: திருமுகம்



பின்னணி: சௌந்தரராஜன் சுசீலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1965-ம் வருடம் மே மாதம் 30-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.